21 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HOMELIFE HIGHER STANDARDS
•Independently owned and operated
HomeLife/GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 29, Mississauga
416.321.6969 / 905.712.2666

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 21 | பாலம் 03 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 01, 2011

# இலங்கையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள்

இலங்கையில் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் மார்ச் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது. இலங்கை முழுவதிலும் உள்ள 301 உள்ளூராட்சி சபைகளுக்கு ஒரே நாளில் தேர்தல் நடைபெறுகின்றது. இத்தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல்கள் ஜனவரி மாதம் 27ஆம் திகதி முடிவடைந்தது.

இலங்கையின் பிரதான கட்சிகளான ஆளும் ஐக்கிய சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ்தேசிய கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஆகியன தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன.

உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ்தேசிய கூட்டமைப்பு, தமிழர் விடுதலை கூட்டணி, புளொட், தமிழ்தேசிய விடுதலை கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் ஒன்றாக இணைந்தே போட்டியிடுகிறது குறிப்பிடத்தக்கது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) தமது கட்சி உள்ளூராட்சி தேர்தலில் பங்குபெறமாட்டாது என தெரிவித்துள்ளது.

ஆளும் ஐக்கிய சுதந்திர முன்னணி தனது துணை இராணுவக் குழுவான ஈ.பி.டி.பி கட்சியுடன் சேர்ந்தே யாழ். மாவட்டத்தில் போட்டியிடுகின்றது. ஈ.பி.டி.பி யாழ். மாவட்டத்தில் உள்ள 16 சபைகளுக்கும் வேட்பு மனுத்தாக்கல் செய்யும்போது அதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்று எழுதுவதற்கு பதிலாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு என எழுதியதால் அவர்களது வேட்பு மனுக்கள் யாழ். மாவட்டத்திலுள்ள 16 சபைகளிலும் நிராகரிக்கப்பட்டுள்ளது. இதேபோல் வேட்பு மனுக்கள் நுவரெலியா உட்பட தென் இலங்கையிலும் மேலும் நான்கு வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக ஈ.பி.டி.பி சட்டத்தரணி ரங்கன் தேவராஜன் தெரிவிக்கையில் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் பெயர் ஆங்கிலத்தில் சரியாகவே எழுதப்பட்டிருந்தபோதும் தமிழில் தவறாக எழுதப்பட்டுள்ள காரணம் காட்டியே யாழ். மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் அந்த வேட்பு மனுக்களை ஏற்க மறுத்துள்ளார். தேர்தல் சட்டத்தின்படி இதுபோன்ற காரணங்களை காட்டி உதவித்தேர்தல் ஆணையாளர் வேட்பு மனுவை நிராகரிக்க முடியாது. விரைவில் இதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

யாழ். மாவட்டத்தில் 13 பிரதேசசபைகள் மற்றும் 3 நகரசபைகளை உள்ளடக்கிய 16 சபைகளுக்கு தேர்தல் நடைபெறுகின்றது. இதில் நாலு கட்சிகளும் ஆறு சுயேட்சை வேட்பாளர்களும் போட்டியிடுகின்றார்கள். யாழ். மாவட்டத்தில் 63 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட போதிலும் 20 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பிரதேச சபைக்கான தேர்தல் நடைபெறுகின்றது. இதில் 15 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட போதிலும் 7 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

## நாடு கடந்த தமிழீழ அரசுவழங்கும் தமிழீழ தேசிய அட்டை

ஈழத்தில் பிறந்தோம். ஈழத்தில் வாழ்ந்தோம் என்ற எமது வாழ்வுமுறை மாறி நாம் ஈழநாட்டைச் சேர்ந்தவர்கள், எம் மூதாதையர் ஈழத்திலிருந்து வந்த மறத் தமிழர்கள் என்பதனை எடுத்துக் காட்டும் அத்தாட்சிப் பத்திரம்தான் இந்த தமிழீழ தேசிய அட்டை. காலத்தின் மாற்றத்தால், எமது தேவையின் அடிப்படையில் உருவாக்கப் பட்டதுதான் இந்த மாசில்லா மஞ்சள் நிறப் பத்திரம். யாருக்கும் எமது அடிபணியா வீரத்தையும், மேம்பட்ட கலாச்சாரத்தையும் எடுத்தியம்பும் வடிவிலானதுதான் இந்த வரலாற்று ஓவியம். எமது பூர்வீகத் தொடர்பைப் பிரதிபலிக்கும் ஆவணம்.




வாழ்க்கை பூராவும் பாவிக்கவல்ல தேசிய அட்டைக்கான செலவு $15.00 மட்டுமே. நாம் காணும் உலகத்தையும், நாம் பூஜிக்கும் அந்த வரலாற்று நாயகர்களையும், அன்பே உருவான எம் உறவுகளையும், ஈடில்லா தமிழ் ஈழத்தையும் எம்முடன் இணைக்கும் பத்திரம்தானே இந்த அலங்கார ஆவணம். தலைமுறை, தலைமுறையாக நாமும் எமது சந்ததியும் பெருமையுடன் பேணிக்காக்க வேண்டிய அளப்பெரிய சொத்தல்லவா இந்த சர்வதேச சாதனம். எமது வாழ்க்கை பூராவும் பாவிக்கவல்ல

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர் (Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Golden Store Fixtures 905-565-6555
Friend for your Business 1 877-565-6554
Store Planning, Design & Installation
» Acrylics
» Counter Top Displays
» Gift Bags & Ribbons
» Glass Displays
» Grid Panels & Accessories
» Mannequins
» Pegboard & Accessory
» Racks
» Shopping Cart & Baskets
» Showcases
» Sign & Sign Holders
» Slatwall & Accessories
» Steel Shelving
» Wood Displays
And Much More..........
355 Admiral Blvd, Unit #5 Mississauga, Ont, L5T2N1
www.goldenstorefixtures.com
sales@goldenstorefixtures.com

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# இலங்கையில்

இந்தச் சாட்சிப் பத்திரத்தை, காலதாமதமின்றி ஒவ்வொரு ஈழத் தமிழரும், குழந்தைகள் உட்பட, தவறாது பெற்றுக்கொள்ள வேண்டும். எமது எண்ணிக்கை, உலகை மீண்டும் விளிப்படைய வைக்க வேண்டும். இதுகண்டு, நலிந்துபோன எம் உறவுகளும் பெருமையுடன் நிமிர்ந்து நடக்க வேண்டும். இதுதானே நாம் வேண்டுவதும், விரும்புவதும், ஆசைப்படுவதும். இறைமையும், சுதந்திரமும் கொண்ட ஓர் தனிநாட்டை அமைக்க உதவும் வகையில் இந்த தமிழீழ தேசிய அட்டையைப் பெற்றுக்கொள்வோர் தொகையும் அமைய உங்கள் அன்பு நிறைந்த ஆசியையும், அளவில்லா ஆதரவையும் வேண்டி நிற்கிறோம்.

விண்ணப்பப்படிவம் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல்: tencard.application@tgte.org

நேரடித் தொடர்புகளுக்கு: கனடா

அமைச்சர் ராம் சிவலிங்கம் r.sivalingam@tgte.org, Tel:416 829 1362

அமைச்சர் சாம் சங்கரசிவம் sam.sangar@tgte.org

அமைச்சர் கற்பனா நாகேந்திரா katpana.n@tgte.org

அமைச்சர் ரத்னா முத்துக்குமாரசுவாமி m.ratna@tgte.org

பிரித்தானியா

அமைச்சர் ருத்திராபதி சேகர் r.sekar@tgte.org, Tel: 044 780 122 7038

அமைச்சர் தணிகாசலம் தயாபரன் t.thayaparan@tgte.org

அமைச்சர் டிலக்சன் மொரிஸ் d.morris@tgte.org

அமைச்சர் பாலாம்பிகை முருகதாஸ் balambihai.m@tgte.org

பிரான்ஸ்

அமைச்சர் நாகலிங்கம் பாலச்சந்திரன் n.balachandran@tgte.org, Tel: 033 66 236 5007

திரு.மகிந்தன் mahinthan@hotmail.fr

சுவிஸ்

திரு.தயானந்த் thaya14@hotmail.com

அமெரிக்கா

திரு.சண் சுந்தரம் shan@sundaram-art.com, Tel: 267 229 9211

அவுஸ்திரேலியா

அமைச்சர் இளையதம்பி செல்வநாதன் e.selvanathan@tgte.org

துணை அமைச்சர் கனகேந்திரம் மாணிக்கவாசகர் manicka.vasagar@tgte.org

யேர்மனியும் மற்றைய நாடுகளும்

துணை அமைச்சர் நடராஜா ராஜேந்திரா r.nadarajah@tgte.org

நாடு கடந்த தமிழீழ அரசு ஓர் தனித்துவமான அரசியல் முன்னெடுப்பு. இதுவரை எங்குமே அமைக்கப்படாத ஓர் புதுமைமிக்க அரசாங்கம். புலம்பெயர் அரசைவிட பலமடங்கு சாத்தியமானதும், 21ம் நூற்றாண்டிற்கு ஏற்ற ஓர் புதிய அரசியல் நகர்வு. உலகில் எந்த இனத்திற்குமே கிடைக்காத, கிடைக்கமுடியாத ஓர் அரிய வாய்ப்பை அந்த ஆண்டவன் எமக்குத் தந்திருக்கிறார்.

மேலதிக தொடர்புகளுக்கு: pmo@tgte.org அல்லது Skype ID : tgte-sec

கலாநிதி ராம் சிவலிங்கம்

பிரதிப் பிரதமர்,

நாடுகடந்த தமிழீழ அரசு

# தெற்கு சூடான் நாடு கடந்த தமிழ் ஈழ அரசுக்கு அழைப்பு

தெற்கு சூடான் விடுதலை நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு நாடு கடந்த தமிழ் ஈழ அரசுக்கு அழைப்பு வந்துள்ளதாக அதன் பிரதமர் அலுவலகம் கூறியுள்ளது. இதுகுறித்து நாடு கடந்த தமிழ் ஈழ அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தனிநாட்டுக்கான வாக்கெடுப்பு முடிவடைந்தவுடன் நாடு கடந்த தமிழ் ஈழ அரசை தெற்கு சூடானுக்கு வருமாறு சூடான் மக்கள் விடுதலை இயக்கம் (elfq) அழைப்பு விடுத்துள்ளது. கொண்டாட்டங்களில் பங்குகொள்ளவும், பொருத்தமான துறைகளில் தெற்கு சூடானின் மேம்பாட்டுக்குத் தமிழர் தரப்பு வல்லுநர்களின் உதவி வழங்கல் பற்றி ஆராய்வதற்காகவும் நாடு கடந்த தமிழ் ஈழ அரசு பிரதிநிதிகள் குழு ஒன்றை அனுப்புகிறது. சூடான் மக்கள் விடுதலை இயக்கத்தின் விருந்தினர்களாக வருகைதரும் நாடு கடந்த தமிழ் ஈழ அரசுப் பிரதிநிதிகள் குழுவினை சூடான் மக்கள் விடுதலை இயக்கத்தின் உயர் அதிகாரிகள் வரவேற்பார்கள். நாடு கடந்த தமிழ் ஈழ அரசு பிரதிநிதிகள் ஏனைய நாடுகளின் தலைவர் களையும் அங்கு சந்திக்கவுள்ளார்கள்.

நாடு கடந்த தமிழ் ஈழ அரசின் பிரதமர் உருத்திரகுமாரன் இதுகுறித்து வெளியிட்ட அறிக்கையில் 'நாடு கடந்த தமிழ் ஈழ அரசு அங்கு அழைக்கப்பட்டிருப்பது, இந்த அரசுக்கான அங்கீகாரம் மட்டுமன்றி ஈழ விடுதலைப் போராட்டத்துக்கான அங்கீகாரமும் ஆகும். தெற்கு சூடானியரின் விடுதலையைக் கொண்டாடுமாறு ஈழத் தமிழ் மக்களை நாடு கடந்த தமிழ் ஈழ அரசு கேட்டுக்கொள்கிறது. விடுதலை பெற்ற தெற்கு சூடானியரின் மகிழ்ச்சியை ஈழத்தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்வதுடன், அந்த மகிழ்வில் இணைந்தும் கொள்கிறார்கள்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

தெற்கு சூடானில் வாக்கெடுப்பு ஆரம்பித்த தினத்தன்று அமெரிக்கா அதிபர் ஒபாமா 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையில், 'இலட்சக்கணக்கான சூடானிய மக்கள் தமது விதியைத் தீர்மானிக்கும் வாக்கெடுப்புக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்' எனக் குறிப்பிட்டிருந்தார். ஒபாமாவின் இச்செய்தியை வரவேற்கும் நாடு கடந்த தமிழ் ஈழ அரசு ஈழத்தமிழர்களும் தமது விதியைத் தாமே தீர்மானித்துக் கொள்ளும் வாய்ப்பினைச் சர்வதேச சமூகம் அதேபோல் வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறது.

# நாடு கடந்த தமிழீழ அரசின் தமிழீழ அட்டை

நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் திரு. விசுவநாதன் உருத்திரகுமாரன் தலைமையிலான நாடுகடந்த தமிழீழ அரசு புலம் பெயர் தமிழ் மக்களுக்கான அடையாள அட்டை ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. இதற்கான அறிமுக நிகழ்வில் வி. உருத்திரகுமாரன் பேசும்போது பின்வரும் கருத்துக்களை தெரிவித்தார். தமிழீழ தேசியத் தலைவர் இப்படியான ஓர் அடையாள அட்டையை ஏற்கெனவே அறிமுகம் செய்துள்ளார், அதற்கு அமைவாக இப்படியோர் அட்டையை அறிமுகம் செய்கிறோம். இந்தியாவை சேர்ந்த அரச அறிவியலாளர் சிலர் நாடுகடந்த அரசுக்கான கடவுச்சீட்டை கொண்டு வரும்படி தெரிவித்ததாகவும் ஆனால் தாம் கடவுச்சீட்டை அறிமுகம் செய்யாது தற்போதைக்கு அடையாள அட்டையை அறிமுகம் செய்கிறோம். நாம் தமிழீழ மக்கள், தனியான அரசை விரும்புகிறோம். ஆகவே அந்த விருப்பத்தின் ஓரங்கமாக இது அமைகிறது, தமிழ் தேசியத்தின் அடையாளமாகவும் இருக்கும்.

# எரிக் சொல்கெய்ம் புலம்பெயர் தமிழருடன் பேசத்தயார்

புலம் பெயர் தமிழருடன் பேச்சுக்களை நடத்தி புதிய தீர்வு செயற்பாட்டாளராக தொழிற்பட தயார் என்று எரிக் சொல்கெய்ம் தெரிவித்துள்ளார். ஆங்கில இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேகச் செவ்வி யில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். அமைதிப் பேச்சுக்களின் போது தான் எந்த ஒரு தரப்புக்கும் பக்கச்சார்பாக நடந்து கொள்ளவில்லை என்பதை அண்மையில் வெளியான 'விக்கிலீக்ஸ்' தகவல்கள் உறுதிப்படுத்தி உள்ளன என்றும் சொல் ஹெய்ம் தெரிவித்தார்.

இலங்கையில் தனிநாடு ஒன்றை உருவாக்குவதற்கான கருத்தியலை சொல்ஹெய்ம் அந்தச் செவ்வியில் நிராகரித்தார். புலம்பெயர் தமிழ்ச் சமூகம் ஜனநாயக வழிமுறைகள் ஊடாகத் தமது இலக்கை அடைவதற்கு முயல வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கினர். இந்தப் பாதிப்புக்களுக்கு இரு தரப்பினரும் பொறுப்புக் கூறவேண்டும். இலங்கையின் அபிவிருத்தியில் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க நோர்வே விரும்புகிறது என்றார் சொல்ஹெய்ம்.

## வாசகர் எண்ணம்

'நினைவாற்றல்' (Memmory-2 )

மேல் குறிப்பிட்ட கட்டுரையை வாசித்து மேலும் நல்ல பயனைப் பெற்றேன். மயிண்ட் மப் (Mind Map Figure 01 ) மிகவும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிந்தது. மயிண்ட் மப் (Mind Map Figure 02) கையினால் எழுதப்பட்ட காரணத்தினால் போலும் விளங்கிக் கொள்ள சற்று நேரம் கூட எடுத்தது போலும். ஆனாலும் கட்டுரை ஆசிரியர் மைண்ட் மப் மூலம் கொடுத்திருந்த விளக்கங்கள் மிக நேர்த்தியாக அமைந்திருந்தது. அதுமட்டுமல்ல எதையும் நினைவில் வைத்திருப்பதற்கு காட்டிய இந்த வழி முறையை, உதாரணத்துக்குச் சொல்வதாகில், காதைச் சுற்றி மூக்கைத் தொடாது, நேரடியாக மூக்கைத் தொடுமாப்போல், ஞாபகத்திற்கு எதையும் விரைவில் கொண்டுவர சுலபமான வழியாக இருப்பதாக உணர்ந்து மன நிறைவு அடைந்தேன். கட்டுரை ஆசிரியர் அகணி அவர்களுக்கும், பயன் உள்ள விசயங்களை பிரசுரிக்கும் விளம்பரத்திற்கும் மனம் நிறைந்த என் பாராட்டுக்கள்.

நன்றி

த. பத்மநாதன்

sarasu75@hotmail.com

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

| | |
|---|---|
| **பதிப்பாளர்:** | ராஜா மகேந்திரன் |
| **பத்திரிகை ஆசிரியர்:** | சத்தியா மகேந்திரன் |
| **ஊடகப்பொறுப்பாளர்:** | விஜே பாலன் |
| **தட்டச்சு:** | கலா |
| **அலுவலக முகாமையாளர்:** | நிலானி |
| **பதிப்பு:** | *Can Media Publishing Inc.* |

***Vlambaram Publications Inc.***

***GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA***

***TEL: 416-282-8059*** ***FAX: 416-282-4978***

***e-mail: Vlambaram@sympatico.ca*** ***Web: www.vlambaram.com***

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*

*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*

*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# வாழத்துடிக்கும் வன்னி

## - ஒரு நேரடி ரிப்போர்ட் - பாகம் 15

- செல்வரட்ணம் சிறிதரன் -

எப்படியாவது, புதுக்குடியிருப்பு பகுதியை போய் பார்க்க வேண்டும் என்று புளியம்பொக்கணையில் இருந்து புறப்பட்டது நாடாளுமன்றக் குழு. பரந்தனில் இருந்து முல்லைத்தீவுக்குச் செல்கின்ற ஏ35 வீதியில் விசுவமடு வரையிலுமே பொதுமக்கள் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தது. அதற்கு அப்பால் செல்ல முடியாது என்று சொன்னார்கள். இதனால் புதுக்குடியிருப்புக் குப் போக முடியுமா என்பது சந்தேகமாக இருந்தது.

இருந்தாலும், தர்மபுரம் மகாவித்தியாலயத்திற்குச் சென்றிருந்த போது, மீள்குடியேற்றத்திற்காக அழைத்து வரப்பட்டிருந்தவர்களைப் பார்ப்பதற்கும் நிலைமைகளை கண்காணிப்பதற்குமாக அந்தப் பிரதேசத்திற்குப் பொறுப்பான இராணுவ உயரதிகாரி அங்கு வந்திருந்தார். அவரைச் சந்தித்துப் பேசிய தலைவர் ஆர்.சம்பந்தன் நாடாளுமன்றக் குழு முல்லைத்தீவுக்குச் செல்ல விரும்புகின்றது எனச் சொன்னார்.

முல்லைத்தீவுக்குப் போக இன்னும் இந்த வீதியில் அனுமதிக்கவில்லை. புதுக்குடியிருப்பு வரையிலும் நீங்கள் போகலாம். அதற்கான ஏற்பாட்டை நான் செய்கிறேன். உரிய அதிகாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கிறேன் என அந்த இராணுவ உயரதிகாரி தெரிவித்திருந்தார்.

அவரது உறுதிமொழி அளித்திருந்த நம்பிக்கையில் நாடாளுமன்றக்குழுவின் வாகனத் தொடரணி, ஏ35 வீதிக்குச் சென்று புதுக்குடியிருப்பை நோக்கித் திரும்பியது. வழியில் வீதியோரங்களில் அழிவுகள் அகோரமாக இருந்தன.

பரந்தன் சந்தி ஏ9 வீதியில் இருக்கின்றது. இங்கிருந்து, ஏ35 வீதி முல்லைத்தீவுக்குப் பிரிந்து செல்கின்றது. முல்லைத்தீவுக்கான தூரம் 54 கிலோ மீற்றர். இந்த வீதி முல்லைத்தீவிலிருந்து நாயாறு வரை செல்கின்றது. இறுதிச் சண்டைக்காலத்திலும், அதற்கு முன்னரும் இந்த வீதி கேந்திர முக்கியத்துவம் பெற்றிருந்தது.

மன்னார் மாவட்டம் மடு பிரதேசத்தில் தொடங்கிய இடப்பெயர்வு படிப்படியாக வன்னிப்பிரதேசத்து மக்களை இறுதிக்கட்ட யுத்தத்தின் போது தர்மபுரம், கண்டாவளை, விசுவமடு, ரெட்பானா, சுதந்திரபுரம், இருட்டுமடு என புதுக்குடியிருப்பு வரையில் இட்டுச் சென்றிருந்தது. பின்னர் அங்கிருந்து முள்ளிவாய்க்காலுக்குத் தள்ளிச் சென்றது.

முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் என நகர்ந்த இடப்பெயர்வு, மூன்று லட்சம் மக்களை வவுனியா செட்டிகுளம் மனிக்பாம் முகாமில் கொண்டு சென்று விட்டது. இதனால், மக்கள் நடமாட்டமும், நெரிசல் மிக்க வாகனப் போக்குவரத்துமாக 24 மணிநேரமும் உயிரோட்டம் மிக்கதாக இந்த வீதி திகழ்ந்தது. அதேவேளை, விடுதலைப்



> "ஜப்பானின் ஹிரோஷிமா நாகாசியில் உலக யுத்தத்தின் போது ஏற்பட்ட போரழிவை ஒத்ததாகவே இந்த அழிவுக்காட்சிகள் இருக்கின்றன. திரும்பிய பக்கமெல்லாம் தெரிந்த அழிவுகள், மனதில் தீராத சோகத்தை ஏற்படுத்துகின்றது" என தனது உணர்வுகளை வெளிப்படுத்தினார் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன்."

புலிகளின் இலக்குகள், தளங்களை நோக்கி முன்னேறிச் சென்ற இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த கடும் எறி-கணை மோதல்கள் காரணமாக சாவுகள் மலிந்த மரண வீதிப்பிரதேசத்து வீதியாகவும் இது திகழ்ந்தது.

பரந்தன் சந்தியில் இருந்து விசுவமடு, ரெட்பானா வரையில் இந்த வீதியில் மக்கள் நடமாட்டம் இருக்கின்றது. அதற்கு அப்பால், யுத்த மோதல்களின் ஒரு சாட்சிக்களமாக, இப்போது அது வெறிச்சோடி கிடக்கின்றது.

தர்மபுரத்திற்கு அடுத்தது விசுவமடு. அதையடுத்தது ரெட்பானா. விசுவமடு, ரெட்பான பகுதியில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் நிர்வாக எல்லைகள் சந்திக்கின்றன. வீதியின் இடது பக்கம் கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்டது. வலது பக்கம் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்டது.

இங்கு கிளிநொச்சி மாவட்டப் பகுதிகளில் மாத்திரமே மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன. முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட விசுவமடு, ரெட்பானா பகுதிகளில் இன்னும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

வீதி அகன்று கிடந்தது. வீதியோரங்களில் வீடுகள் கடைகளைக் காணவில்லை. எல்லாம் அழிந்து கிடந்தன. பன்னிரண்டாம் கட்டை – ரெட்பானாவில் வீதியை மறித்து கேட் ஒன்றை அமைத்து இராணுவத்தினர் தடை முகாம் அமைத்திருந்தார்கள். கேட் அருகில் சென்று வாகனத்தொடரணி நின்றது.

நாடாளுமன்றக் குழுவினருடன் வந்திருந்த அவர்களின் மெய்க்காவலர்கள் இருவர் இறங்கிச் சென்று வந்திருப்பது யார் அங்கு கடமையில் இருந்த இராணுவத்தினரிடம் சொன்னார்கள். முல்லைத்தீவுக்குச் செல்ல வேண்டும். மேலிடத்து அனுமதி பெறப்பட்டிருக்கின்றது எனக் கூறினார்கள்.

மேலிடத்து அனுமதியை உறுதிப்படுத்தும் வரையில் காத்திருக்குமாறு கூறிய தடைமுகாம் இராணுவத்தினர் தமது மேலதிகாரியுடன் தொடர்பு கொண்டார்கள். நேரம் கரைந்து கொண்டிருந்தது. சுமார் அரை மணிநேரக் காத்திருப்பின்போது, தொடர்ந்து செல்வதற்கு அனுமதி கிடைக்கப் போவதில்லை என்ற அவநம்பிக்கை மனதில் ஓங்கி எழுந்த போது, வீதியைத் தடை செய்திருந்த கேட் உயர்ந்தது. புதுக்குடியிருப்பு வரை மட்டுமே தொடர்ந்து செல்லலாம். அதற்கு அப்பால் செல்ல முடியாது என இராணுவத்தினர் கூறினார்கள். ஒரு வகையான பதைப்போடும், அச்சத்துடனும் அங்கிருந்து வாகன அணி நகர்ந்தது.

தேறாவில், மூங்கிலாறு, உடையார் கட்டு, சுதந்திரபுரம், வள்ளிபுனம், தேவிபுரம், கைவேலி, கோம்பாவில் என ஒவ்வொரு ஊராகச் செல்லச் செல்ல, புதுக்குடியிருப்பு வரையிலும் வீதியின் இருபக்கங்களும் அலங்கோலமாகக் கிடந்தன. கட்டிடங்கள், வீடுகள், குடிசைகள், வாகனங்கள், வயல்கள், மரங்கள், செடி கொடிகள் என கண்ணில் பட்ட எல்லாவற்றிலுமே யுத்தத்தின் கோர அழிவுகள் தென்பட்டன.

வீடுகள், கட்டிடங்கள் சிதைந்து கிடந்தன. உடைவுகளிலும், எஞ்சியிருந்த அழிவுகளிலும் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த அடையாளங்கள் தெளிவாகத் தெரிந்தன. வழி நெடுகிலும் வாகனங்கள் சிறிதும், பெரிதுமாக எரிந்து கிடந்தன. சில புரண்டு கிடந்தன. சில தலைகீழாகக் காணப்பட்டன. ஊழிக்கால அழிவு என்பார்களே அது இப்படித்தான் இருக்குமோ என எண்ணத் தோன்றியது. இடையே ஓரிடத்தில் சுதந்திரபுரமாக இருக்கலாம், அங்கு வீதியில் இருந்து சற்றுத் தொலை வில் வரிசையாக அடுக்கப்பட்ட நிலையில் பெரும் எண்ணிக்கையில் மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. மற்றுமோரிடத்தில் சைக்கிள்கள் பெரும் எண்ணிக்கையில் நிறுத்தப்பட்டிருந்தன. அவை வெயிலிலும், மழையிலும் அடிபட்டு நிறம் மங்கியிருந்ததைப் போலிருந்தது. யார் யாருடைய சொத்துக்களோ இவ்வாறு

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# சுழற்சியை உடையுங்கள்

உங்களுக்குள்ளேயே இருக்கும் தடைகளை நீங்கள் தாண்ட விரும்பினால், உங்கள் கர்மவினைகளின் கட்டமைப்பு பற்றிய புரிதல் அவசியமானது. அது ஒரு சுழற்சி. சுழற்சியென்றால், ஒரு பிறவியிலிருந்து மறுபிறவிக்கான சுழற்சி என்று மட்டும் பொருளல்ல. நீங்கள் நன்றாக கவனித்தால், புற வாழ்வின் நிகழ்வுகள் 12 முதல் 15 ஆண்டுகளுக்கொரு முறை ஒரே மாதிரியாகத் திரும்பத் திரும்ப நிகழ்வதை உணர்வீர்கள். இன்னும் கூர்ந்து பார்த்தால் ஓர் ஆண்டிலேயே ஒரே விதமான நிகழ்வுகள் திரும்பத்திரும்ப நடைபெறுவதை உணர்வீர்கள். இன்னும் உன்னிப்பாக கவனித்தால் ஒரே நாளில் ஒரே விதமான சுழற்சிகள் பலமுறை நிகழ்வதை உணர்வீர்கள்.

நாற்பது நிமிடங்களுக்கொரு முறை நிகழும் இந்த சுழற்சிக்கு கன்னட மொழியில் “கலீஜ” என்று பெயர். கர்ம வினைகளின் சுழற்சி நாற்பது நிமிடங்களுக்கொரு முறை நிகழ்கிறது. எனவே அந்த சுழற்சியை உடைக்க நாற்பது நிமிடங்களுக்கொரு முறை உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது. இந்த நாற்பது நிமிட சுழற்சியை நீங்கள் கவனிக்காமல் விட்டால் அடுத்த வாய்ப்புக்கு 12 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதுதான். எந்த ஒன்றுக்கும் பயன்படாத அபத்தமான சுழற்சியை ஒவ்வொரு நாற்பது நிமிடங்களுக்கும் செய்கிறீர்கள் என்று உங்களுக்குப் புரிந்தால் நீங்கள் போகும் பாதை பயனற்றது என்ற விழிப்புணர்வை இரண்டே நாட்களில் பெறுவீர்கள். இதை பன்னிரண்டு ஆண்டுகளுக்கொரு முறை பார்த்தால் இந்த விழிப்புணர்வு ஏற்பட 24 முதல் 48 ஆண்டுகள் ஆகும். இந்த சுழற்சிகளை ஆயுளில் ஒருமுறை மட்டும் நீங்கள் பார்த்தால், இதில் எந்தப் பயனுமில்லை என்ற விழிப்புணர்வைப் பெற சில பிறவிகள் ஆகும்.

எனவே இது உங்கள் விழிப்புணர்வைப் பொறுத்தது. உங்கள் தற்போதைய சுவர்களை உடைத்துக் கடந்து போக விரும்புகிறீர்கள். ஆனால் அதற்கு உங்கள் வாழ்க்கைத் துணைவரின் அனுமதி தேவைப்படுகிறது. ஏனென்றால் நீங்கள் இருவரும் சேர்ந்து சில உறுதிமொழிகளை எடுத்துக் கொண்டீர்கள். ஆனால் வாழ்வில் சில விஷயங்கள் அனுமதி பெற்று நிகழ்வதில்லை. ஒன்று, எல்லா ஏற்பாடுகளுமே தற்காலிகமானவை என்பதை மனிதர்கள் உணர வேண்டும். அல்லது இந்த ஏற்பாடுகளை முற்றிலும் வேறொரு பரி-மாணத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். அல்லது ஒன்று நீங்கள் உங்கள் வளர்ச்சிப்பாதையைக் கைவிடுவீர்கள். அல்லது உங்கள் ஏற்பாடுகளை முறித்துக் கொள்வீர்கள். இரண்டுமே கொடூரமானவை. முதலாவது வழி உங்களுக்குக் கொடூரமானது. இரண்டாவது வழி உங்கள் உடனிருப்பவர்களுக்குக் கொடூரமானது. மாறாக, உங்கள் உடனிருப்பவர்களையும் அழைத்து கொண்டு வளர்ச்சிப் பாதையில் நடையிட நீங்கள் திட்டமிடுவீர்களென்றால், அதற்கு இன்னும் அதிகமான முயற்சியும், விழிப்புணர்வும், அர்ப்பணிப்புணர்வும், சமநிலையும், ஆன்மீகப் பயிற்சிகளும் அவசியம். ஒரு பிரம்மச்சாரியை விட, குடும்பச்சூழலில் இருந்து கொண்டு ஆன்மீகத்தில் வளர நினைப்பவர்களுக்கு கூடுதலான ஆன்மீகப் பயிற்சிகள் தேவைப்படும். ஏனென்றால், அவர்கள் கூடுதல் சவால்களை மேற்கொண்டிருக்கிறார்கள். கயிலாய மலையில் தனியாக நடப்பது எளிது. நான்கு பேர்களைத் தோள்களில் தூக்கிக் கொண்டு நடக்க வேண்டி வந்தால், அதற்கு அசாத்தியமான வலிமை வேண்டும்.

குடும்பத்துடன் மலையடிவாரத்தில் போய் நின்றீர்களென்றால் ஒன்றே ஒன்றுதான் நடக்கும். மலையுச்சியை அண்ணாந்து பார்த்தவுடன் நடுங்கத் தொடங்குவீர்கள். உங்கள் மனைவியையும், மகளையும் பார்த்து, ‘இவர்களை எப்படி மலையுச்சிக்குக் கொண்டு சேர்க்கப் போகிறேன்?’’ என்று நடுங்கத் தொடங்குவீர்கள். இதன்மூலம் உங்களுக்கு எச்சரிக்கையுணர்வு ஏற்படும். கோழைத்தனத்திற்கும், எச்சரிக்கையுணர்வுக்கும் உங்களை பொறுத்தவரை ஒரேயொரு வித்தியாசம்தான். மற்றவர்களுக்கு ஏற்படும் உணர்வு கோழைத்தனம். உங்களுக்கு ஏற்படுவது எச்சரிக்கையுணர்வு. எனவே மலையடிவாரத்தில் ஒரு சுற்றுலா போகலாம், அதுவே யதார்த்தமானது என்கிற முடிவுக்கு வருவீர்கள். பொறுப்புணர்வு, யதார்த்தம் என்கிற பேரில் நீங்கள் வெறும் சுற்றுலாவைத்தான் மேற்கொள்வீர்கள்.

ஒருமுறை, தன் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்ட விருந்தொன்றில், சங்கரன்பிள்ளை, தான் திருமணம் செய்து கொள்ளப் போவதாக அறிவித்தார். “யாரை?” என்று எல்லோரும் ஆர்வமாகக் கேட்டார்கள். “பக்கத்து வீட்டிலுள்ள லூசியைத்தான்” என்றார் சங்கரன்பிள்ளை. “லூஸியையா? அவளுக்கு தகப்பன், தாய் யாரென்றே தெரியாதே!” என்றார் சங்கரன்பிள்ளையின் அப்பா. “அவளுக்கு சொந்த வீடு கூடக் கிடையாதே” அங்கலாய்த்தார் சங்கரன்பிள்ளையின் அம்மா. “அய்யோ! அவள் கூந்தல் அசிங்கமாக இருக்குமே” அலுத்துக் கொண்டார் மாமா. “அவளைப் பார்த்தால் வீதியோரப் பெண் போல இருக்குமே” குடும்ப உறுப்பினர்களின் குமுறல் கூடிக்கொண்டே போனது. சங்கரன்பிள்ளை அமைதியாகச் சொன்னார்., “ஆனால் அவளை மணப்பதில் ஒரு பெரிய வசதி இருக்கிறது. அவளுக்கு இதுபோல் குடும்பம் என்பதே கிடையாது” என்று.

ஆன்மீக வளர்ச்சியை அணுகவென்று, மூன்று முறைகள் உண்டு. முதல்வழி, தேவையானவற்றை மெதுவாக பல பிறவிகளுக்கும் தொடர்ந்து செய்து கொண்டேயிருப்பது. அதன்மூலம் எப்போதாவது விடுதலை நேரும். இரண்டாவது வழி, உங்களின் தற்போதைய சூழலில் இருந்து கொண்டே எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்து கொண்டே, ஆன்மீக வளர்ச்சிக்கான அம்சங்களுடன் தொடர்பிலேயே இருந்தால், கடைசி விநாடியில் அது நிகழும்படி செய்வோம். மூன்றாவது வழியில் இப்போதே உங்கள் தடைகளை உடைத்து மேல்நிலைக்குச் செல்வது. இதற்கு, உங்களைச் சுற்றி என்ன நிகழ்கிறதென்கிற கவலை உங்களுக்கு இருக்கக்கூடாது. ஏனென்றால், இந்நிலையில் உங்களுக்கு நிகழக்கூடிய பல



**சத்குரு வாசுதேவ்**

விஷயங்களை மற்றவர்கள் அங்கீகரிக்க மாட்டார்கள். உங்கள் சமூகமும், குடும்பமும் நீங்கள் குறிப்பிட்ட தன்மையிலிருப்பதால் உங்களுடன் தொடர்பு கொண்டார்கள். நீங்கள் வேறு தன்மைக்கு மாறுவதை அவர்களால் அங்கீகரிக்க முடியாது. ஏனென்றால் உங்களுடன் வேறு தன்மையில் அவர்களால் தொடர்பு கொள்ள முடியாது.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.ort / www.ishayoga.org
**Inner Engineering Program is now online with Sadhguru:** www.innerengineering.org

ஒருவிதமான தன்மையில் நீங்கள் இருந்ததால், உங்களை ஒருவர் மணந்தார். வேறு விதமான தன்மைக்கு நீங்கள் மாறும்போது, அது முன்னை விட மேம்பட்ட தன்மையாய் இருந்தால் கூட ஏதோ வேற்று கிரகத்திலிருந்து வந்தவர் போல் உங்களை உணர்கிறார்கள். தன்னினும் மேம்பட்ட நிலைக்குத் தங்கள் வாழ்க்கைத் துணைவர் சென்றதை உணர்ந்து அங்கீகரிக்கும் பக்குவம் அவர்களுக்கு இருந்தாலே தவிர அவர்களால் உங்களுடன் வாழ முடியாது. ஒருவகையில் இந்த உறவில் நீங்கள் பாதுகாத்த அம்சம் ஒன்று உடைபடும். உங்களிடமிருந்து அவர்கள் விலகிச் செல்வார்கள். அல்லது ஒரே இடத்தில் வாழ்ந்தாலும் சில மாற்றங்கள் ஏற்பட்டே தீரும். இந்த உலகில் எவ்வளவு பேர் இதற்குத் தயாராக இருப்பார்கள்? எனவே, இந்த மூன்று வழிகளில் இரண்டு வழிகளே பலருக்கும் உகந்தது. ஒன்று சரியானவற்றையே செய்து கொண்டிருந்து விட்டு, உங்கள் குருவுக்குத் திறந்த நிலையில் இருந்தால், கடைசி விநாடி வருகிறபோது அவர் பார்த்துக் கொள்வார். திறந்த நிலையில் இருக்க நீங்கள் விரும்பவில்லை, ஆனால் சிலவற்றைச் செய்யத் தயாராக இருக்கிறீர்களென்றால், எதிர்காலத்திற்கென்று சில சின்னச் சின்ன ஏற்பாடுகளை செய்து கொள்ளலாம். ஆனால் இதை நீங்கள் செய்வதை நான் விரும்பவில்லை. ஒன்று உங்கள் தடைகளை இப்போதே உடைக்க வேண்டும். அல்லது மரணம் ஏற்படும் விநாடியில் அது நிகழ வேண்டும். எனக்குப் பொறுமை கிடையாது. பலபிறவிகளாக பொறுமையின்மையினையே நான் பயின்று வந்திருக்கிறேன். பலரும் என்னை அதீத பொறுமைசாலியாகப் பார்க்கிறார்கள். உண்மையில் என்னுடைய ஏற்கும் தன்மைதான் பொறுமையாகப் பார்க்கப்படுகிறது. எனக்கு எல்லாமே விரைவாக நடக்க வேண்டும். இந்த பூமி இன்னும் விரைவாக சுழன்று நீங்கள் விரைவாய் வளர

தொடர்ச்சி10ஆம் பக்கம்

புதிய வாடிக்கையாளர்கள் வரவேற்கப்படுகின்றனர்
SKYLIGHT TRAVEL & TOURS INC.
3300 McNicoll Avenue, Suite 208, Toronto, Ontario M1V 5J6
Phone: 416-751-8000 Toll Free: 1-800-758-6090
E-MAIL ALL INQUIRIES TO: SALES@SKYLIGHTTRAVEL.CA
Come visit our NEW WEBSITE at www.skylighttravel.ca
உல்லசப்பிரயாண சேவைகள் சிறந்தவிலைகளில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
18 வருடங்களுக்கு மேலான பயண சேவை முகவராக அனுபவம் உள்ளவரின் சேவையைப் பெற்றுக் கொள்ள அழையுங்கள்
*You will speak with a highly-trained travel expert who is there to help you every step of the way with tours information, availability, pricing and booking your flights to your dream destinations.*
TOP DEALS
AHMEDABAD CAD775.00 CALICUT CAD750.00
CHENNAI/ BANGALORE CAD750.00
COCHIN/THIRUVANATHAPURAM CAD750.00
DHAKA CAD879.00 MUMBAI/DELHI CAD695.00
HYDERABAD CAD775.00 COLOMBO CAD895.00
KARACHI/LAHORE CAD879.00 KOLKATTA CAD795.00
PRICES ARE SUBJECT TO CHANGE WITHOUT NOTICE PLUS APPLICABLE TAXES APPLY
*ALL PRICES ARE IN CANADIAN CURRENCY
CUSTOMIZED INDIA TOUR PACKAGES
GOLDEN TRIANGLE PACKAGE


சாம் முருகேஸ்வரன்
416 320 8784
We Speak English Hindi Gujarati Malayalam Tamil
Discount Prices
Great Customer Service

# வரியைக் குறைத்துக் கொள்ள RRSP இல் முதலீடு செய்ய வேண்டுமா?

பெப்ரவரி மாதம் வந்துவிட்டால் எங்கு பார்த்தாலும் ஆர்.ஆர்.எஸ்.பி. யில் பணத்தைப் போடச் சொல்லி விளம்பரங்களைப் பார்க்கலாம். வங்கிக்குச் சென்றாலும் இதே கேள்விதான். ஆர்.ஆர்.எஸ் பியில் பணம் போடவில்லை என்றாலும் ஏதோ குற்றம் செய்து விட்டதை போன்ற உணர்வைக் கொண்டு வந்து விடுகிறார்கள்.

ஆர்.ஆர்.எஸ்.பி யில் பணம் போடுவது நன்மை தருமா? என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். தரும் என்றால் போடலாம். இல்லையேல் யோசிக்கலாம்.

மிகக்குறைந்த வருமானம் உள்ளவர்கள் ஆர்.ஆர்.எஸ்.பி யில் பணம் போடுவதால் பெரிய பயனைப் பெற முடியாது. இதுதான் உண்மை. பல சமயங்களில் இந்த உண்மை பேசாமல் விடப்படும். உதாரணமாக 40,000 டொலருக்குக் கீழ் வருமானம் உள்ளவர்கள் முதலில் சேமிக்கத் தேர்ந்தெடுக்க வேண்டியது. TFSA என்று சொல்லப்படும் வரி இல்லாச் சேமிப்புக் கணக்குத்தான். இதில் சேமித்த பின், இன்னும் சேமிக்க வாய்ப்பிருந்தால் ஆர்.ஆர்.எஸ்.பி யில் பணத்தைப் போடலாம். 40,000 இலிருந்து 81,000 வரை வருமானம் உள்ளவர்கள் முதலில் எதில் வேண்டுமானாலும் பணத்தைப் போடலாம். ஓய்வு காலத்தில் வருமானம் என்னவாக இருக்கும் என்று கணித்து, குறைவாக இருக்க வாய்ப்பிருந்தால் முதலில் ஆர்.ஆர்.எஸ்.பி யிலும் பிறகு TFSA இலும் பணத்தைப் போடலாம். இல்லை, ஓய்வு காலத்திலும் நல்ல வருமானம் வரும் என்றால் முதலில் TFSA இல் பணத்தைப் போடுவதே சிறந்தது.



TFSA இல் இருக்கும் பணத்தை அரசாங்கம் கண்டு கொள்ளாது. அதனால் உங்களுக்கு அரசிடமிருந்து வயதான காலத்தில் கிடைக்கும் சலுகைகளில் குறைவு வராது. ஆர்.ஆர்.எஸ்.பி அதிகமாக இருக்கும் பட்சத்தில் அரசின் சலுகைகள் கிடைப்பதில் தடைகள் உருவாகலாம். முற்றிலும் கிடைக்காமலும் போகலாம். 81,000 டொலர்களுக்கு மேல் வருமானம் உள்ளவர்கள் முதலில் ஆர்.ஆர்.எஸ் பியில் பணத்தைப் போட்டு, அதிலிருந்து கிடைக்கும் காசோலையை TFSA இல் சேமிக்க உபயோகிக்கலாம்.

ஆர்.ஆர்.எஸ்.பி யில் பணத்தைப் போடும் காலத்தில் வரிச்சலுகை கிடைக்கின்றது. எடுக்கும் காலத்தில் வருமானமாகக் கணக்கிடப்பட்டு வரி வசூலிக்கப்படுகின்றது. TFSA இல் பணம் போடும் காலத்தில் அரசாங்கம் உங்களுக்கு வரிச்சலுகை எதையும் தருவதில்லை. ஆனால் பணத்தை எடுக்கும் காலத்தில் உங்களிடமிருந்து வரி எதுவும் கேட்காது. மேலும் அரசு சலுகைகள் எதுவும் பாதிக்கப்பட மாட்டாது.

இன்னும் ஒன்றையும் சொல்ல வேண்டும். பொதுவில் RRSP இல் பணத்தை எடுத்து விட்டால் திரும்ப அந்தப் பணத்தைப் போட முடியாது. ஆனால் TFSA இல் இந்த வருடம் பணத்தை எடுத்தால், அதே அளவு பணத்தை மீண்டும் அடுத்த வருடம் கணக்கில் செலுத்தலாம்.

குறுகிய காலமோ, நெடுங்காலமோ எல்லாக் காலத்தின் தேவைக்கும் வளைந்து கொடுப்பது TFSA தான்.

அதனால் பெப்ரவரியில் வியாபாரப் பேச்சில் மயங்கி முடி வெடுக்காதீர்கள். உங்களுக்கு எது நன்மையோ, அதை யோசித்துப் பார்த்து முடிவு எடுங்கள், செயல்படுங்கள். இக்கட்டுரை ஆசிரியரிடம் ஆலோசனை பெற தொலைபேசி எண் :416.473.6100 / Email: perrii@dreams and money.com



**பெரி. முத்துராமன்**



# 4-வது முறையாக அவுஸ்திரேலியா சாம்பியன் உலகக் கோப்பை கிரிக்கெட்

2007-ம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றதன் மூலம் 4-வது முறையாக சாம்பியன் பட்டம் வென்ற அணி என்ற பெருமையை அவுஸ்திரேலிய அணி பெற்றது. இந்த உலகக் கோப்பை போட்டி மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றது. மொத்தம் 51 ஆட்டங்கள் நடைபெற்றன. 16 நாடுகள் பங்கேற்றன.

ஏ பிரிவில் அவுஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, ஸ்காட்லாந்து, நெதர்லாந்து அணிகளும், பி பிரிவில் இலங்கை, இந்தியா, வங்கதேசம், பெர்முடா ஆகிய அணிகளும், சி பிரிவில் நியூசிலாந்து, இங்கிலாந்து, கென்யா, கனடா ஆகிய அணிகளும், டி பிரிவில் பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், ஜிம்பாப்வே, அயர்லாந்து அணிகளும் இடம்பெற்றன.

இந்திய அணி முதல் சுற்றோடு போட்டியிலிருந்து வெளியேறியது. அடுத்த சுற்றான சூப்பர் 8 சுற்றுக்கு அவுஸ்திரேலியா, இலங்கை, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், வங்கதேசம், அயர்லாந்து ஆகிய அணிகள் முன்னேறின.

இதிலிருந்து இலங்கை, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய அணிகள் அரை இறுதிக்குத் தகுதி பெற்றன. முதல் அரைஇறுதி ஆட்டத்தில் இலங்கை அணி நியூசிலாந்தை எதிர் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 5 விக்கெட் இழப்புக்கு 289 ரன்கள் சேர்த்தது. அந்த அணியின் மஹேல ஜெயவர்த்தனே அதிகபட்சமாக 115 ரன்கள் குவித்தார். பின்னர் ஆடிய நியூசிலாந்து 208 ரன்களில் ஆட்டமிழந்தது. இதன்மூலம் இலங்கை அணி இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

மற்றொரு அரை இறுதி ஆட்டத்தில் தென்னாப்பிரிக்கா - அவுஸ்திரேலியா அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாப்பிரிக்க அணி, ஷான் டெய்ட்டின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 149 ரன்களில் ஆட்டமிழந்தது. பின்னர் ஆடிய அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட் இழப்புக்கு 153 ரன்கள் எடுத்து வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி, இலங்கையை எதிர்கொண்டது. மழை காரண மாக இறுதிப் போட்டி 38 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. முதலில் ஆடிய அவுஸ்தி ரேலிய அணி 4 விக்கெட் இழப்புக்கு 281 ரன்கள் குவித்தது. அந்த அணியின் ஆட்டம் கில்கிறிஸ்ட் அதிகபட்சமாக 104 பந்துகளில் 149 ரன்கள் குவித்தார்.

மீண்டும் மழை குறுக்கிடவே ஆட்டம் 36 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இலங்கைக்கு 269 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இலங்கை அணியால் 36 ஓவர்களில் 215 ரன்கள் மட்டும் எடுக்க முடிந்தது. இதன்மூலம் அவுஸ்திரேலியா 53 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று 4-வது முறையாக உலகக் கோப்பையைக் கைப்பற்றியது. ஆடம் கில்கிறிஸ்ட் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

இந்த ஆட்டத்தில் வென்றதன் மூலம் உலகக் கோப்பை போட்டியில் (1999 முதல் 2007 வரை) தொடர்ந்து 29 ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணி என்ற பெருமையையும் அவுஸ்திரேலியா பெற்றது. தொடர்நாயகன் விருதை அவுஸ்திரேலியாவின் கிளன் மெக்ராத் (26 விக்கெட்டுகள்) தட்டிச் சென்றார். அதிக ரன்கள் குவித்த வீரர் என்ற பெருமையை அவுஸ்திரேலியாவின் மேத்யூ ஹேடன் (659 ரன்கள்) பெற்றார்.

## விளையாட்டுத் தகவல்கள் 298

### உலகக் கோப்பை கிரிக்கெட் - ஹாட்ரிக் சாதனையாளர்கள்

2008-ம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பையில் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்தி சாதனை படைத்தார் இலங்கையின் சமிந்தா வாஸ். தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற இந்த உலகக் கோப்பையின் லீக் ஆட்டத்தில் இலங்கையை எதிர்கொண்டது வங்கதேச அணி.

வங்கதேச அணி முதலில் பேட் செய்தது. ஆட்டத்தின் முதல் ஓவரை இலங்கையின் சமிந்தா வாஸ் வீசினார். அந்த ஓவரின் முதல் பந்தில் ஹன்னன் சர்க்காரை கிளீன் போல்டு ஆக்கினார். பின்னர் களமிறங்கிய முகமது அ்‘ரபுல் தான் சந்தித்த முதல் பந்திலேயே வாஸிடம் கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார்.

வாஸின் 3-வது பந்தை எதிர்கொண்ட வங்கதேசத்தின் இசனுல் ஹக், ஜெயவர்த்தனேவிடம் கேட்ச் கொடுத்து ஆட்டமிழக்க வாஸ் ஹாட்ரிக் சாதனை படைத்தார். இதன்மூலம் உலகக் கோப்பையில் உலக அளவில் ஹாட்ரிக் சாதனைப் படைத்த மூன்றாவது வீரர், இலங்கையின் முதல் வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். இந்த ஆட்டத்தில் 9.1 ஓவர்களை வீசிய வாஸ், 25 ரன்களை மட்டுமே கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பிரட் லீ: ஆஸ்திரேலிய வீரர் பிரட் லீ, 2003-ம் ஆண்டு உலகக் கோப்பையில் சூப்பர் சிக்ஸ் சுற்றில் கென்யாவுக்கு எதிரான ஆட்டத்தில் ஹாட்ரிக் சாதனை நிகழ்த்தினர்.

லசித் மலிங்கா: 2007-ம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியில் தென்னாப்பிரிக்கா வுக்கு எதிரான ஆட்டத்தில் ஹாட்ரிக் சாதனை நிகழ்த்தினர் இலங்கையின் லசித் மலிங்கா. இந்த சாதனையைப் படைத்த 5-வது வீரர் மலிங்கா.

சூப்பர் 8 சுற்றில் தென்னாப்பிரிக்காவை எதிர்கொண்டது இலங்கை அணி. இந்த ஆட்டத்தில் 44-வது ஓவரை வீசிய மலிங்கா 5-வது பந்தில் போலக்கையும், 6-வது பந்தில் ஹாலையும் ஆட்டமிழக்கச் செய்தார். பின்னர் 46-வது ஓவரை வீச வந்தார் மலிங்கா. அந்த ஓவரின் முதல் பந்திலேயே காலிஸ ஆட்டமிழக்கச் செய்து ஹாட்ரிக் சாதனைப் படைத்தார். பின்னர் வந்த நிடினியை அடுத்த பந்தில் வெளியேற்றினார். இதன்மூலம் உலகக் கோப்பையில் தொடர்ச்சியாக 4 பந்துகளில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய ஒரே வீரர் என்ற சாதனைக்கு சொந்தக்காரரானார் மலிங்கா. இருப்பினும் இந்த ஆட்டத்தில் தென்னாப்பிரிக்காவிடம் இலங்கை தோற்றுப்போனது.

### உலகக் கோப்பை கிரிக்கெட்: அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள்

உலகக் கோப்பை போட்டியில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் வரிசையில் அவுஸ்திரேலியாவின் கிளன் மெக்ராத் முதலிடத்தில் உள்ளார். 4 உலகக் கோப்பையில் 39 ஆட்டங்களில் விளையாடி 71 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 15 ரன்களை கொடுத்து 7 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இவரின் சிறப்பான பந்துவீச்சு ஆகும்.

இவருக்கு அடுத்தபடியாக பாகிஸ்தானின் வாசிம் அக்ரம் 55 விக்கெட்டுகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். 5 உலகக் கோப்பையில் 38 ஆட்டங்களின் விளையாடியுள்ளார். 28 ரன்கள் கொடுத்து 5 விக்கெட் வீழ்த்தியதே இவரின் சிறப்பான பந்துவீச்சு ஆகும். 4 உலகக் கோப்பையில் 31 ஆட்டங்களில் விளையாடியுள்ள இலங்கையின் முத்தையா முரளிதரன் 53 விக்கெட்டுகளுடன் 3-வது இடத்தில் உள்ளார். 19 ரன்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இவரின் சிறப்பான பந்துவீச்சு ஆகும்.

இலங்கையின் சமிந்தா வாஸ் 49 விக்கெட்டுகளுடன் 4-வது இடத்தில் உள்ளார். 4 உலகக் கோப்பையில் 31 ஆட்டங்களில் விளையாடியுள்ள இவர், 25 ரன்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தியதே சிறப்பான பந்துவீச்சு ஆகும். இந்தியாவின் ஜவஹல் ஸ்ரீநாத், 4 உலகக் கோப்பையில் 34 ஆட்டங்களில் விளையாடி 44 விக்கெட்டுகளை வீழ்த்தி 5-வது இடத்தில் உள்ளார். 30 ரன்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இவரின் சிறப்பான பந்துவீச்சு ஆகும்.

### உலக கிண்ணத்தை வெல்ல இலங்கை - இந்திய அணிகளுக்கு வாய்ப்பு : தென் ஆபிரிக்க பயிற்சியாளர்

“தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் அதிரடியில் மிரட்டி, அசத்தலான சதம் விளாசிய, இந்தியாவின் யூசுப் பதானை கட்டுப்படுத்துவது கடினம்” என்கிறார் தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் வான் ஜில். தென்னாபிரிக்கா சென்ற இந்திய அணி ஒருநாள் தொடரை இழந்தது. செஞ்சூரியனில் நடந்த கடைசி ஒருநாள் போட்டியில், 8 விக்கெட்டுக்கு 118 ஓட்டங்கள் என இந்தியா தடுமாறிய நிலையில் எழுச்சி கண்ட யூசுப் பதான், அதிரடியாக சதம் விளாசி அணியை வெற்றிக்கு அருகில் கொண்டு சென்றார்.

இது குறித்து தென்னாபிரிக்க பயிற்சியாளர் வான் ஜில் கூறியதாவது: இந்தியாவுக்கு எதிரான தொடரில், “பவுன்சர்கள்” முக்கிய பங்கு வகிக்கும் என்று நினைத்தோம். டெஸ்ட் தொடரில் இந்திய வீரர்கள் இதை அருமையாக சமாளித்தனர். ஆனால், ஒருநாள் தொடரில் சொதப்பினர். இதனால் தான் மோர்கல், டிசோட்சபே இருவரும் இந்திய அணியின் துடுப்பாட்டத்தை தகர்த்து அதிக விக்கெட் வீழ்த்த முடிந்தது.

இந்த டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரிலிருந்து அதிக பாடம் கற்றுள்ளோம். நாங்கள் செய்த தவறுகளால் 12 என பின்தங்கி பிறகு தொடரை வென்றோம். இந்தியா டெஸ்ட் தரவரிசையில் “நம்பர்1” இடத்தில் உள்ள அணி. இந்நிலையில் அவர்களிடமிருந்து அதிக போராட்டத்தை நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்பது மிகவும் கேலிக்கூத்தானது. இதை ஏற்கனவே எதிர்பார்த்துத்தானிருந்தோம். ஆனால், எதிர்பார்ப்பை விட சற்று கூடுதலாகவே போராட்டம் இருந்தது. இந்திய வீரர்கள் ஒருங்கிணைந்து கடைசிவரை துணிச்சலாகப் போராடினர். இருப்பினும் தொடரை வென்றது உலகக் கிண்ண தொடரை உற்சாகமாகத் தொடக்க உதவும்.

இந்தியாவின் யூசுப்பதான் அதிரடியான வீரர். செஞ்சூரியன் போட்டியில் இவரும் சகீர்கானும் இணைந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இவரது சில “ஷொட்டுகள்” நம்பமுடியாத வகையில் இருந்தது. இந்தியா 8 விக்கெட்டுகளை இழந்த நிலையில் தோல்வி உறுதியாகி இருந்தது. ஆனால், யூசுப்பதான் போட்டியை எங்களிடம் இருந்து கொண்டு



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# அடமானக் கடன் பெறுவதில் இறுக்கம்

ஆதன வியாபாரம் வருட இறுதியில் பொதுவாக மந்தமாக இருப்பது இயல்பே. வருடக்கடைசியிலும் புதுவருடத்தின் ஆரம்பத்திலும் இவ்வாறு காணப்படுவதற்கு காலநிலையும் ஒரு முக்கிய காரணமாகலாம். இருந்தபோதிலும் சில வருடங்கள் இதற்கு விதிவிலக்காகவும் காணப்பட்டுள்ளன. கடந்த வருடம் (2010) நல்ல உதாரணம்.



ஆதன விலையில் தொடர்ச்சியானதும், சீரானதுமான அதிகரிப்பு ஏற்பட்டு வந்துள்ளது. 2008 இன் நடுப்பகுதியிலிருந்து 2009 ஆரம்பம்வரை வியாபாரத்தில் எதிர்பாராத மந்த நிலை ஏற்பட்டது. இதனால் கனடிய மத்திய வங்கி அதிரடியாக வட்டிவீத இறக்கத்தை ஏற்படுத்தியது. அத்துடன் அடமானக்கடன் கொடுக்கும் முறையிலும் பல நல்ல மாற்றங்களை செய்து, ஆதனவியாபாரத்தை அதிகரிப்பதற்கு பலவிதமான ஊக்குவிப்புகளை செய்தது. இதனால் 2009 இலிருந்து 2010 தொடர்ச்சியாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இப்பொழுது, கனடிய மத்தியவங்கியின் ஆளுனர் மார்க் கார்ணி மற்றும் கனடிய மத்திய அரசினர் நிதி அமைச்சர் ஜிம் Flagerty அவர்களின் நோக்கின்படி கனடிய மக்கள் வீடு, மனையை இலகுவாக வாங்கக் கூடியதாக இருப்பதாகவும் அத்துடன் வீட்டின் விலை அதிகரிப்பால் வீட்டை அடமானம் வைத்து அதில்பெறும் பணத்தை பல வழிகளிலும் செலவழிப்பதாகவும் கூறியுள்ளார்கள். இதனை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என முடிவு எடுத்துள்ளார்கள்.

இதற்காக ஜனவரி 11, 2011 ஆம் திகதி நிதி அமைச்சர் அடமானக் கடன் எடுப்பதில் பலவிதமான இறுக்கமான நிபந்தனைகளை கொண்டு வந்துள்ளார். முக்கியமாக மூன்று நிபந்தனைகளை ஏற்படுத்தியுள்ளார்.

1. இதுவரை இருந்த வீட்டிற்கு எதிராக அடமானமாக பெற்ற கடனை, திருப்பி கொடுக்கும் காலமான (Amortization) 35 வருடங்களை 30 வருடங்களாக குறைத்துள்ளார். இதனால் மாதாந்த கட்டுப்பணம் அதிகரிக்கும். அத்துடன் அடமானக்கடன் பெறுவதில் இறுக்கமும் ஏற்பட்டுள்ளது.

இதனால் கடன் எடுப்பதில் சிறிது கஸ்டம் ஏற்பட்டாலும் திருப்பிக் கொடுக்கும் மொத்த வட்டியில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது ஒப்பீட்டளவில் குறைந்தளவு வட்டியே செலுத்துவார்கள். கீழுள்ள உதாரணத்தில்

**35 வருடங்கள் Amortization காலத்திற்கும், 30 வருட Amortization காலத்திற்கும் உள்ள வேறுபாடு.**

கனேடிய சராசரி வீட்டுவிலை $344,551, 4% வட்டி வீதம் 5% முதலீடு. 35 வருட Amortization மாதாந்த கொடுப்பனவு $1441.

30 வருட Amortization மாதாந்த கொடுப்பனவு $1555. எனவே Amortization 5 வருடம் குறையும் போது மாதாந்த கட்டுப்பணம் $114 ஆல் அதிகரிக்கின்றது.

2. அடமானக்கடனை திருப்பி எடுக்கும் போது (Re Financing) இதுவரை 90% ஆன வீட்டின் பெறுமதியை அடமானமாக பெறக்கூடியதாக இருந்தது. இந்த அளவு இப்பொழுது 85% ஆகக் குறைக்கப் பட்டுள்ளது. வீட்டின் பெறுமதியில் மேலதிக 5% கடனாகப் பெறமுடியாது. அதாவது 85%

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 334**


Home Life / GTA Realty Inc., Brokerage*

"கனவு உங்களுடையது
பொறுப்பு எங்களுடையது"



1711 Mccowan Rd. #206, Toronto - Tel: 416.321.6969
145 Trades Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

Raja M. Mahendran, P. Eng.
(Broker/Owner)

CONDO FOR SALE



MARKHAM / SHEPPARD
2 Bedrooms + Den Condo for sale.
Brand New building. Parking included.
Avail. Anytime. Asking Only $314k.



METROGATE
(KENNEDY/ HWY 401)
Completion (2011, 2012)
Price starts from $ 249,900.



CENTRO
(Close to Scarborough Town centre)
Completion (2011). Price starts
$239,000 (special condition).

DOWNTOWN
2 Level Town house for lease in downtown.
Close to Rogers Center & CN tower.
2 Washrooms 1 parking & locker.
Avail. February01, 2011.

STORE FOR SALE



FINCH / MIDDLEFIELD
Main Floor Unit in GTA Square
Shopping Mall. Unit is Close to a
main entrance, high traffic area &
plenty of surface and underground
parking available. 1 Parking and
locker included in the price.

BRAND NEW
CONDO FOR SALE



BLOOR / SHEBOURNE
2 Bedroom + den in downtown.
Avail. March 2011. 1 Parking.
Further details Please Call.

BRAND NEW CONDO
FOR SALE
DOWNTOWN
(SPADINA /WELLINGTON)
Completion (2013) price starts to
$249,900.00. special package
available for the buyers.

MAXX RESTAURANT
MAXX Restaurant is opening soon.

Retail space GTA Square. Main floor &
second floor. Avail. Anytime for Lase or
sale. Only certain units Avail. building.
Don't miss the chance. 7 Days opening.
Resonable rent.

*Independently Owned & Operated



Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# வாழத்துடிக்கும்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

அலங்கோலமாக அவலமாகக் கிடக்கின்றன என்று மனம் எண்ணியது. இந்த அலங்கோலங்களுக்குள் இறுதி யுத்தத்தில் சிக்கியிருந்த பொதுமக்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள், எப்படியெல்லாம் பதைபதைத்திருப்பார்கள் என்ற கவலையும் மனதில் எழுந்தது. இந்தப் பிரதேசத்தின் நிலைமையே இப்படியென்றால் முள்ளிவாய்க் காலின் நிலைமை எப்படி இருக்கும் என்ற எண்ணம் மனதில் தலை தூக்கியது. ஆயினும் இங்கு கண்ட அழிவுக் காட்சிகள் முள்ளிவாய்க்கால் நிலைமையைப் பற்றித் தொடர்ந்து சிந்திப்பதற்குத் தயக்கத்தையும், அச்சத்தையுமே ஏற்படுத்தியது. அந்தப் பேரழிவுகளுக்கிடையிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில மாடுகள் பாழடைந்த பிரதேசத்தில் புல் மேய்ந்து கொண்டிந்ததை யும் காணக்கூடியதாக இருந்தது. வெறிச்சோடிக் கிடந்த அந்தப் பிரதேசத்தில் ஆங்காங்கே வழிநெடுகிலும் சிவிலுடையிலும், சீருடையிலும் இராணுவத்தினர் தென்பட்டார் கள். சிலர் சைக்கிள்களிலும் நடமாடினார்கள்.

புதுக்குடியிருப்பு சந்தியில் உடைந்த கடைகள் வெறும் கோதுகளாக இருந்தன. அந்த உடைவுக்குள்ளும் இராணுவத்தினர் ரொட்டிக்கடை போட்டிருந்தார்கள். தேனீரும் இருந்தது. அங்கு கடமையில் இருந்த மிலிட்டரி பொலிசார் புதுக்குடியிருப்பில் இருந்து புதுமாத்தளனுக்கோ, முல்லைத்தீவுக்கோ செல்வதற்கு சிவில் வாகனங்களுக்கு அனுமதி இல்லை என்றார்கள். வேண்டுமானால், அங்கிருந்து ஒட்டுசுட்டானுக்குச் செல்ல முடியும் என ஒட்டுசுட்டான் செல்லும் வீதிப்பகுதியைக் காட்டினார்கள்.



புதுக்குடியிருப்பு நாற்சந்தியில் புகைப்படம் எடுப்பதற்கு அனுமதி இல்லை என்ற போதிலும் வருகை தந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து ஒன்றிரண்டு புகைப்படம் எடுப்பதற்கு அங்கிருந்த இராணுவத்தினர் அனுமதியளித்தார்கள்.

புதுக்குடியிருப்பு நாற்சந்தியில் வலது பக்கம் ஒட்டு சுட்டானுக்குச் செல்லும் வீதி பிரிந்து செல்கின்றது. இடதுகைப்பக்கம் புதுமாத்தளனுக்குச் செல்லும் வீதி என அடையாளமிடப்பட்டிருந்தது. இடது பக்கம் திரும்பி பின்னர் வலது பக்கம் திரும்பினால், அது முல்லைத்தீவுக்குச் செல்லும் வீதி என அங்கு வைக்கப்பட்டிருந்த அறிவித்தல் பலகை காட்டியது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் அனைத்தும் ஒரு கட்டத்தில் புதுக்குடியிருப்பில் இருந்தே செயற்பட்டு வந்தன. சிறிய இடமாக இருந்த போதிலும், புதுக்குடியிருப்பும் அதன் சுற்றயல் கிராமங்களும் பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தில் தஞ்சமளித்திருந்தது. உயிரோட்டம் மிகுந்திருந்த அந்த கிராமிய நகரம் இப்போது பேரழிவின் சின்னமாக சீரழிந்து பாழாகி வெறிச்சோடிக் கிடக்கின்றது. விசுவமடு, ரெட்பானாவுக்கு அப்பால் கண்ட காட்சிகள் நாடாளுமன்றக்குழுவினரை வாயடைத்து, பேச்சின்றி திகைக்கச் செய்திருந்தது.

"ஜப்பானின் ஹிரோஷிமா நாகாசியில் உலக யுத்தத்தின் போது ஏற்பட்ட பேரழிவை ஒத்ததாகவே இந்த அழிவுக்காட்சிகள் இருக்கின்றன. திரும்பிய பக்கமெல்லாம் தெரிந்த அழிவுகள், மனதில் தீராத சோகத்தை ஏற்படுத்துகின்றது" என தனது உணர்வுகளை வெளிப்படுத்தினார் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன்.

மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கத் தக்க வகையிலான நடவடிக்கைகளில் விரைந்து ஈடுபட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்துகின்றார்.

(அடுத்த இதழில் முடியும்)




ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்

பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்







இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

Tel: 647-707-8671 / 416-829-4004

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi,English, Telugu & Other indian languages


வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...
Elaguppllai (Mike) Srinathan B.Sc
Sales Representative
Dir: 416-276-1225 Off: 905-470-9800
Email: esrinathan@trebnet.com
RE/MAX
SOLD
Taunton/Audley
$344,900
Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3, Located In Popular Tribute 'Hamlet' Community In North Ajax.Walking Distance To Schools, Ajax
Mclaughlin & Earlsbridge
$369,000
Detached 2 Storey Bed rooms 4, . Washrooms 4,Eat In Kitchen Walk Out To Fully Fenced Yard 3 Years, Basmt Is Finished With One Room
Tenth Line & Hoover Park
Hwy 401/Mccowan
Condo Apt.Bed rooms 1, Washroom 1, Freshly Painted-Locker & Parking Included-Close To Scarborough Town Centre,
Danforth/Brimley
$299,888
Detached Bungalow , Bed rooms 3 Washrooms 1, Totally Renovated 3Bed Full Brick Bungalow ances,New Kitchen, New Bathroom
Tenth Line / Stouffville
$349,000
Townhouse 2 storey, Bedrooms 3, Washrooms 3, New Freehold Townhome, 1665 Sqft.Security System, Upgrade Oak Staircase,
Mccowan/Denison
$349,900
Detached 2 Story, Bedrooms 3, Wasroom 2, Four Parking Spaces And No Sidewalk.New Roof Shingles,Mostly New Windows
9th Line/14th Ave
$379,999
Townhouse 2 Story, Bed rooms 3 Washromss 3, 3 Year Old 2 Storey 3 Bedroom 2.5 Washroom, Close To 407, M/S Hospital, Grocery Store, New
Dennison/Mccowen
$399,900
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3,Newer Furnace, Newer Roof, Thermal Windows, Parking For 4 Cars On The Driveway,
Hoover Park & Reeves Way Blvd
$439,900
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3, Fully Fenced Child-Safe Backyard. Upgraded Eat-In Kit W/Granite Counters,Extended Cabi-
10th Line/North Of Main St.
$468,800
Detached 2 story, Bed rooms 4 Washrooms 3, Fully Fenced Back Yard.Large Linen Closet.Double Garage And Driveway Parking For 4
9th Line/14 Th Ave
$487,000
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3, Close To Park, School, Community Centre & Highway,Basement Partially Finished. Central Air,
16th Ave/9th Line
$488,000
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3, Spacious Family Room With Gas Fireplace, California Shutters Throughout
Middlefield/Highglen
$489,900
Detached 2 Story, Bedrooms 4+2 Washrooms 4, Recently Renovated To Modern Specification Throughout The House With Oak Staircase
14th Ave & 9th Line
$499,000
Detached 2 Story, Bedrooms 3+1 Washrooms 5, Freshly Painted, Fully Finished Basement With 3Pc Washroom, Close To Schools, Transit,
9th Line/14th Ave
$519,000
Detached 2 Story, Bedrooms 3+1, Washroom 3, Brand New House Never Lived Approx. 2369 Sq.Ft., Lots Of Upgrades
Markham/Denison
$555,800
Detached 2 Story, Bedrooms 4+2, Washroom 4, New Paint, Finished Basement With Separate Entrance,2 Kitchen. Double Door Front
9th Line/14th Ave
$599,900
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 4 Family Room With Fireplace & Hardwood Flr. Ceramic Floor On Main Floor, Up-
14th Ave & 9th Line
$599,900
Detached 2 Story, Bedrooms 4+1 Washrooms 5, Finished Bsmt W/3 Pc Sep.Entrance French Door, Fenced Yard - 2Yrs, Close To Markville Mall,
Sheppard / Rouge River
$629,900
Detached 2 Story Bed rooms 4, Washrooms 3, $60000 Upgrade, California Shutters Oak Stairs Back Splash In
Woodbine/16thField
$688,000
Detached 2 Storey, Bed rooms 4+1, Washrooms 4, Double Entrance Door, Professionally Finished Bsmt With One Bdrm,4Pc Wash-
14th / Ninth Line
$693,800
Detached 2 storey,. Bed rooms 4, Washrooms 4, More Than $160,000 In Upgrades, Finished Basement, With Kitchen And 4 Pc Bath
Sales of Business
$299,000
Restaurant Sales of Business with out property Newly Renovated
Sales of Business
$1.15million
Restaurant with a banquet hall property in Toronto for sale (Business with property
RE/MAX
Realtron Realty Inc. Brokerage
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7
'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'

# சுழற்சியை...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

வேண்டுமென்றே விரும்புகிறேன். உங்களுக்கெதற்கு 24 மணி நேரம்?

எனவே, உங்கள் வாழ்க்கைத் துணைவரின் அனுமதியோடு நீங்கள் உங்கள் தடைகளை உடைக்க விரும்பினால் அதற்கும் வழிகளுண்டு. செயலில்லாமல் மூலையில் அமர்ந்து கரைவது சிலருக்கே சாத்தியம். மற்றவர்களுக்கு உடல் சார்ந்தும், மனம் சார்ந்தும் பணிகள் செய்ய வேண்டும். இல்லையென்றால் உங்களை என் கைகளில் ஒப்படைத்துவிடுங்கள். உங்களை எளிதில் உடைக்க என்னால் முடியும். என் கைகளில் ஒப்படைப்பதென்றால் என்ன? நான் அமரச் சொன்னால் அமருங்கள். நிற்கச் சொன்னால் நில்லுங்கள். கண்மூடச் சொன்னால் எல்லோரும் மூடிவிட்டார்களா என்று பார்த்த பிறகு உங்கள் கண்களை மூடினால் இது பயன்தராது. ஏற்கக்கூடிய வழிகாட்டுதல் களை மட்டும் நீங்கள் இப்போது பின்பற்றுகிறீர்கள். சில நேரங்களில் நடைமுறைக்குச் சாத்தியமில்லாத நிலைப்பாட்டையும் நான் எடுப்பதுண்டு. அப்போதுதான் பலர் தோல்வியடைகிறீர்கள். சொல்பவற்றின் சாத்தியக்கூறுகளை ஆராயாமல் மனதில் ஒரு எண்ணம் கூட எழாமல் அப்படியே பின்பற்றுபவர்கள் மிகச்சிலர்தான். அத்தகைய வழிகாட்டுதல் களை வழங்குவது, கொடூரமான மனப்பான்மையால் அல்ல. அடிப்படையில் உங்கள் தடைகள் அனைத்துமே உங்கள் மனத்தால் ஏற்படுத்தப்பட்டவைதான்.

உச்சத்தை எட்டுவதற்கும், உங்களுக்கும் இடையிலுள்ள தடை நீங்கள்தான். உங்கள் மனம் எழுப்பும் எண்ணங்கள்தான். இதை உடைக்க வேண்டுமென்றால் சிலவற்றைத் தலைகீழாகச் செய்ய வேண்டும். உதாரணமாக, உங்களுக்கு யாரைப் பிடிக்காதோ அவர்களுடன் சேர்ந்து கொள்ளுங்கள். அவர்களுடன் அன்பாகவும், ஆனந்தமாகவும் நேரத்தைச் செலவிடுங்கள். இதில் பல விஷயங்கள் உடையும். நீங்கள் விரும்பாத ஒருவரை மணந்து கொண்டால் இன்னும் ஏராளமான விஷயங்கள் உடையும்.

நீங்கள் விரும்பும் ஒன்றைத் தேர்வு செய்வதால் உங்கள் ஆளுமையை வளர்த்தெடுக்கிறீர்கள். நீங்கள் விரும்பாத வற்றைச் செய்யவும், நீங்கள் விரும்பாதவர் களுடன் உணர்வுபூர்வமாக, அன்பாக, ஆனந்தமாக நேரம் செலவிடவும் தொடங்கினீர களென்றால், எல்லா சுழற்சிகளும் உடைந்து போகும்.

# 4-வது முறையாக...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

செல்ல இருந்தார். நல்ல வேளையாக மோர்கல் கைகொடுத்தார். உலகக் கிண்ணத் தொடரில் யூசுப் பதானைக் கட்டுப்படுத்துவது என்பது மிகவும் கடினம்.

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணிகளில் முதலிடத்தில் இருப்பது இந்தியாதான். ஏனெனில் சொந்த மண்ணில் இந்தியாவை வீழ்த்துவது என்பது கடினமான காரியம். இரண்டாவதாக இலங்கையைக் குறிப்பிட லாம். அடுத்து சமீபகாலமாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திவரும் இங்கிலாந்து அணியும் போட்டியில் உள்ளது.

இந்தியாவில் ஆடுகளங்கள் நிலையில்லாத தன்மை கொண்டவை. ஒருநாள் போட்டிகளின் போது, திடீரென மாறும் இயல்புள்ளது. அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள் எப்படி செயல்படுகின்றனர் என்பதைப் பொறுத்து, உலகக் கிண்ணத் தொடரின் வெற்றி அமையுமெனக் கூறினார்.

ஆஸ்திரேலிய ஓபன்: இறுதிச்சுற்றில் ஜோகோவிக், கிளிஸ்டர்ஸ், நா லீ

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின் இறுதிச்சுற்றுக்கு ஜோகோவிக், நா லீ, கிம் கிளிஸ்டர்ஸ் ஆகியோர் முன்னேறியுள்ளனர். அதேசமயம் நடப்பு சாம்பியன் ரோஜர் பெடரர், தரவரிசையில் முதல் இடத்தில் உள்ள டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, ஸ்வோனரேவா ஆகியோர் தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறினர். அரைஇறுதி ஆட்டத்தில் ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், செர்பியாவின் ஜோகோவிக்கை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் அபாரமாக ஆடிய ஜோகோவிக் 7-6 (3), 7-5, 6-4 என்ற நேர் செட்களில் பெடரரை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

கடந்த 8 ஆண்டுகளில் ஏதாவது ஒரு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் சாம்பியன் பட்டம் வென்று வந்த பெடரர், கடந்த ஓர் ஆண்டில் எந்த கிராண்ட்ஸ்லாம் போட்டியிலும் பட்டம் வெல்ல முடியாமல் ஏமாற்றமடைந்தார். கடந்த 2008-ம் ஆண்டு சாம்பியன் பட்டம் வென்ற நோவக் ஜோகோவிக் இந்த முறை இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நா லீ, கிம் கிளிஸ்டர்ஸ்: மகளிர் ஒற்றையர் அரைஇறுதி ஆட்டத்தில் தரவரிசையில் 9-வது இடத்தில் உள்ள சீனாவின் நா லீ தரவரி சையில் முதலிடத்தில் உள்ள டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். இதன்மூலம் ஆஸ்திரேலிய ஓபன் இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய முதல் சீன வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றார்.

கடந்த ஆண்டு அரைஇறுதியில் அமெரிக்கா வின் செரீனா வில்லியம்ஸிடம் தோல்வி யடைந்து போட்டியிலிருந்து வெளியேறினார் நா லீ. மற்றொரு அரைஇறுதி ஆட்டத்தில் பெல்ஜியத்தின் கிம்கிளிஸ்டர்ஸ் ரஷியாவின் வேரா ஸ்வோனரேவாவை வீழ்த்தி இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார். இறுதிச்சுற்றில் கிளிஸ்டர்ஸம், நா லீயும் மோதவுள்ளனர்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இத்தாலியின் பிளேவியா பென்னட்டா-ஆர்ஜென்டினாவின் துல்கோ ஜோடி அமெரிக்காவின் லீஸல்- ரஷியாவின் பெட்ரோவா ஜோடியையும், பெலாரஸின் விக்டோரியா அசரென்கா- ரஷியாவின் மரியா ஜோடி செக்.குடியரசின் பெஸ்கி-ஸ்லோவேகியாவின் கதரினாவையும் வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினர்.

# அடமானக்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆன வீட்டின் பெறுமதியே அடமானக் கடனாகப்பெறலாம்.

3. இதுவரை வீட்டை வைத்து பெற்ற Home Equity Line of Credit (HELOC) என்ற கடனிற்கு அரசு கொடுத்துவந்த உத்தரவாதம் (Insurance) நீக்கப் பட்டுள்ளது. இதனால் Heloc கொடுக்கும் நிறுவனங்கள் மேலதிக அவதானம் எடுக்கும். எனவே கடன்பெறுவதில் மேலதிக இறுக்கம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான மாற்றங்கள், அடமானம் பெறுவதில் மேலதிக இறுக்கத்தை ஏற்படுத்தியபோதிலும், மக்கள் மனதில் ஒருவகை கிலேசத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இதன் பாதிப்பு இருக்கும். இந்த மூன்றுவிதமான மாற்றங்களில் இரண்டு மார்ச் 18, 2011 இலிருந்தும் மூன்றாவது மாற்றம் ஏப்ரல் 18, 2011 இல் இருந்தும் நடைமுறைக்கு வரவுள்ளன.



இந்த மாற்றங்களை கொண்டுவருவதற்கு முன்பாக பலவிதமான ஊகங்கள் வெளிவந்து கொண்டு இருந்தன. 5% முதலீடு, 10% ஆக அதிகரிக்கப்படலாம். மற்றும் கொண்டோமெனியங்களின் (Condominium) அடமானக் கடன்பெறும்போது 100% பெறுமதியான Maintenance Fee கணக்கில் எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும். ஆயினும் இவ்வாறான இறுக்கங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்படவில்லை.

கடந்த சில வருடங்களில் மட்டும் கனேடியர்கள் அதிக கடனைப் பெற்றுள்ளார்கள் என்பதும், இவ்வாறான இறுக்கங்களிற்கு காரணமாகலாம்.

கனேடியர்களின் கடனின் பெறுமதி 1.4 Trillion இன் அளவாக அதிகரித்துள்ளது. அதாவது வருமானத்தின் 147 வீதமாக அதிகரித்துள்ளது. இதனால் கனடிய பொருளாதாரத்தின் ஸ்திரமற்ற நிலைமையால் ஜனவரி 18, 2011 அன்று கூடிய மத்திய வங்கியின் ஆளுனரின் கூட்டத்தில் வட்டிவீதத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை. ஏற்கெனவே இருந்த வட்டிவீதமே இப்பொழுதும் உள்ளது. அதாவது 1% ஆகவே காணப்படுகின்றது எனினும், இவ்வருடத்தின் யூன் மாதம் மட்டில் வட்டி வீதம் அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு நீண்டகால, எதிர்வு கூறல் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப மாறக்கூடியது.

கனடிய வங்கியின் குறைந்தளவு வட்டிவீதம் என்ற கொள்கையினால் அதிகமான கனடிய மக்கள் ஆதனத்தை உரிமை கொள்ளக்கூடியதாக உள்ளது. ஒருவகையில் நாட்டின் பொருளாதாரத்திற்கு சிறந்தது.

70% ஆன கனடிய மக்கள் இப்பொழுது ஆதனத்தை உரிமைகொண்டுள்ளார்கள். இதே அளவான அவுஸ்திரேலியா மக்களும் தமது நாட்டில், வீட்டை சொந்தமாக கொண்டுள்ளார்கள். இந்த இரு நாடுகளிலும் வீட்டை உரிமை கொள்வதில் 1991 இலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்தே வந்துள்ளது. ஆனால் ஐக்கிய அமெரிக்கா (USA) மற்றும் ஐக்கிய இராஜ்சியம் (U.K) போன்ற நாடுகளால் 1991 இலிருந்து அதிகரித்த சொத்துரிமை 2006 இலிருந்து இறங்கி வந்து இன்றைய காலத்தில் 67% ஆனவர்களே சொந்தமாக வீட்டை வைத்துள்ளார்கள்.

**சராசரி வீட்டுவிலை (அவுஸ்திரேலியா வின் டொலரில் மார்ச் 2010)**

| | |
|---|---|
| சிட்னி | $580,000 |
| மெல்போன் | $468,000 |
| பிறிஸ்வேன் | $460,000 |

**கனடா சராசரி விலை $331,000 (செப்ரெம்பர் 2010)**

ரொறொன்ரோவின் சராசரி விலை $431,463 (டிசெம்பர் 2010)

கைமாறிய வீடுகளின் எண்ணிக்கை 86,170

ஒப்பீட்டு ரீதியில் கனடாவின் நகரங்களில் சராசரி ஆதன விலை குறைவாகவே காணப்படுகின்றது.


YARL WINDOW
BLINDS & DRAPERY
Since 1991
VENETIAN / VERTICAL / ROLLER
WOOD / FORMWOOD
BLINDS WOOD & VINYL SHUTTERS
We have experience
to make your home
more beautiful

Tel: 416.806.5397
905.201.7733
CALL: N. SELVAM

# MEGA
## MATH PROGRAM
## STARTS
## MARCH 2011

**GROUP ONE G6 & G7**

Bringing up their knowledge to G9 standard.
Get High scores in all university. Math contests.
Best opportunity to get in IB program + others enrich Math G9

**GROUP TWO G9 & G10**

High score in Math & Physic G11 & g12.
creating an excellent Math average at 1st year university

**Purpose, course details, parents questions, plus other detauls will be discussed**

Parents Meeting
Time & Date
9.30am to 11.30am

Feb 5 Saturday
Feb 6 Sunday
Feb12 Saturday
Feb 13 Sunday
Feb 19 Saturday
Feb 20 Sunday
Feb 26 Saturday
Feb 27 Sunday

"WEEKEND CLASSES ONLY"

**************************************************

More Than
# 15
Years

## *MATH & PHYSIC*

கணிதம், பௌதீகம் புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்

* For the 2nd semester Classes starts in
**February 2011**
FOR ALL GRADE UP TO 1ST YEAR UNIVERSITY.

* Seperate classes for: **IB Programm**
G9, G10, G11, G12

**Sharma: 416.666.5515**
**416.878.3215**

# திருவள்ளுவரின் உருவம் எது?

2011, ஜனவரி 15 ஆம் திகதி விளம்பரம் இதழில் திருவள்ளுவர் கி.மு 300 ஆம் ஆண்டில் இருந்து கி.பி 300 ஆம் ஆண்டுவரையுள்ள காலத்தில் எப்போதாவது பிறந்திருக்கலாம் என்றும், 1921 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சில தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி திருவள்ளுவர் கி.மு 31, ஜனவரி 15 ஆம் திகதி பிறந்தார் என்று ஒரு கற்பனை திகதியை அறிவித்தார்கள் என்றும், அத்திகதியில் இருந்துதான் தமிழர் புத்தாண்டு கொண்டாட வேண்டும் என தமிழ்நாடு அரசு அரசியல் காரணங்களுக்காக 2008 ஆம் ஆண்டில் சட்டம் இயற்றியதையும் பார்த்தோம்.



படம் 1: வள்ளுவர் பிறந்த இடம்.

இவ் இதழில் திருவள்ளுவரின் உருவம் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டது என பார்ப்போம். தமிழ் நாட்டில் திருவள்ளுவர் பிறந்ததாக கூறப்படும் மயிலாப்பூரில் திருவள்ளுவரிற்கு ஒரு கோவில் இருக்கிறது. இக்கோயிலில் இருக்கும் இலுப்பை மரத்தடியில் தான் திருவள்ளுவர் பிறந்தார். இம்மரம் இத்தல விருட்சமாக கொள்ளப்படுகிறது. இம்மரத்தை செப்புக்காப்பிட்டு 'திருவள்ளுவர் அவதரித்த இலுப்பைமரம்' என்று பாதுகாக்கிறார்கள். அருகிலுள்ள படம் 1ஐ பார்க்கவும்.

இக்கோவிலின் தலவரலாற்றை பார்ப்போம். மயிலை நகரின் கடற்கரையை ஒட்டி இருந்த ஒரு வயல் வெளியில் இலுப்பைமரம் ஒன்று இருந்தது. அதன் அடியில் ஒரு தம்பதியினர் வந்து அமர்கின்றனர். அப்பெண் நிறைமாத கர்ப்பிணி. அவள் பிரசவ வலியால் துடிக்க அவளது கணவன் அவளை மடியில் கிடத்தி ஆதரவாக தடவுகிறார். அன்று வைகாசி மாதம் அனுஷ நட்சத்திரம் என்று அவர்




கணக்குப் போட அப்பெண் ஒரு அழகான ஆண்குழந்தையை பிரசவிக்கிறாள். பிறந்த குழந்தையை உச்சி முகர்ந்த அத்தம்பதியினர் கண்களில் நீர் மல்க அவர்கள் குல வழக்கப்படி அதே மரத்தடியில் போட்டு விட்டு நகர்ந்தார்கள்.

வயலுக்கு வந்த ஒரு வேளாளர் தம்பதியினர் அழுகின்ற குழந்தையை வாரி எடுத்து இது கடவுள் தமக்கு தந்த வரம் என மகிழ்ந்தார்கள். அக்குழந்தைக்கு வள்ளுவர் என பெயர்சூட்டி வளர்த்தார்கள். இப்போது நீங்கள் கேட்பது விளங்குகிறது வைகாசி மாதம் அனுசநட்சத்திரத்தில் பிறந்த வள்ளுவருக்கு தமிழ் பெரியார்கள் ஜனவரி மாதம் 15 ஆம்திகதியை ஏன் பிறந்த திகதி என வைத்தார்கள்? அதுதானே நான் முன்னரே கூறிவிட்டேன். அரசியல் காரணங்களுக்காக என்று. 1921இல் ஆங்கிலேயர் ஆட்சி நடைபெற்றகாலம் தனித்தமிழ் இயக்கம் என்று கூறினாலும் ஆங்கிலமோகம் மனதில் மக்களிடம் இருந்திருக்கிறது. அதாவது ஆங்கிலேயர் புதுவருடம் கொண்டாடும் ஜனவரி மாதம் 1ஆம் திகதிக்கு கிட்டவே தமிழ் புதுவருடமும் வரவேண்டும் என்ற ஒரே ஒரு காரணத்திற்காகவே திருவள்ளுவர் பிறந்த திகதி ஜனவரி 15 என அறிவிக்கப்பட்டது.

உண்மையாகவே தமிழில் அக்கறை இருந்திருந்தால், இந்துசமயத்தையும் பிராமணர்களையும் எதிர்ப்பதை மட்டுமே குறிக்கோளாக கொண்டிராவிட்டால் வள்ளுவரின் பிறந்ததினத்தை வைகாசியிலோ அல்லது சித்திரை 15, கி.மு 31 ஆம் திகதி என்று வைத்துவிட்டு சித்திரை புதுவருட தினத்தின் அன்றே திருவள்ளுவரின் பிறந்த தினத்தை கொண்டாடி இருக்கலாம் அல்லவா. வள்ளுவர் ஆண்டும் சித்திரைப் புதுவருடத் திலேயே பிறந்திருக்கும்.



படம் 2: வள்ளுவரும் வாசுகியும்

இம்மயிலாப்பூரிலுள்ள வள்ளுவர் கோவிலில் வள்ளுவர் சிலையும் அவரின் தாய், தந்தையான ஆதி, பகவன் அவர்களது சிலையும் வள்ளுவரின் மனைவி வாசுகியின் சிலையும் இருக்கின்றன. அருகிலுள்ள படம் 2ஐ பார்க்கவும். இதில் வள்ளுவர் பூணூல் உடன் சிலையில் காணப்படுகிறார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த கிரேக்க ஆசிரியரான தொலமி (Ptolemy) இயற்றிய பூகோள நூலில் Malliarpha என்பது மயிலாப்பூர் என்ற இடம் என H.D Love எழுதிய 'சென்னை சரித்திரம்' என்ற நூலில் கூறியுள்ளார். அக்காலத்தில் மயிலாப்பூர் ஒருதுறைமுகமாக இருந்திருக்கிறது. இலங்கையிலிருந்து ஏலேல சிங்கன் வியாபாரம் செய்வதற்காக இத்துறைமுகத்திற்கு அடிக்கடி வந்துள்ளதாகவும் அப்போது தான் மயிலாப்பூரில் இருந்த திருவள்ளுவருடன் நண்பனாகியதாகவும் கூறப்படுகிறது. இது வள்ளுவரை இந்துவாக காட்டும் உருவத்தை பற்றியது. இனி வள்ளுவரின் இன்னொரு உருவம் பற்றிய வரலாற்றைப் பார்ப்போம்.

1796 இல் பிரான்சிஸ் வைட் எல்லிஸ் என்னும் ஆங்கிலேய அதிகாரி சென்னைமாவட்ட கலக்டராக பணியாற்றி வந்தார். அவர் சில ஆண்டுகளிலேயே தமிழ் முதலிய தென்இந்திய மொழிகளிலும் வடமொழியிலும் பெரும்புலமை பெற்று விட்டார். தமிழ் நூல்கள் அச்சேறியிராத அந்தக் காலத்திலேயே அவர் ஏட்டுச் சுவடிகளிலிருந்து முறையாக தமிழை கற்றுத் தேர்ந்தார். தமிழ் மொழியானது சமஸ்கிருதம் போன்ற இந்தோ - ஆரிய மொழிகளிலிருந்து வேறுபட்டது என்ற உண்மையை முதன் முதலாக உலகத்திற்கு அறிவித்த பெருமை இவரையே சாரும். எல்லிஸ் துரைக்கு திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் அளப்பரிய பற்று இருந்தது. திருக்குறளில் இருந்து பல குறள்களை தேர்ந்து எடுத்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து தெளிவான உரையுடன் ஒரு அரிய நூலை இவர் எழுதினார். இதுவே திருக்குறளின் முதல் ஆங்கில மொழிபெயர்ப்பாகும். இந்நூலில் எலிஸ்துரை அவர்கள் முன்னூறுக்கும் மேற்பட்ட பழந்தமிழ் நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளதில் இருந்து அவரது ஆழ்ந்த தமிழ் புலமை வெளிப்படுகிறது.

எலிஸ்துரை தமது அரசு பணியில் கிடைத்த வாய்பை பயன்படுத்திக் கொண்டு தாம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரின் உருவத்தை ஆங்கில அரசின் பெரிய தங்க நாணயமான இரட்டை வராகனில் 1817 ஆம் ஆண்டளவில் பதிப்பித்தார். திருவள்ளுவரின் உருவம் பொறிக்கப்பட்ட நான்கு தங்க நாணயங்களில் 2 பிரிட்டனிலுள்ள இலண்டன் பொருட்காட்சி சாலையிலும் 2 இந்தியாவில் கல்கத்தா அருங்காட்சியகத்திலும் இருக்கின்றன. இதை படம் 3 இல் பார்க்கவும். இக்காசில் வள்ளுவரின் தலைமீதுள்ள குடையும், வழித்த தலையையும், முகத்தையும் காணும்போது இவரை உருவகப்படுத்தியுள்ளவர்கள் வள்ளுவரை ஒரு சமணமுனிவர் என்றே கருதியுள்ளனர் எனலாம். (படம் 4).

வள்ளுவர் சிலை ஒன்று மயிலையில் அகழ்ந்தெடுக்கப்பட்டது. அக்கற்சிலையை பற்றி தமிழ்நாடு தொல்லியல்துறை ஆய்வாளர் சா. கிருஷ்ணமூர்த்தி இச்சிலை 14ஆம் அல்லது 15ஆம் நூற்றாண்டை சார்ந்தது என்கிறார். அருகிலுள்ள படம் 5 ஐப் பார்க்கவும். இச்சிலையில் வள்ளுவர் இருகால்களையும் மடக்கி அமர்ந்த நிலையில் தியானத்தில் வலதுகை சின் முத்திரையுடன் அக்க மாலை ஏந்தியும் இடதுகை ஓலைச்சுவடி ஏந்திய படியும் இருக்கிறார்.



படம் 5 : வள்ளுவர் சிலை

இவ்வாறு பலவடிவங்களில் திருவள்ளுவர் உருவம் இருக்கும்போது தற்போது திருவள்ளுவர் என கூறப்படும் கற்பனை உருவமான சித்தர் வடிவம் எவ்வாறு வந்தது? இவ்வுருவம் 1921 இல் தமிழ் அறிஞர்கள் திருவள்ளுவர் சமயம்



படம் 3 : தங்க நாணயங்கள் - லண்டன்

சார்ந்தவர் அல்ல என்றும் அவரது நூலான திருக்குறள் எந்தச் சமயமும் சார்ந்தது அல்ல அது ஒரு தமிழ் பொதுநூல் என்றும் கூறி திருக்குறளை மக்களிடையே பரப்பவேண்டும் என முயன்றனர். அதன்பின்னர் வந்த தமிழக அரசிற்கு திருக்குறளை மக்களிடையே பரப்புவதற்கு திருவள்ளுவர் எந்த சமயத்தையும் சாராதவர் என்று கூற உருவம் ஒன்று தேவைப்பட்டது. அப்போது உருவாக்கப்பட்ட திருவள்ளுவரது கற்பனை உருவமே இப்போது தமிழக அரசால் மக்களிடையே பரப்பப்படும் திருவள்ளுவருடைய உருவமாகும். படம் 6ஐ பார்க்கவும்.



படம் 6: வள்ளுவர் கற்பனை வடிவம்

வள்ளுவர் பற்றி ஆராய்ச்சி செய்யும் பலர் எடுத்த முடிவு வள்ளுவருடைய உருவம் 200 வருடங்களுக்கு முன்னர் சென்னை அரசாங்கம் வெளியிட்ட தங்ககாசிலுள்ள (படம் 3) சமணமுனிவராக முக்குடைக்கு கீழ் தட்டு சுற்றாய் வேட்டி கட்டி ஒருவிளக்குடன் விளங்குவதே. ஆனால் தற்போதைய தமிழக அரசு வள்ளுவர் பிறந்தது என ஒருகற்பனை திகதியையும், வள்ளுவர் எம்மதமும் சார்ந்தவர் அல்ல என்று கூற ஒரு கற்பனை உருவத்தையும் வடிவமைத்து தமிழ் மக்களை தடுமாற்றம் செய்கிறது. விரைவில் எமது இளைஞர்கள் தற்கால நவீன விஞ்ஞான மற்றும் DNA வசதிகளை பாவித்து வள்ளுவரின் பிறந்த திகதி, அவரின் உருவம் என்பவற்றை சரித்திர பூர்வமாகவும், விஞ்ஞானபூர்வமாகவும் உறுதி செய்வார்கள் என்பது திண்ணம். அதுவரை எமது மூதாதையர் எமக்கு அளித்த விஞ்ஞான சார்பு நிகழ்வுகளை (தைப்பொங்கல், சித்திரைப்புத்தாண்டு) பகுத்தறிவு வாதிகள் என்னும் போர்வையில் மாற்றுவது புத்திசாதுரியமான வேலை இல்லை.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

*நன்றி: தினகரன், தினமணி, தினமணிச்சுடர்*



**சிவ ஞானநாயகன்**
vlambaram@sympatico.ca

# மாமி ஆமியா? - 1

ஆமி இல்லாத நாடுமில்லை. மாமி இல்லாதா வீடுமில்லை. (ஆங்கிலச் சொல்லான ARMY என்பதன் தமிழ்ச் சொல் “காலாட்படை” என்பதாகும்).

## ஓடும் நீர் உறைவதில்லை 17 இரண்டாம் பாகம்

அன்பார்ந்த வாசகர்களுக்கு: ஒரு பெண்ணின் வாழ்க்கை மகள் என்பதிலிருந்து ஆரம்பித்து மருமகள், மனைவி, தாய், மாமி, அம்மம்மா அல்லது அப்பம்மா எனப் பல பாத்திரங்களாக அமைவதுடன் ஒவ்வொரு பாத்திரமும் வெவ்வேறு வாழ்வியல் நிலை களில், படிமுறைகளில், உள்ளும் புறமுமாகச் சேகரித்துக்கொண்ட அனுபவங்க ளின் பிர-திபலிப்பாக அமைகின்றது. இங்கு மாமி என்ற பாத்திரம் மட்டுமே எனது கவனத்துக்கு எடுக்கப்படுவதால், கூறப்படும் கருத்துக்கள் ஒட்டுமொத்தமாக ஒரு பெண்ணின் முழுமையான மனோபாவ வெளிப்பாடாகக் கருதப்படாமல் மாமி என்ற பாத்திரத்தின் அடிப்படையில் மட்டுமே கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இக்கட்டுரை பல பகுதிகளாக வெளிவர இருப்பதனால் எந்த ஒரு பகுதியையும் தவற விடாதீர்கள். அது மட்டுமன்றி இக்கட்டுரையின் இறுதிப் பகுதி இக்கட்டுரை பற்றிய உங்களது கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க இருப்பதால் உங்கள் வினாக்களை அல்லது ஏற்கனவே இக்கட்டுரையில் கூறப்பட்ட விடயம் பற்றிய உங்கள் சுய பார்வையை தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதி உங்கள் பெயரைக் குறிப்பிடலாமா இல்லையா என்பதையும் குறிப்பிட்டு kgmaster54@hotmail.com எனும் மின் அஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.

KG Master-kgmaster@rogers.com

“மாமி ஆமியா?” எனும் இந்த ஆய்வில் மாமியை ஆய்வு செய்வதற்கு முன்னர் ஆமியை ஆய்வு செய்வோம். ஏனெனில் ஒரு ஆமியின் கட்டமைப்புக்குள் பல உபபிரிவுகள் இருப்பது போல் மாமியின் மனோபாவக் கட்டமைப்புக்குள்ளும் பல உப பிரிவுகள் உள்ளன. ஒரு ஆமியின் தன்மை அதனால் நிறைவேற்றப்படும் விடயத்தைச் சார்ந்திருப்பது போல் மாமியின் தன்மையும் அவரது செயற்பாட்டின் மனோபாவ வெளிப்பாட்டினைச் சார்ந்திருக்கின்றது. ஒரு நாட்டின் ஆமி அந்த நாட்டின் கட்டுமானத்தில் அல்லது மீள் கட்டுமானத்தில் அல்லது அவசரகால உதவிகளில் ஈடுபடுவதற்கும், யுத்தம், வன்முறை, சர்வாதிகாரம் என்பவற்றில்



ஈடுபடுவதற்கும் இடையில் பாரிய வேறுபாடு உள்ளது. அதேபோன்று மாமியானவர், புதிதாக அமைக்கப்படும் குடும்பம் ஒன்றின் கட்டுமானத்தில் அல்லது ஏற்கெனவே உள்ள குடும்பம் ஒன்றின் மீள் கட்டுமானத்தில் அல்லது குடும்பம் ஒன்றின் அவசரகால உதவிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதற்கும் குடும்பத்தில் பிரச்சினைகளை உருவாக்குதல், பழிவாங்குதல், அதிகாரத்தைச் செலுத்துதல் என்பவற்றில் ஈடுபடுவதற்கும் இடையில் பாரிய வேறுபாடு உண்டு.

நாம் அனைவரும் அறிந்த வரையில் இனம், மதம், மொழி, நாடு என்ற பேதம் எதுவுமின்றி ஒரு எதிர்மறையான கண்ணோட்டத்துக்கும், கருத்தோட்டத்துக்கும் உட்படும் பாத்திரம் மாமி எனும் பாத்திரமே. இவ்வாறு கூறும்போது உலகில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற எல்லா மாமிகளும் ஒட்டு மொத்தமாக உள்ளடக்கப்படுகிறார்களா என்ற சந்தேகம் வேண்டவே வேண்டாம். ஆமியில் நல்லவர்கள் போல் மாமியிலும் நல்லவர்கள் இல்லாமல் இல்லை. ஆனால் ஆமி என்றால் போர்க்குணம் என்ற பொதுப்பார்வை போல் மாமியைப் பற்றிய எதிர்மறையான பார்வை இருப்பதையும் நாம் நிராகரிக்க முடியாது.

இந்த நிலைக்குக் காரணம் என்ன என்பதை விளக்கும்போது ஆச்சரியத்தக்க பல விடயங்களை நீங்கள் அறிந்துகொள்ளப் போகின்றீர்கள் என்பது மட்டும் உண்மை. இன்னொரு வகையில் கூறுவதாயின் இங்கு கூறப்படும் விடயங்கள் அதி பெரும்பாலா னவர்களுக்கு இதுவே முதல் முறையாக அறிந்துகொள்வதற்கு வாய்ப்பாக அமை கின்றது என்பது எனது கருத்து. இதற்காக நாம் எல்லோரும் விளம்பரம் பத்திரிகைக்கு நன்றி கூறுவோம்.

ஒரு பெண்ணைப் பற்றி காதல், நட்பு, அன்பு, பாசம் என்பவற்றை மையப் பொருளாக வைத்து எத்தனையோ பார்வைகள், எத்தனையோ ஆக்கங்கள். காதலி, மனைவி, தாய் என்பவையே ஆக்கங்களின் மூலப்பொருளாக, ஆக்க பூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு கையாளப்பட்டு வருகின்றன. மகள் எனும் பாத்திரம் கூட அவ்வப்போது தொட்டுச் செல்லப்பட்டாலும் மாமி, மருமகள் பாத்திரங்கள் தவிர்க்கப்படுகின்றன. திரைப்படங்களிலும், தொடர் நாடகங்களில் மாமி, மருமகள் எனும் பாத்திரங்கள் குடும்பங்களில் பிரச்சனைக்குரியதாகவே கையாளப்படுகின்றன. ஒரு திரைப்படத்திலோ, நாடகத்திலோ அல்லது வேறு படைப்புக்களிலோ ஒரு தாய் தனது வாழ்நாள் முழுவதும் மருமகளை மகளாகவும், மருமகள் தனது மாமியாரைத் தாயாகவும் ஏற்றுக்கொண்டதாக அமைக்கப் பெற்றால் அது கதையாக இருக்குமேயன்றி நிஜமாக இருக்க முடியாது. இவ்வளவு உறுதிப்பாடாக நான் கூறுவதற்குக் காரணம் என்ன தெரியுமா? புரிந்துணர்வு புதைகுழிக்குள் புதைக்கப்பட்ட பின் மாமிக்கும் மருமகளுக்கும் இடையில் ஏற்படும் மனோபாவப் போராட்டமே இதற்குக் காரணம்.

முதலில் மாமி யார்?, மருமகள் யார்? என்பதிலிருந்து ஆரம்பிப்போம். காதலி என்பதும் மனைவி என்பதும் ஒரு ஆணின் பங்களிப்பால் மட்டுமே சாத்தியமாகின்றது. தாய் என்பது தனது சொந்தக் குழந்தைக-ளின் இயற்கையான உறவால் மட்டுமே சாத்தியமாகின்றது. ஆனால் மாமி, மருமகள் என்பது இந்த இரண்டும் அல்லாதது. அதுமட்டுமல்ல, ஒரு குடும்பத்தில் மாமியாக இருப்பவர் (மகனின்) தாயாகவும் இருப்பார். (இரட்டைவேடம் - இரட்டை மனோபாவம்). தாய் மாமியாகலாம் ஆனால் மருமகள் மகளாக முடியாது. அது மட்டுமல்ல. மாறுபட்ட மனோபாவ வெளிப்பாடுகளின் சுரங்கம் தான் மாமி. அந்த மாறுபட்ட மனோபாவங்கள் தான் என்ன?

அடுத்த இதழில் பார்ப்போம்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் ‘விளம்பரம்’ பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -



மஹராஜியின் உரைகள்

On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்

(416) 431-5000

1 877 707 3221

On TV

Saturdays at 11:00 am

Rogers Cable Channel - 20

Bell Express vu Channel - 219

# கலித்தொகை காட்டும் காதற் காட்சிகள்

## அறிமுகம்

சங்க இலக்கியமாகிய எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் எட்டு நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை என்பன அகப்பொருள் குறித்தனவாகவும் ஏனையவை புறப்பொருள் பற்றியனவாகவும் உள்ளன.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களுள் அறமும் பொருளும் புறப்பொருளாகவும் இன்பம் அகப்பொருளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றிலும் உறுதியாக நிற்கின் வீடு இயல்பாகவே கிட்டுமாதலால் அதுபற்றிச் சங்கநூல்கள் பெரிதாகப் பேசவில்லை.

## கலிப்பா

சங்க காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் நால்வகைச் செய்யுள்கள் வழக்கில் இருந்தன. அதனை,

ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நூலியற் றென்ப பாவகை விரியே

என்று தொல்காப்பியர் கூறுவர். (தொல்: செய். 101.)

இவற்றுள் கலிப்பா என்றால் களிப்பின் பெருக்கு, செருக்கு, ஆரவாரம் போன்ற எழுச்சிநிலைகளும் வேகமும் உள்ள செய்யுள் என்று பொருள். இது பொருளாலும் இசையாலும் பொலிவுடையது. இதனைப் படிக்கையில் எழும் ஓசை துள்ளல் ஓசை எனப்படும். அதனாலே இது ஏறி இறங்கும் ஓசையுடைய ஒரு செய்யுள்வகை என்பது புலனாகும்.

கலிப்பா தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் முதலிய உறுப்புகளைக்கொண்டு பாடப்படும்.

தரவு என்பது பிற உறுப்புகளின் பொருளைத் தொகுத்துத் தருவது. அதனால் கலிப்பாவின் முதல் உறுப்பாக இது இடம்பெறும். பொதுவாக மூன்று அடிகளில் வரும்.

தாழிசை என்பது தாழ்ந்த ஓசையையுடையது. இது கலிப்பாவின் இரண்டாவது உறுப்பு. பெரும்பான்மை இரண்டு அடிகளில் வரும். அதாவது, தரவிலும் குறைந்த அடிகளைக்கொண்டு வரும். அவ்விதம் பல பாடல்களைப் பெற்றுப் பாட்டின் இடையிலே வருவதால் இதனை இடைநிலைப் பாட்டு என்றும் அழைப்பர்.

தாழிசைக்கு அடுத்து வரும் உறுப்புக்குத் தனிச்சொல் என்று பெயர். இது ஒற்றைச் சீராகத் தனித்து நிற்பதால் தனிநிலை என்றும் விட்டு இசைக்கப்படுவதால் விட்டிசை என்றும் அழைக்கப்படும்.

சுரிதகம் என்பது தனிச்சொல்லைத் தொடர்ந்து கலிப்பாவின் இறுதியாக நிற்கும் உறுப்பு. இது ஆசிரியப்பாவாகவோ வெண்பாவாகவோ அமைக்கப்படும். இதில் ஓசை வேகம் குறைவதால் அல்லது மெலிவதால் இது சுரிதகம் என்ற பெயரைப்பெற்றது. பாட்டின் இறுதியில் வைக்கப்படுவதால் வைப்பு என்றும் உள்ளுறுப்பின் பொருள் அனைத்தையும் சுருக்கி அல்லது அடக்கிக் கூறுவதால் அடக்கியல் என்றும் இது பெயர்கள் பெறும்.



இவ்விதம் ஒரு தரவு, மூன்று தாழிசை, தனிச் சொல், சுரிதகம் ஆகிய உறுப்புகள் முறையாகப் பொருந்தி நிற்பனவற்றுக்கு நேரிசையொத் தாழிசைக் கலிப்பா என்று பெயர். காலப் போக்கில் கலிப்பா பிற வடிவங்களையும் பெறலாயிற்று. தரவு, தாழிசை ஆகியவற்றை முழுமையாக்கித் தனிப் பாடல்களாக இயற்றும் முறையால் கொச்சகக் கலிப்பா, கலித்தாழிசை, கலி-வெண்பா, கட்டளைக்கலித்துறை முதலிய வடிவங்கள் வளரலாயின. நேரிசையொத் தாழிசைக் கலிப்பாவையும் பிற ஒத்தாழிசைக் கலிப்பாவின் வடிவங்களையும் கலித்தொகை கொண்டுள்ளது.

## கலித்தொகை

இது கலிப்பாக்களின் தொகுப்பு என்ற பொருளையுடையது. ஏடுகளில் இருந்த கலித்தொகையை முதன்முதலாக அச்சிட்டு வெளியிட்டவர் ஈழத்துத் தமிழ்ப்பெரியார் திரு. சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள்.

கலித்தொகை மதுரையாசிரியர் நல்லந்துவனார் பாடிய கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றையும் பெருங்கடுங்கோ பாடிய 35 பாலைக் கலிகளையும் கபிலர் இயற்றிய 29 குறிஞ்சிக் கலிகளையும் மருதன் இளநாகனார் இயற்றிய 35 மருதக் கலிகளையும் சோழன் நல்லுருத்திரன் செய்த 17 முல்லைக் கலிகளையும் நல்லந்துவனார் பாடிய 33 நெய்தற் கலிகளையும் கொண்டுள்ளது.

கலித்தொகை ஆசிரியர் ஐவர் அல்லர்; பலராவர் என்ற கருத்தும் ஆய்வாளர் மத்தியில் உண்டு. யாவரும் உச்சிமேல் வைத்துப்போற்றும் நச்சினார்க்கினியர் உரை இந்நூலுக்கு அணியாகவுள்ளது.

கலித்தொகை தமிழ் இலக்கணம் விளக்கும் அகப்பொருளுக்கு இலக்கியமாகத் திகழும் சிறந்த தொகுதியாகும். பண்டைத் தமிழர் கண்ட ஐந்திணை ஒழுக்கவியல்புகளையும் மக்கள் உயர்வுக்கு வேண்டிய நன்னெறிகள் பலவற்றையும் இலக்கியச் சுவையுடன் தாங்கிநிற்கும் இந்நூல் 'கற்றறிந்தார் ஏத்துங்கலி' என்று போற்றப்படுகின்றது.

## அகப்பொருள்

மக்கள் துய்க்கும் இன்பங்களுள் ஆண் - பெண் கூடலால் அனுபவிக்கப்பெறும் இன்பமே உள உடல் வளர்ச்சிக்கும் உயிர்களின் மலர்ச்சிக்கும் உலக வளர்ச்சிக்கும் உகந்ததும் இயல்பானதும் இன்றியமையாததுமாகும். ஒத்த அன்புடைய ஆணும் பெண்ணும் கூடலாற் பெற்ற இன்பம், அதன் பின்னரும் உள்ளத்தில் (அகத்தில்) நின்று இன்பம் பகர்வதால் அது அகப்பொருள் எனப்பட்டது. இவ்வின்பத்தினை நல்லாசிரியர் நூல்களிற் கூறுவதற்கு நாகரிமான பல வழிகளைக் கையாண்டனர். அந்த மரபு 'புலனெறிவழக்கு' எனப்படும். அதாவது, புலன் நெறிவழக்கம் என்பது நூல் செய்யும் வழக்கம்.

புலனெறி வழக்கில் காதல் செய்யும் ஆடவன் தலைவன் என்றும் அவனை உளத்தால் விரும்பும் பெண் தலைவி என்றும் அழைக்கப்படுவர். ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தாமாகக் கூடி ஒழுகும் ஒழுக்கம் களவு என்றும் பெரியோர் அறிய மணம்புரிந்து இல்லறம் நடத்துவது கற்பு என்றும் பெயர்பெறும்.

புலனெறி வழக்கம் கற்பனையும் கலந்தது. அங்கிங்கு நடைபெறும் நடைமுறைச் சம்பவங்கள் ஓரிடத்தில் நடைபெறுவதாகவும் கற்பனை செய்யப்படும். அத்தகைய கற்பனை நாடக மரபுக்குரியது. புலனெறி வழக்கினைப் பாடுதற்குப் பொருத்தமான செய்யுள் வடிவங்கள் கலிப்பாவும் பரிபாடலுமாவை. இதனை,

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனார் புலவர் (அகத்திணை 56)

என்று கூறுவர் தொல்காப்பியனார். கலியை முதற் குறிப்பிட்டிருப்பது பரிபாட்டிலும் அதுவே சிறந்ததென்ற கருத்தையும் உணர்த்துகின்றது. இன்பம் குறித்த மனவெழுச்சிக்கு கலிப்பாவின் துள்ளல் ஓசை மிகவும் பொருந்துவதாற் புலவர் புலனெறி வழக்குக்கு அதுவே உகந்ததெனக் கொண்டனர். மேலும் தரவு, தாழிசை முதலிய உறுப்புக்கள் அகப்பொருள் மாந்தர் உரையாடல் செய்வதற்கும் உணர்வுகளை வெவ்வேறு ஓசையால் வெளிப்படுத்துவதற்கும் ஏற்றதென அவர்கள் கண்டிருத்தல் வேண்டும்.

கலித்தொகையிற் களவொழுக்கமே பெரிதும் பேசப்படுகின்றது. களவு என்று அன்று அவர்கள் கண்டது இன்றைய காதலுக்கு நிகரானது என்பது கவனிக்கத் தக்கது. 'தமிழ் என்ன தந்ததோவெனில் களவு தந்தது" என்று எழுதினார் ஈழத்துப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள். எனவே களவு என்பது பெற்றவருக்கும் மற்றும் பெரியவருக்கும் தெரியாமல் நடக்கும் தூய காதல் உறவேயாகும்.

இத்தகைய தூய உறவு தலைவன் பரத்தையை நாடிச்செல்லும் ஒழுக்கத்தினால் மதிக்கண் மறுப்போன்ற களங்கத்தையும் கொண்டிருக்கின்றது. பரத்தைபாற் செல்லும் ஒழுக்கம் அக்காலத்தில் தமிழர் மத்தியில் இருந்தது. இந்த உலகியல் வழக்கத்தைக் களவுடன் புலவர் கலந்திருப்பது நாடகச் சுவைபற்றியேயாம் என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் பொருந்தும்.



கவிஞர் வி. கந்தவனம்

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# நினைவாற்றல் - *MEMORY - 3*

'அந்தக்காலத்தில் மறதிக்கு மருந்து மாஸ்டரின் பிரம்பு'
'இந்தக்காலத்தில் மறதிக்கு மருந்து 'மைன்ட் மப்'

கட்டுரையாசிரியர் இந்த இதழில் முக்கியமாக 'மைன்ட் மப் (Mind Map)' என்ற ஒரு நினைவாற்றல் நுட்பத்தை அறிமுகம் செய்கின்றார். இந்த நுட்பத்தை அவர் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தியதன் மூலமும், கட்டுரையாசிரியரால் இந்த நுட்பத்தைக் கற்றுக்கொண்ட பலர் வழங்கிய கருத்திற்கேற்பவும் இந்த அணுகுமுறை ஒரு நல்ல வழிமுறையாக உள்ளது என்பது கட்டுரையாசிரியரின் கருத்தாகும். இந்தக் கட்டுரை பற்றிய உங்கள் கருத்துக்களையும் அறிய விரும்புகின்றோம்.

அன்பான வாசகர்களே!
கடந்த இதழில் 'மன வரைபடம் - மைன்ட் மப் (Mind Map)' என்ற நினைவாற்றல் நுட்பம் பற்றிய அறிமுகத்தோடு எவ்வாறு இந்த மன வரைபடத்தைக் கீறிக் கொள்ளலாம் என்றெல்லாம் நினைவாற்றல் கட்டுரையில் எடுத்துக் கூறப்பட்டது.

தினக்குறிப்பினை (Diary), அல்லது பாடக்குறிப்பினை (Study Notes) எமது நினைவாற்றலுக்கு நாம் எழுதிப் பாவிப்பதுபோல் நாம் வரையும் 'மைன்ட் மப்' இனை நாமே பாவித்துக் கொள்ளலாம். சில வேளைகளில் இதனை ஒரு காட்சிப்படுத்தல் ஊடகமாக பாவிக்க முடியும் என்றாலும் அதன் முக்கிய உபயோகம் அதுவல்ல. எனவே நமக்காக, நமது நினைவாற்றலுக்காக நாமே உருவாக்குவது தான் 'மைன்ட் மப்'. எனவே எமது மைன்ட் மப் இனை எமது மூளை விரும்பும் வகையில் பல வர்ணத்திலும், கூறப்பட்ட அடிப்படையான விதிகளை மட்டும் மனதில் வைத்துக் கொண்டு எவ்வாறும் கீறிக்கொள்ளலாம். எவ்வளவு அழகாக, பல வர்ணத்துடன், நகைச்சுவையான உருவங்களுடன் உள்ளதோ அவ்வளவுக்கு எமது மூளை விரும்பும். அதே நேரத்தில் நாம் எந்த விடயத்தைப் பற்றி 'மைன்ட் மப்' இனை உருவாக்குகின்றோமோ அந்த விடயம் மூலச் சொற்கள் (key words) இனைப் பாவித்து முழுமையாகக் கொடுக்கப்பட வேண்டும். இந்த மூலச் சொற்கள் பொதுவாக பெயர்ச் சொற்களாக (noun) அல்லது வலிமையான வினைச்சொற்கள் (strong verbs) ஆக இருப்பதோடு இவற்றின் மூலமாகவே முக்கியமான விடயங்கள் 'மைன்ட் மப்' இல் உள்ளடக்கப்படுகின்றன. ஒரு 'மைன்ட் மப்' ஒரே நேரத்தில் கீறி முடிக்கப் படவேண்டும் என்பதில்லை. தேடுதல் கூடி மேலதிக விபரங்கள் கிடைக்கும் பொழுதெல்லாம் அந்த 'மைன்ட் மப்' இல் அவற்றை உள்ளடக்கி விடலாம். எனவே ஒரு 'மைன்ட் மப்' உருவாக்கத்தினைத் தொடர்ச்சியான செயற்பாடாகவும் கூறிக்கொள்ளலாம். தேவையேற்படின் மேலதிக கடதாசித் தாளினை இணைத்து எமது 'மைன்ட் மைப்' இன் அளவைப் பெரிதாக்கிக் கொள்ளலாம்.

இந்த 'மைன்ட் மப்' இனை உருவாக்கும் பொழுது நாம் முழுமையாக ஈடுபடுகின்றோம் என்பதன் காரணமாகத்தான் இந்த அணுகுமுறை புரியாத பாடத்தைப் புரிய வைக்கும் ஏதனமாகவும் அமைந்து விடுவது 'ஒரு கல்லில் இரண்டு மாங்காய்' என்ற முதுமொழிக்கேற்ப ஒரே நேரத்தில் இரண்டு விடயங்களைச் சாதித்து விடுகிறோம் அல்லவா. ஒரு பாடத்தைத் திரும்பத் திரும்ப மீட்டல் செய்து நினைவாற்றல் செய்வதற்காக 'மைன்ட் மப்' உருவாக்குதல் ஒரு பொழுதுபோக்காகவும், விளையாட்டாகவும் இருக்கும் என்பதே உண்மையாக உள்ளது. சிறுவர்கள் சிறுவயதில் பொழுது போக்காகப் படங்கள் வரைந்து கொள்வார்கள். அவர்களுக்கு இந்த அணுகுமுறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் தமது ஆரம்ப வகுப்புக்களில் இருந்தே தமது நினைவாற்றல் பயிற்சியை ஆரம்பிக்கச் செய்யலாம் என்பது வெளிப்படை. இந்தக் கட்டுரையை வாசிக்கும் பெற்றோர்கள் தாமும் இந்த நுட்பத்தைப் பயன்படுத்துவதோடு தமது பிள்ளைகளுக்கும் இதை அறிமுகம் செய்து கொள்ளலாம்.

நடுத்தர வகுப்பு மாணவர்களுக்கும், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இந்த நுட்பம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த நுட்பத்தை எந்த பாடங்களுக்கும் பயன்படுத்தலாம். ஆனால் அதிக விடயங்களை நினைவாற்றல் செய்ய வேண்டிய சூழ்நிலையில் இந்த நுட்பம் அதிகம் பயனுள்ளதாக இருக்கும்.

இதைத் தவிர, 'மைன்ட் மப்' ஒரு மிகச்சிறந்த திட்டமிடல் கருவியாக உள்ளது. அது எப்படி என்று ஆச்சரியமாக உள்ளதா வாசகர்களே? எந்த வயதினருக்கும், பல சூழ்நிலைகளில் பாவிக்கக்கூடிய ஒரு சிறந்த திட்டமிடல் கருவியாகவும் உள்ளது. ஒரு கட்டுரை, கதை எழுதுதலுக்கான திட்டமிடலில் கூட இந்த அணுகுமுறை பயனளிக்கும் என திடமாக நம்பலாம். ஒரு விடயத்தைப் பற்றி 'மைன்ட் மப்' இனை உருவாக்கிக் கொண்டிருக்கும்போது அந்தக் குறிக்கப்பட்ட விடயம் தொடர்பான பல புதிய சிந்தனைகள் தோன்றுவதன் காரணத்தால் இது ஒரு சிறந்த திட்டமிடல் கருவியாக உள்ளது.

ஒரு குறிக்கப்பட்ட விடயத்தைப் பற்றி பலர் இணைந்து புதுக் கருத்துருவாக்கக் கலந்துரையாடல் (Brainstorming Discussion) செய்வதற்கும் 'மைன்ட் மப்' ஒரு நல்ல கருவியாகும். முதலில் ஒவ்வொருவரும் தமது கருத்துக்களைக் கொண்டு 'மைன்ட் மப்' இனை உருவாக்கிய பின்பு எல்லோரும் சேர்ந்து தத்தமது 'மைன்ட் மப்' பற்றி கலந்துரையாடுவதன் மூலம் பல புதிய கருத்துக்கள் தோன்றுவதற்கும், பொருத்தமான முடிவுகளை எடுப்பதற்கும் பயனுடையதாக இருக்கும்.

இப்பொழுதெல்லாம் சுயவிபரக் கோவை (Resume) தயாரிப்பதற்குக் கூட இந்த 'மைன்ட் மப்' இனை பாவிக்கின்றார்கள் என்பது ஆச்சரியத்திற்குரியதே. ஒருவர் தனது கல்வி, பட்டறிவு, மேலதிகத் திறமைகள் எல்லாவற்றையும் 'மைன்ட் மப்' முறைப்படி கீறி அதிலிருந்து தனது சுயவிபரக் கோவை இனைச் செய்யத் தொடங்கலாம் என்பதை அறியும் போது இந்த 'மைன்ட் மப்' இன் பிரயோகம் எவ்வாறெல்லாம் வளர்கிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

ஒரு சிலர் கூட்டத்தில் பங்குபற்றிக் கூட்ட அறிக்கையைச் செய்வதற்குக் கூட 'மைன்ட் மப்' முறைப்படி குறிப்பெடுத்துக் கொள்கிறார்கள். பல வேலையிடங்களில் கூட 'மைன்ட் மப்' இனைப் பிரயோகிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். நேர்முகப்பரீட்சை யில் கூட 'மைன்ட் மப்' பற்றி தெரியுமா என்று கேட்கும்காலம் விரைவில் வந்து விடும்.

இந்த 'மைன்ட் மப்' இனைக் கீறுவதற்குக் கூட நாளுக்கு நாள் ஏராளம் மென் பொருட்கள் வெளிவந்தவாறு உள்ளன. அவ்வளவு தூரம் இதன் முக்கியத்துவத்தை பலரும் உணரத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஒரு முழுப்புத்தகத்தைப் படிக்க வேண்டும் அத்துடன் அந்தப் புத்தகத்தில் உள்ள விடயங்கள் உங்கள் மனதில் பதிய வேண்டும் என்ற நிலை வருகின்றபோது அந்தப் புத்தகத்தில் உள்ள முக்கிய விடயங்களை ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட 'மைன்ட் மப்' இல் கீற வேண்டும் என்பதை உங்களின் இலக்காகக் கொள்ளுங்கள். அவ்வாறு கீறிய 'மைன்ட் மப்' இனைச் சுவரில் மாட்டி வைத்து அவ்வப்போது மீட்டல் செய்து கொள்ளுங்கள். புத்தக விடயங்கள் உங்கள் நினைவில் பதிந்து விடும். நீங்கள் அண்மையில் எந்திரன் படம் பார்த்திருந்தால் அதில் றோபோ (Robot) ஒரு புத்தகத்தில் நினைவில் வைத்திருக்க வேண்டிய விடயங்களை எவ்வாறு விழுங்கியது என்று பார்த்திருப்பீர்கள். அவ்வாறு செய்ய மனிதரால் முடியாவிட்டாலும் நிச்சயமாக படிப்பதை இலகுவாக நினைவு படுத்த 'மைன்ட் மப்' குறிக்கப்பட்டளவு உதவும் எனத் திடமாக நம்பலாம்.

குறிப்பாக உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்கள் தமது புத்தகங்களில் உள்ள ஒவ்வொரு அத்தியாயங்களுக்கும் ஒரு 'மைன்ட் மப்' இனைச் செய்து கொள்வது நல்லது. அநேகமாக மூன்றாவது அத்தியாயம் படிக்கத்தொடங்க முதலாம் அத்தியாயம் மறக்கப்பட்டு விடும். 'மறதிக்கு

**தொடர்ச்சி 16ஆம் பக்கம்**



உங்களது பிள்ளையின் ஒளித் தோற்ற விளையாட்டு நாட்டம் அவர்களை எங்கு கொண்டு செல்லலாம் என்பதை பார்க்கவும்

மின்சார பொறியியலாளர்
தொழில் வடிவமைப்பாளர்
பிளாஸ்டிக் தொழில்நுட்பாளர்
கருவிகள் பொறியியலாளர்
வினியோக மேலாளர்
சந்தைப் படுத்தல் உபதலைவர்
கணனி விளையாட்டு உருவாக்குபவர்
வரைகலை வடிவமைப்பாளர்
உருவாக்கல் தனியுரிமை வழக்கறிஞர்
மறையீட்டுப் பகுப்பாய்வாளர்
மென்பொருள் தொழில்நுட்பாளர்
தொழிற்சாலை பொறியியலாளர்
பொறிமுறை வரைவாளர்
இரசாயன விஞ்ஞானி
மின்கருவித் தொழிலாளர்
பௌதீக விஞ்ஞானி
மென்பொருள் பொறியியலாளர்
கேட்பொலி தொழில்நுட்பாளர்
இழை ஒளி தொமில்நுட்பாளர்
உற்பத்தி பொறியியலாளர்
சரக்கு வியாபாரி
தரக் கட்டுப்பாடு தொழில்நுட்பாளர்
கணனி பகுப்பாய்வாளர்
லேசர் தொழில்நுட்பாளர்
நுகர்பொருட்கள் வடிவமைப்பாளர்
பிளாஸ்டிக் உருக்கிவார்ப்பு தொழில்நுட்பாளர்
மின்னணுக்கருவிகள் பொறியியலாளர்
கருவி வடிவமைப்பாளர்
நிதிக் கணக்குப் பரிசோதககர்

ஒரு தீவிர உணர்ச்சியை

ஒரு வீச்சான உபகாரப்பணம், மாணவர் உபகாரப்பணம் அத்துடன் கடன்களுடன் ஒரு கல்லூரியிலோ அல்லது சர்வகலாசாலையிலோ அவர்களை ஆரம்பிக்க வைப்பது நீங்கள் நினைப்பதிலும் பார்க்க இலகுவானது.

ontario.ca/myfuture

ஒன்ராறியோ அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது

Ontario

# கீழ் முதுகு...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

கர்ப்பம் சம்மந்தப்பட்ட உறுப்புகளும் பாதிப்படையும்.

## கீழ்முதுகுத்தண்டு வலி வராமல் தடுக்க



(1) உணவு முறை சீராக இருக்கவேண்டும்

(2) மலச்சிக்கல் வராமல் பார்க்க வேண்டும்.

(3) எளிதில் சமிபாடடையக் கூடிய உணவுகளை உட்கொள்வதுடன் வாயுவை அதிகரிக்கும் உணவுகளை முடிந்தவரை தவிர்க்கவும்.

(4) இரவில் காரம், புளிப்பு அதிகமாக சேர்ந்த உணவுகளைத் தவிர்ப்பதுடன் அதிகமாக உண்ணக்கூடாது.

(5) நார்ச்சத்து மிகுந்த பழங்களை அதிகம் உண்பது சிறந்தது.

(6) காலை உணவு கண்டிப்பாக சாப்பிட வேண்டும்.

(7) ஒரே இடத்தில் அதிக நேரம் அமர்ந்து வேலை செய்பவர்கள் சிறிது நேரம் எழுந்து நடப்பது நல்லது.

(8) இரவு உணவு உண்டபின் உடனடியாகப் படுக்கைக்குப் போவதைத் தவிர்க்கவும்.

(9) மாதவிலக்கு காலங்களில் பெண்கள் தகுந்த ஓய்வு எடுக்கவேண்டும்.

(10) இரத்தத்திலும் நுரையீரலிலும் உள்ள சளியை மாற்றுவதற்கும் இரத்த ஓட்டத்தைச் சீராக செயல்பட வைப்பதற்கும் தகுந்த யோகாசனங்கள் மற்றும் மூச்சுப்பயிற்சி முறைகளை பழகி வருவது சிறந்தது.

(11) இத்துடன் வாம பரிகார முறைகள் மற்றும் பொருத்தமான மசாஜ் முறைகளாலும் இதனை நிவர்த்தி செய்யலாம்.

# நினைவாற்றல்

15ஆம் பக்கத்தொடர்ச்சி

மருந்தாக மாஸ்டரின் பிரம்பு' கிடைக்காத இந்த ஊரில் 'மறதிக்கு மருந்து மைன்ட் மப்' என்ற சொற்தொடர் ஆட்சியைப் பிடிக்கின்றது என்று சொல்லலாம் எனத் தோன்றுகின்றது. ஒரு கதவு மூடினால் இன்னொரு கதவு திறக்கும் என்று கூறுவார்கள் அல்லவா.

learner so I also incorporate different colours and pictures to enhance my mind maps. நான் இந்த 'மைன்ட் மப்' இனைப் பரீட்சைகளுக்குப் பயன்படுத்தியதால் எனது பாடங்களில் அதிக புள்ளிகளைப் பெற்றதோடு அதிக கவனத்தையும் செலுத்தக் கூடியதாக இருந்தது.' இவரைப் போல் பல மாணவர்கள் 'மைன்ட் மப்' மூலம் பயனடைய முடியும் என்பது வெளிப்படை.




ஒரு பாடப்புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் 'மைன்ட் மப்' இனைக் கீறிக்கொள்வதோடு அவற்றைச் சிபார்சு செய்யப்பட்ட கால இடைவெளிகளில் மீட்டல் செய்து வரும்போது அந்தப் பாட விடயங்களை இலகுவாக நினைவில் வைத்துக் கொள்ளலாம். இங்கே கட்டுரை வடிவத்தில் உள்ள விடயங்களை 'மைன்ட் மப்' இல் கொண்டு வந்து அதன் மூலம் நினைவாற்றல் செய்கின்றோம். ஆனால் ஒரு கட்டுரையை எழுதுவதற்கு இதற்கு எதிர்மாறாக எமது சிந்தனைகளை 'மைன்ட் மப்' இல் கீறி அதனை அடிப்படையாகக் கொண்டு எளிதாகத் திட்டமிட்டு எழுதிக் கொள்ளலாம்.

சில வருடங்களுக்கு முன்பு, என்மூலமாக இந்த நுட்பத்தை அறிமுகம் பெற்ற பல்கலைக்கழக மாணவி தரண்யா கெங்காதற்றா கீறிய 'மைன்ட் மப்' இந்தக் கட்டுரையுடன் இணைக்கப்பட்டுள்ளது. அவர் தனது எண்ணத்தை இங்கே தருகிறார். 'நான் பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு மாணவி. நான் 'மைன்ட் மப்' இனை கடந்த மூன்று ஆண்டுகளாகப் பாவித்து வருகின்றேன். இதனால் நான் அதிக பலனைப் பெற்றுள்ளேன். I am a visual

எமது வாழ்வில் நாளொன்றுக்கான, வாரத்திற்கான, அல்லது மாதத்திற்கான திட்டமிடலைச் செய்வதற்குக் கூட 'மைன்ட் மப்' இனைக் கீறிக் கொள்ளலாம். இந்த 'மைன்ட் மப்' இனை நிறுவனங்களில் எண்ணற்ற தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். இந்த அற்புதமான அணுகுமுறையை வாசகர்களும் பயன்படுத்திப் பலன் அடைவார்கள் என்பது எதிர்பார்ப்பாகும்.

தொடரும்....



- அகணி -
authorakani@yahoo.com




## LOVE..IS..(NOT) BLIND

மேரி : அலெக்ஸ்..எங்கள் காதலைப்பற்றி உங்கள் வீட்டில் சொன்னீர்களா..
அலெக்ஸ்: யேஸ்
மேரி : ஓ..ஐ..ஆம்..வெறி ஹப்பி..
என்ன சொன்னார்கள்..?
அலெக்ஸ் : அண்ணா என்னை ஏஜென்டுக்குக் கொடுத்த காசும் படிச்சசெலவும் ஒரு லட்சம் டொலர்..வாங்கிக்கோண்டு..வெடிங் அறேஞ்மென்ட் ..செய்யட்டாம்..
மேரி : அப்போ எங்கள் காதல்..?



# கீழ் முதுகுத்தண்டு வலி - *Lower Back Pain*

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

கடந்த காலத்தில் உடல் உழைப்பு பிரதானமாக இருந்தது. இன்று அப்படி இல்லை. அடுத்த தெருவுக்கு செல்வ தென்றால் கூட வாகனம் தேவை. நடை என்பதே பலருக்கு மறந்து போய்விட்டது. அத்துடன் வீட்டு வேலைகள் பலவும் உடல் உழைப்பின்றி இயந்திரத்தின் உதவியுடன் செய்யவேண்டிய நிலை. இன்று மேலும் பொருளாதரத் தேவைகளின் காரணமாக பணம் தேடி அலையும் இவர்களுக்கு மன உழைச்சல், மனஅழுத்தம் போன்ற நோய்களின் தாக்கம் ஏற்படுகின்றது.

இதனால் பெரும்பாலானோர் நீரிழிவு, இரத்த அழுத்தம், இடுப்பு வலி அதாவது கீழ்முதுகுத்தண்டு வலி, தோள்ப்பட்டை வலி, மூட்டு வலி என்று பலரும் அவதிப்படுகின்றனர். ஆண், பெண் இருபாலாரையும் பாதிக்கும் கீழ் முதுகுத் தண்டு வலியைப் பற்றி இப்போது தெரிந்து கொள்வோம்.

### கீழ் முதுகுத்தண்டு வலி உருவாகக் காரணங்கள்.

நேரம் தவறி உண்பதாலும், இரவில் அதிக காரம், புளிப்பு சேர்ந்த உணவுகளை உண்பதாலும், வாயுவை அதிகரிக்கச் செய்யும் உணவுகளை அடிக்கடி உண்பதாலும் அஜீரணம், மலச்சிக்கல் உண்டாகின்றது. இதனால் உடலில் புளிப்புத்தன்மை அதிகரித்து வாயு மேலே எழுந்து தலையில் நீர்கோத்து துன்நீராக



மாறுகின்றது. இது பின் சூலை நீராக மாறி கழுத்துப் பகுதிக்கு வந்து முதுகுத்தண்டு வழியாக இடுப்புப் பகுதிக்கு வந்து தங்கி நீர்கோக்கும். இதனால் இடுப்புப் பகுதி இறுக்கமடையும். இதன்பின் கீழ் முதுகுத்தண்டில் வலி ஆரம்பிக்கும். இதன்பின் அதை இளைக்கும் சதைகளும் இறுக்கமடைந்து வலியை மேலும் கூட்டும். இதனால் குனிந்து நிமிர்வதே கஷ்டமாகி விடும். கால், தொடை பகுதிகளுக்கும் வலி பரவும்.

அடுத்து கீழ்முதுகுத்தண்டு வலிக்கு (Lower Back Pain) பிற காரணங்களான அதிக குளிர் பானங்களை அருந்துவது, கம்யூட்டரின் முன் பல மணி நேரம் அமர்ந்து வேலை செய்வது, வாகனங்களை வெகுதூரம் ஓட்டுவது இடுப்பில் வலியை ஏற்படுத்தும். இதனால் இடுப்புப் பகுதியில் வில்விசை நரம்பு பாதிப்படையும். இந்த வில்விசை நரம்புதான் மனிதன் உட்கார்ந்து எழுவது, படுத்திருந்து எழுவது, பொருட்களைத் தூக்குவது, குனிந்து நிமிர்ந்து வேலை செய்வது போன்றவற்றிற்கு உதவியாக இருப்பது.

கீழ்முதுகுத்தண்டு வலியால் சிலருக்கு உணர்ச்சி நரம்புகள் பாதிப்படையும். இதனால் ஆண், பெண் இருபாலார்க்கும் தாம்பத்திய உறவில் கூட சில பிரச்சனைகள் ஏற்படும். பொதுவாக பெண்களுக்கு கீழ்முதுகுத்தண்டு வலி இருந்தால் மாதவிடாய் பிரச்சினை ஏற்படும். அத்துடன்



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# குழந்தைகளுக்கு ஏற்படும் குறைபாடும், வியாதிகளும் எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## *Children Diseases*

ஒரு சிசு தாயின் கற்பப்பையில் இருந்து வெளியே வந்த பின் நாம் பல விடயங்களை கவனித்துச் சிந்தித்து செயலாற்ற வேண்டும். ஒரு குழந்தை பிறக்கும் போது பெரும்பாலும் எடை 4 கிலோவிற்கும் குறையாது இருத்தல் மிக நன்று. இதற்கு குறைவாக இருந்தால் அதனை எடை குறைந்த அல்லது குறைமாதக் குழந்தை எனக் கருத இடம் உண்டு. பிறக்கும்போது குழந்தைக்கு தாயில் இருந்து பிரிக்கப்பட்ட நஞ்சுக்கொடி 5 - 10 நாட்களுக்குள் தானாக விழுந்து விடும் தன்மையுடையது. குறிக்கப்பட்ட 5 - 10 நாட்களுக்குள் அதில் தொற்றுக்கள் ஏற்படாது பாதுகாத்துக் கொள்ளவும், இதற்கு தொற்றுநீக்கித் திரவங்களைக் கொண்டு அகற்றவும் முடியும்.

குழந்தைக்கு உடல் நலம் குன்றிக் காணப்படும்போது தங்களின் உரிய வைத்தியர்களிடம் காட்டிச் சிகிச்சை பெற்றுக்கொள்ளுங்கள். சிறு ஆண் குழந்தைகளுக்கு சிலவேளையில் விதைப்பையில் உள்ள விதை ஒன்று மட்டும் முதலில் தென்படும். இதையிட்டு யோசித்து கவலைப்படத் தேவையில்லை. இவ்விதையானது குழந்தையின் அடிவயிற்றில் இருந்து சில நாட்களில் கீழ் இறங்கி உரிய இடத்திற்கு வந்து கொள்ளும் என அறிய முடிகின்றது.

அது மாத்திரமல்ல சில ஆண் குழந்தைகளுக்கு நீர் தேக்கத்தினால் விதைப்பகுதி பெரிதாக இருக்கும் எனவும் இந்நிலை ஒருவருடத்தில் சாதாரண நிலைக்கு வந்து விடும் எனவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் குடல் இறக்கம் காணப்படின் அது பற்றிய விபரம் யாவற்றையும் தங்கள் வைத்தியர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். எதற்கும் கவலைப்படத்தேவையில்லை. குழந்தை பிறந்த பின் அவர்களின் சகல உறுப்புகளையும் நன்கு கவனிக்கப்படல் வேண்டும். சில குழந்தைகளின் கண், காது, மூக்கு, சொண்டு போன்றவை குறைபாடாகக் காணப்படுவதும் உண்டு. அப்படி ஏதும் ஏற்பட்டிருப்பின் அதற்குரிய வைத்தியர்களிடம் சென்று பரீட்சித்து ஆலோசனை பெற்றுக்கொள்வது மிக முக்கியமாகும். சில குழந்தைகள் காதில் ஏதும் உள்குறைபாடு இருந்தால் மௌன-மாக இருப்பதுண்டு. குழந்தை பிறந்தவுடன் அங்க அசைவு முக்கியமாகும். குழந்தை



வளர்ச்சி அடைந்து வரும்போது அவர்களின் செயல் சிறப்படைய வேண்டும். இதற்கு மௌனநிலை நீக்கப்படல் வேண்டும்.

ஒருகுழந்தை பிறந்து 3 - 6 மாதங்களுக்குள், ஒரு ஒலியைக் கேட்டவுடன் உடம்பை அசைத்துக் கண்களையும் சிமிட்டி அல்லது கை, கால்களை அசைத்து, விரித்து அழத்தொடங்குவதை நாம் நன்கு அறியமுடியும். இவ்வேளையில் குழந்தை சுவாசிக்கும் ஆற்றலும் திறம்படும். பெரும் பாலும் 7 - 12 மாதங்களில் செவிப்புலன் நன்கு அதிகரிக்க ஆரம்பிக்கும். அப்பொழுது பார்வையிடும் போது தலைப்பகுதியை உயர்த்தி, உடம்பைத் திருப்பும் நிலை எமக்கு தெரியவரும். இவ்வேளை ஒன்றின் மீது கவனம் செலுத்தும் இயல்பும் ஏற்படும். இவ்வேளையில் குழந்தையின் அழுகுரல் கேட்கும்.

செவிப்புலன் அற்ற குழந்தைகளாயின் 6 மாதங்களுக்குள் அசைவும், ஒலிச்சத்தமும் குறைந்து காணப்படும். தாய் அன்புடன் குழந்தையை அழைக்கும்போது ஒலியின் சத்தம் கேட்காமல் பராமுகமாக தோன்றுவார்கள். குழந்தைக்கு செவிப்புலன் குறைபாடு இருப்பதினால் விளையாட்டுப் பொருட்களின் ஒலிச் சத்தமும் கேட்காது. ஆனால் பார்வையில் பொருட்களைப் பார்த்த படியிருப்பார்கள். மௌனநிலை அவர்களின் அறிவு வளர்ச்சிக்கு பாதக-மாக அமைந்து எமக்கு கவலையை ஏற்படுத்தி விடும்.

எனவே உரிய நிலைமையை நன்கு கவனித்து தகுந்த சிகிச்சையை பெற்றுக் கொள்வது பெற்றோரின் முக்கிய கடமையாகும். 10, 12 மாதங்களுக்குள் நிலைமையை அறிந்து கொள்வது நன்மை பயக்கும்.

சாதாரணமாக குழந்தைகள் பேச ஆரம்பிக்கும் வயதில் வேறுபாடுகள் உண்டு. ஒருவயதில் அல்லது இரண்டுவயதில் பேசமுடிந்தால் அது குறைபாடானபிள்ளை அல்ல. சில சொற்களை மாத்திரம் உச்சரிப்பதும் உண்டு. அச்சொற்களை உச்சரிக்கும் போது அதனை நன்கு பழக்கத்தில் கொண்டுவருவதற்கு அச்சொற்களை பலமுறை குழந்தைக்கு முன் இருந்து சொல்லி கொடுத்து வருதல் வேண்டும். இதனால் அக்குழந்தைகள் வளர்ந்து வரும் காலத்தில் பேசவும், கற்கவும், புரிந்து கொள்ளவும் முடியும். எனவே குழந்தைகளுடன் அதிக நேரம் ஈடுபட்டு நற்சொற்களை தேர்ந்தெடுத்து சொல்லிப் புரியவைக்க வேண்டும். இது பெற்றோராகிய எமக்கு முக்கிய கடமையாகும். பல வழிகளில் முயற்சித்து நாம் கூறும் சொற்களை உச்சரிக்கமுடியாத நிலை இருந்தால் உரிய வைத்தியரைக் கண்டு நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்.

சில குழந்தைகளுக்கு உறக்கத்தில் குறைபாடு காணப்படும். இதனால் பெற்றோர் சிரமப்படுவதுண்டு. குழந்தைபிறந்ததிலிருந்து தினமும் 1 - 2 மாதங்களுக்குள் 20 மணித்தியாலங்களும், 3 வயதிற்குள் இரவுமுழுவதும் தூங்க முடியும் எனவும் ஆய்வுகள் கூறுகின்றன. இப்படி அமையாமல் இருப்பதற்கு சில காரணங்களும் சடுதியாக நிகழ்வதுண்டு. அதாவது குழப்பநிலைகளும், வேறுபாடுகளும் இருக்கலாம். இந்நிலை இருப்பின் தவிர்த்துக் கொள்வது எமது கடமையாகும்.

மேலும் நித்திரை கொள்ளும்போது உடல்நிலை ஒரு நிலையில் இருப்பதில்லை. ஒவ்வொரு இரவிலும் நித்திரைச் சுழற்சி, கழிந்தவண்ணம் இருக்கும். இந்த நித்திரைச் சுழற்சி வயதுவந்தோருக்கும், குழந்தைகளுக்கும் வேறுபட்டவையாகும். அதாவது 3 - 8 மாதங்கள் உள்ள குழந்தைகளின் நிலை 47 நிமிடம் அளவு எடுப்பதாகவும், பெரியோர்களை விட நித்திரை குழம்பும் இயல்புடையவராகவும் திகழ்வார்கள் எனவும் அறியமுடிகின்றது. குழம்பும் நித்திரை மீண்டும் வரலாம். ஆனால் அழுது அடம்பிடித்தால் அது ஏதும் பிரச்சினை குழப்பம். தாமதம் ஏற்பட்டால் குழந்தை வீறிட்டு அழத் தொடங்கும். அவை யாவும் நிவிர்த்தியானால் மீண்டும் குழந்தை உறங்குவதற்கு தயாராகிக் கொள்ளும். சாதாரண நிலையில் குழந்தை உறங்கும் வேளையில் அணுக்கத்துடன் காணப்படின் தாங்கள் அண்மையில் சென்று அணைத்து உறங்கச் செய்யும் வழமையுண்டு. ஆனால் அப்படி செய்வதினால் குழந்தை உறங்குவதற்கு எம்மை எதிர்பார்த்து வீறிட்டு அழுதபடி இருக்கும். இந்நிலை இயற்கை உறக்கத்திற்கு தடையாக அமைந்து விடும். எதற்கும் ஓரளவு விட்டுக் கொடுக்க வேண்டும். இது நன்மைக்கேயாகும்.

தொடரும்....

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.718.3909



## அரசியலில் புதிய பொறுப்புகள் ஏற்கும் சாமி அப்பாத்துரை

கனடாவின் பெருநீரோட்ட அரசியலில் ஆழ அகல கால் பதித்து கடந்த இரு சகாப்தங்களாக பணிபுரிந்து வருகின்ற சாமி அப்பாத்துரை அவர்களுக்கு புதிய பொறுப்புகள் கொண்ட பதவியை அவர்சார்ந்த ஒன்ராறியோ புரோக்கிரசிவ் கட்சி வழங்கியுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் 2011 மாநில அரச தேர்தலில் குழுவின் உறுப்பினராக அவர் சார்ந்த கட்சி அவரை தெரிவு செய்துள்ளது. அவர் அக்கட்சியின் தலைமைப் பணிமனையில் இத்தேர்தலின் பல தொகுதிகளில் பணியாற்ற உள்ளார்.

திரு. சாமி அப்பாத்துரை அவர்களது சமுக, அரசியல் பணிகள் பல மட்டங்களில் பல்லின மக்கள் மத்தியில் அவருக்கு பெரும் மதிப்பையும் செல்வாக்கையும் வழங்கியிருக்கிறது. அவர் சேவைகளையும் பெறுபேறுகளையும் நன்கறிந்த புரோக்கிரசிவ் கொன்சவேற்றி கட்சி அவருக்கு பல புதிய பொறுப்புமிக்க இந்தப் பதவியை வழங்கியிருக்கிறார்கள்

இப்பணிகளை செய்யும் பொறுப்புகளை இவர் ஏற்றுக்கொண்டதன் பிரகாரம் இவர் இம்முறை ஸ்காபுறோ சென்டர் தொகுதியில் போட்டியிடுவதிலிருந்து விலகிக்கொள்கிறார். இருப்பினும் அவரது பணிகள் அத்தொகுதியிலும் தொடர்ந்து இருக்கப்போவதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் தனக்கு பல வகைகளில் ஆதரவு, உதவிகள் நல்கிய நண்பர்கள், ஆதரவாளர்கள், அரசியல் வாதிகள், தொழிலதிபர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் தொடர்ந்தும் ஆதரவை நாடியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார். கனமான எம்மினம், தரமான மாநில மக்கள் வாழ்வு பெற எல்லோருடனும் இணைந்து செயல்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்-இலவச ஆலோசனை வழங்கப்படும்

தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.718.3909

வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# திரை விமர்சனம் - ஆடுகளம்

'பொல்லாதவன்' திரைப்பட வெற்றிக் கூட்டணியான நடிகர் தனுஷ் - இயக்குநர் வெற்றிமாறன் அணியின் இரண்டாவது வெற்றித் திரைப்படம். பொல்லாதவனில் சிறு திருட்டும் தேடலும் வன்மமும் கலந்த வடசென்னை நகர்ப்புற கதை சொன்ன இக்கூட்டணி, இம்முறை போட்டி, பொறாமை, பணம், பெருமை, பாசம், காதல், குரோதம் என மனித மனங்களின் இத்தனை முகங்களும் சேவல்களாக மாறிக் கொத்திக் குதறும் மதுரை சேவல் சண்டையை ஆடுகளமாக்கி இருக்கிறது. தலைசிறந்த உலகத் திரைப்படங்களில் ஒன்றான 'பை சைக்கிள் தீவ்ஸ்' பாதிப்பில் 'பொல்லாதவன்' செய்த வெற்றிமாறன், 'அமரோஸ் பெரோஸ்' பாதிப்பில் 'ஆடுகளம்' செய்திருக்கிறார். வேறு மொழி திரைப்படங்களை காட்சிக்குக் காட்சி அப்படியே தழுவி எடுத்து, மாட்டிய பிறகும் மறுக்கும் தமிழ் இயக்குநர்கள் மத்தியில், ஒரு படைப்பிலிருந்து பெறும் பாதிப்பில் தமிழ் மண் சார்ந்த ஒரு புதிய கதையை உருவாக்கியிருக்கும் வெற்றிமாறன், முதல் படத்தைப் போலவே தான் எதைப் பார்த்து இப்படத்தை எடுத்தேன் என நேர்மையாகச் சொல்லியிருப்பது பாராட்டப்பட வேண்டிய விஷயம். மற்றவர்கள் பின்பற்ற வேண்டிய விஷயம்.

**பிலிம்நியூஸ் கிருஸ்ணன்**

மதுரை திருப்பரங்குன்றத்தை சேர்ந்த பேட்டைக்காரர் (ஈழக் கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்), அவர் கூட்டாளிகள் அயூப், துரை (கிஷோர்), கருப்பு (தனுஷ்) ஆகியோர் சேவல் சண்டையில் கொடி கட்டிப் பறக்கின்றனர். இவர்களை ஒருமுறையாவது ஜெயித்துவிடவேண்டும் என்ற வெறியோடு அலைகிறது இன்ஸ்பெக்டர் ரத்தினசாமி அணி. இரு குழுக்களுக்கும் பிரச்சனை ஆகிவிடுவதால் இனி இன்ஸ்பெக்டருடன் சேவல் சண்டைக்கே போகமாட்டேன் எனக் கூறிவிடுகிறார் பேட்டைக்காரர். ஆனால், கூட்டாளியான அயூப்பைக் கொன்றதோடு மட்டுமில்லாமல், காவல்நிலையத்தில் வைத்து அவமானப்படுத்துவதால் பேட்டைக்காரர் இன்ஸ்பெக்டரிடம் சவால் விடுகிறார். சேவல் சண்டையில் இன்ஸ்பெக்டரின் ஒரு சேவல் ஜெயித்தால், மொட்டைப் போட்டுக்கொண்டு, காலில் விழுந்து மன்னிப்பு கேட்பதோடில்லாமல், அதன்பின் சேவல் சண்டையில் ஈடுபடவே கூடாதென்பது பந்தயம். இப்படி இந்த இரு குழுவினரின் பகையும் போட்டியுமாக கதையின் முதற்பாதி நகர்கிறது.

சேவல்சண்டை நுணுக்கங்களின் பிதாமகர் பேட்டைக்காரர். சேவலும் பேட்டைக்காரரும் தான் உயிர் கருப்புக்கு! ஒவ்வொரு பந்தயத்துக்கும் சேவலைத் தேர்வு செய்கையில் சண்டையில் நிற்காது எனத் தெரிந்துவிட்டால் சேவலை அறுத்துப் போட்டுவிடும்படி சொல்லுவார் பேட்டைக்காரர். கருப்பு தயார் செய்யும் சேவலையும் இதுபோல், தேறாது என்று பேட்டைக்காரர் அறுத்துப் போடச்சொல்ல, முதல்முறையாக பேட்டைக்காரர் சொல்லை மீறுகிறான் கருப்பு. அந்த சேவலைத் தன்னுயிராகக் கருதும் கருப்பு, வைராக்கியமாக அந்தச் சேவலைத் தன் மொத்தத் தொழில் நுணுக்கத்தையும் உபயோகித்துத் தயார் படுத்துகிறார். சரியான நேரத்தில் ஒரு பலப்பரீட்சையில் பேட்டைக்காரரை மீறித் தன் சேவலைக் களமிறக்குகிறான் கருப்பு.... அந்த பந்தயத்திலும் கருப்பின் சேவல் ஆக்ரோஷமாய்ப் போராடி வெற்றி தேடித் தருகிறது. இதில், பேட்டைக்காரர் சந்தோஷப்படுவதாகக் காட்டிக்கொண்டாலும், அவரது ஈகோ ஆக்ரோஷமடைகிறது.




பேட்டைக்காரரோடு கருப்புக்கு ஏற்படும் இந்தச் சிறு மோதலைப் பயன்படுத்தி, கருப்புக்கு பணத்தாசை காட்டி உசுப்பேற்றுகிறார் இன்ஸ்பெக்டர். பார்த்தால் மிக விறுவிறுப்பாக இடம்பெறும் சேவல் சண்டையில் மீண்டும் கருப்பு ஜெயித்து விடுகிறார். அடுத்த பேட்டைக்காரன் என்று தனுஷை எல்லோரும் போற்றிப் புகழ, வில்லன் ரத்தினசாமி கதையிலிருந்து ஒதுங்கி, பேட்டைக்காரருக்கும் கருப்புக்கு இடையே புதிதாக முளைக்கும் வில்லங்கங்கள் ஆடுகளத்தை அதகளப்படுத்துகின்றன.

முதல்பாதி வரை வேகமாக செல்லும் திரைக்கதை, இரண்டாம் பாதியில் மெதுவாகி விடுகிறது. இரண்டாம் பாதி முழுக்கத் திருப்பங்கள்.. திருப்பங்கள்.. திருப்பங்கள்... ஆனாலும், ஏனோ கதை நிற்கிறது.

கதைப்படி பேட்டைக்காரராக வரும் ஈழக் கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் கதாநாயகன். அடர் மீசையும் அதற்குள் புதைந்த ஆழமான கண்களும் ஒரு திமிரான நடையுமாக ஆடுகளத்தின் சண்டைசேவல் இந்தப் பேட்டைக்காரர்தான். ராதாரவியின் ஆழமான, அடைத்த குரல் ஜெயபாலனின் தோற்றத்துக்கு மிகப் பொருந்திப் போகிறது. தொடர் வெற்றிகளால் நிமிர்ந்த பெருமையுடன் வலம் வந்த பேட்டைக்காரருக்கும், தன்னை விட தன் சிஷ்யன் பெருமை பெறும்போது மனதில் மறுகும் பேட்டைக்காரருக்கும், கடைசியில் முற்று முழுதாக இயல்புகள் மாறிப்போய் உணர்வுகளால் மூடப்பட்ட பேட்டைக்காரருக்கும் காட்டப்படுகிற வித்தியாசங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. சேவற்சண்டை பஞ்சாயத்தில் இன்ஸ்பெக்டர் ரத்தினத்திடம் உறுமுவதாகட்டும்... தனுஷை விட்டுக் கொடுக்காமல் கிஷோரிடம் பேசுகின்ற காட்சியிலாகட்டும், தனுஷ் ஒவ்வொரு முறையும் ஜெயிக்கின்ற போதெல்லாம் தனது ஆற்றாமையை ஒதுக்கிவைத்துவிட்டு, "நான் வளர்த்த பையனாச்சே.. விவரம் தெரியாமய் யா இருந்திருப்பான்" என்று விரோதத்தை தேனில் குழைத்து பேசுகின்ற பேச்சாகட்டும்.. மனைவியை சந்தேகப்பட்டு பேசுகின்ற போதாகட்டும்... மனிதன் பேட்டைக்காரராகவே வாழ்ந்திருக்கிறார். தமிழ் சினிமாவுக்கு ஒரு தேர்ந்த நடிகர் கிடைத்திருக்கிறார். பயன்படுத்திகொள்வார்களா?



தனுஷ், பொல்லாதவன் போலவே இதிலும் வெகுளி இளைஞனாக வருகிறார். தாயிடம் சீறுவது பின் உருகுவது, பேட்டைக்காரரிடம் காட்டும் கண்மூடித்தனமான விசுவாசம், பொருந்தாக் காதல் என்று தெரிந்தும் ஆங்கிலோ இந்தியப் பெண் தப்ஸியை வழிந்து காதலிப்பது, லுங்கியோடு தில்லாகத் திரிந்து சேவல் சண்டைக் களங்களில் உசாராக சவால் விவது, தனுஷுக்கு அவரது சினிமா வாழ் நாளில் நிச்சயம் இது நின்று பேசப்படப்போகிற முக்கிய பாத்திரம்.

ஆங்கிலோ இந்திய பெண்ணுக்கு தப்ஸி சரியான தீர்வு.

பேட்டைக்காரரின் மனைவியாக வரும் மீனாள், கருப்பின் நண்பர்களாக வரும் கில்லி காட்டுவாசி, ஒல்லிக் கருப்பன், கருப்பின் தாயார், ரத்தினசாமியின் தாய்க் கிழவி, ஆங்கிலோ இந்தியப் பாட்டி... ஒவ்வொரு பாத்திரங்களுமே தனித்து நின்று பேசுகின்றன.

இசை ஜி.வி.பிரகாஷ் ஒளிப்பதிவு வேல்ராஜ், இயக்கம் வெற்றிமாறன்... இந்த மூவரும் இல்லாமல் ஆடுகளம் இல்லை. பணமும் புகழும் ஒரு மனிதனின் மனதை எவ்வாறெல்லாம் மாற்றி, அவனின் அத்தனை கால நற்பெயர்களையும் மாற்றிப் போடுகிறது என்பதைப் படமாக அல்ல பாடமாகக் காட்டி இருக்கிறார் வெற்றிமாறன். வெற்றிமாறன் போன்ற ஒரு சிஷ்யனை தமிழ் சினிமாவுக்குத் தந்ததற்காக, பாலுமகேந்திரா மீண்டும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

ஆடுகளம் - தமிழ் சினிமாவின் அடுத்த களம்.

REDUCE FEES INCREASE PROFITS
DEBITTECH POS
BENEFITS
Free 24/7 help desk
4 hrs on-site service
Gift & loyalty cards
Use it as ATM and generate revenue
Sell phone cards
(Cellular & Long Distance)
ACCREDITED BUSINESS BBB
CounterTop $23.95 (Dial/IP)
Wireless $39.95 (Delivery)
Pay @ table $44.95 (Dial/IP)
We Will Beat Any Competitors Offer Guaranteed
1.49%*
*Some conditions apply
Other services
Tel: 1-888 640-5479
www.debittechpos.com

# மந்திரப்புன்னகை ஓர் உளவியல் ஆய்வு

இது வழக்கமான சினிமா விமர்சனம் அல்ல. 'மந்திரப் புன்னகை' திரைப்படத்தை பின்னணியாக வைத்து இன்றைய சமூகத்தைப் புரிந்துகொள்ளும் ஒரு முயற்சி, அல்லது இத்திரைப்படம் சில தகவல்களை சமூகத்திற்குத் தருகிறது என்று நான் கருதுபவற்றை பகிர்ந்துகொள்ளும் முயற்சி என்றும் எடுத்துக் கொள்ளலாம். நேரடியாகவே விஷயத்துக்கு வருகிறேன். இன்றைய சமூக சூழலில், பொதுவாக நடைபெறும் சம்பவங்களையே இப்படத்தின் கதை பிரதிபலிக்கிறது. தமிழர்களைப் பொறுத்தவரை, எல்லா மனிதர்களிலும் தனது தாயை மிகவும் உயர்வாக பாவித்துக் கொள்ளுகின்ற போக்கு இயல்பாகவே இருந்து வருகிறது. இம்மரபு போக்குக்கு எதிராக ஏதேனும் நிகழ்ந்தால் அதை ஏற்க முடியாமல் மனரீதியான பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். அப்படி பாதிப்புக்கு உள்ளான ஒருவனின் கதைதான் 'மந்திரப் புன்னகை'.

'மந்திரப் புன்னகை' கதாநாயகன், தாயை மிகவும் உயர்வாக நினைக்கும் இயல்பான கதாபாத்திரம்தான். சிறுவனாக இருக்கும் போது அன்பின் கதகதப்பைத் தாயிடமும் பாதுகாப்பைத் தந்தையிடமும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறான். சிறுவனின் தந்தை கடமைகளைச் சரியாகச்

- ஆனந்த் -

செய்யும் மனிதர், என்றபோதும் பாராட்டுக்காக ஏங்கும் தன் மனைவியை அவர் புரிந்துகொள்ளாமல் இருந்துவிடுகிறார். எல்லோருடனும் நட்புடன் பழகும் பரந்தமனம் கொண்ட அவர் அடிக்கடி பகல் உணவிற்கு தன் நண்பர்களை வீட்டுக்கு அழைத்து வருகிறார். விருந்துக்கு வரும் தந்தையின் நண்பன் சிறுவனின் தாய் தயாரித்த உணவின் சுவை குறித்துப் புகழ்ந்து பாராட்ட, பாராட்டுக்கு ஏங்கும் அவளுக்கும் அவனுக்கும் (நண்பர்) இடையே ஒரு புதிய அன்பு பகிர்வு ஏற்பட்டு, அது பாலியல் ரீதியாக வளர்கிறது.

இவ்வுறவை அவள் கணவனும், மகனும் (நம் கதாநாயகன்), கிராமத்து மக்களும் கண்டுபிடித்தபோது, அவள் கணவரின் நண்பரோடு ஓடிவிடுகிறாள். இச்சம்பவத்தினால் மனம் உடையும் கணவன் தூக்கிலிட்டுக்கொள்கிறான். சிறுவன் அனாதையாகிறான்.



தனது தாயை மிகவும் உயர்வாக நினைத்திருந்த சிறுவனுக்கு இச்சம்பவம் மிகுந்த அதிர்ச்சியைக் கொடுக்கிறது. எப்படி அவள் தன்னையும் கடமையுணர்வு கொண்ட தந்தையையும் மோசம் செய்தாள் என்பதனை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. சிறந்த கட்டிட கலைஞனாக உருவாகும் அச்சிறுவன், இதனால், சந்தர்ப்பம் கிடைத்தால், எல்லாப் பெண்களும் உண்மையில்லாதவர்களாகவே நடந்து கொள்வார்கள் என்ற அபிப்பிராயத்துக்கு வருகிறான். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் இருப்பது காதல் அல்ல காமம் மட்டுமே. அந்த காமத்தின் வெளிப்பாடே குழந்தைகள் என்று நம்பும் அவன், தனது உணர்ச்சிகளுக்கு முகமூடி அணிவிக்காத ஒரு வெளிப்படையான மனிதன் என்று தன்னை நினைத்துக் கொள்கிறான். தனது துயரங்களை மூழ்கடிக்க மது குடித்தும், உடல் வேட்கைகளைத் தீர்த்துக்கொள்ள பெண்களைப் பயன்படுத்துவதின் மூலமும் அவர்களை வஞ்சம் தீர்ப்பதாகவும் கருதுகின்றான்.

இந்நிலையில் தன்னைப் போலவே வெளிப்படையாக இருக்கும் ஒரு பெண்ணிடம் மயங்குகிறான். திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்ற சூழ்நிலை உருவாகும்போது, திருமணத்தின் மீது நம்பிக்கை இல்லாததால், இந்த பெண்ணும் தன்னை மோசம் செய்வாளோ என்று பயந்து, அவளைத் தன் தாயோடு ஒப்பிட்டு, தன்னை தனது காதலி ஏமாற்றுவது போலவும் அவளை கொலை செய்வது போலவும் கற்பனை செய்கிறான். அவளோடு முரட்டுத்தனமாக நடந்துகொண்டும், அவளது உணர்வுகளை காயப்படுத்தியும் திருமணம் செய்வதைத் தவிர்த்து வருகிறான். அவனது ஒழுங்கற்ற வாழ்க்கையைப் பற்றித் தந்தை அறிவுரை கூறும்போது இதுவும் கற்பனையே என்று ஏமாற்றம் அடைகிறான்.

திருமணத்துக்குப் புறம்பான உறவு ஏற்பட்டு, அது பாலியல் உறவு வரை அழைத்துச் செல்லப்படும், அல்லது செல்லும் அனைவருக்கும் இக்கதை ஒரு பாடம். இக்கதையில் அதிகமாக பாதிக்கப்பட்டது, தன் தாயின் மீது அபரிமிதமான நம்பிக்கை வைத்திருந்து, பிறகு அது உடையும்போது மனக்காயப்பட்ட சிறுவனே. மனிதர்கள், தங்களது நம்பிக்கைகள் உடைக்கப்படுகின்ற போது, மனரீதியாக உளைச்சலுக்குள்ளாகி, இரத்தம் கசியும் காயமாக வாழ்க்கையின் முடிவுவரை அதனைச் சுமக்கத் தொடங்கி விடுகிறார்கள். சிறுவனுக்கும் இது தான் நேர்கிறது.

ஆனால், இந்தப் படம் ஒரு செய்தியை வலியுறுத்துகிறது. திருமணத்துக்குப் புறம்பான பாலியல் உறவுக்குள் செல்லும் சிறுவனின் தாய், தன் பாலியல் தேவைக்காக மட்டும் அந்த உறவை ஏற்படுத்திக்கொள்ளவில்லை. அவள் எதிர்பார்க்கும் பாராட்டுணர்வையும் அதனுடன் கலந்த அன்பையும் திருமண உறவு அவளுக்குத் தரவில்லை. அது எங்கு கிடைத்ததோ, அங்கு அவள் சென்றுவிட்டாள். திருமணத்துக்குப் புறம்பான பாலியல் உறவுக்குள் ஒருவர் செல்வதற்கு, பாலியல் உணர்வே காரணம் என்று பெரும்பாலோனோர் நினைக்கிறார்கள். பல சம்பவங்களில் இது உண்மையல்ல என்பதே, ஒரு உளவியலாளனாக என்னுடைய புரிதல். ஆணுக்கும் பெண்ணுக்கும் உணர்வுபூர்வமான சில தேவைகள் உண்டு. அது சில நேரங்களில், தங்களது துணைகளால் தணிக்கப்படாத போது, வேறு ஒருவரால் அது தணியும்போது, அதில் அவர்கள் திருப்தி அடைகிறார்கள். அப்போது, இயற்கையாக அந்த வெளி நபர் மீது ஒரு ஈர்ப்பு ஏற்படுகிறது. அந்த ஈர்ப்பு, பிறகு நெருக்கமாகி, அதன்பிறகு பாலியல் உறவாக முடிகிறது.

மனைவி மற்றும் குழந்தைகளின் பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்வதே, ஒரு நல்ல கணவனுக்கு அடையாளம் என்று இந்த திரைப் படத்தின் கதாநாயகனின் தந்தை நினைக்கிறான். இவர் மென்மையாக பேசும் மனிதராக இருந்தபோதும் தனது மனைவி செய்யும் நல்ல செயல்களைப் பாராட்டாமல் இருந்து விடுகிறார். மனைவி கடமையைச் செய்கிறாள், இதைப் பாராட்டுவது தேவையற்றது என்று கருதுகிறான். ஆனால், பெண்களுக்குப் பாராட்டப்படுவது என்பது மிகவும் முக்கியமானது. பாராட்டின் மூலமே அவள் நேசத்தையும் காதலையும் உணர்கின்றாள். அதனால், சின்னச் சின்ன செயல்கள் மூலம் கணவர் தன் அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்று பெண் எதிர்பார்க்கிறாள். இது நடக்காத போது, அவளது இந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் அடுத்தவரால் கவரப்படுகிறாள். அதன்பிறகு, அவர்கள் பாலியல் உறவுக்குள் செல்கிறார்கள். பாலியல் உறவு இருவரையும் நெருக்கமாக்கி உறவை வலிமையாக்க உதவுகிறதே ஒழிய அதுவே முதன்மை காரணமாவதில்லை.

திருமண வாழ்க்கையில் தம்பதியர்களுக்கு இடையே ஏற்படும் விரிசல்களுக்கு முக்கிய காரணம் இருவரும் ஒன்றாக சேர்ந்து பொழுதுபோக்காமல் தங்களுடைய பணிகளையும் குழந்தைகளையும் சொந்த குடும்பத்தையும் மட்டுமே பெரிதாக நினைப்பதுதான். திருமணமான தம்பதியர்கள் தங்களுக்காக ஒருநாளாவது முன்னுரிமை வழங்க வேண்டும். அந்நாளில் குழந்தைகளையும் இரண்டாம்பட்சமாக கருதலாம்.

சரி, இப்படி திருமணத்துக்குப் புறம்பான பாலியல் உறவை நாம் நியாயப்படுத்தலாமா? அது சரியா?

நிச்சயமாக சரியல்ல. தற்காலிகமான மகிழ்ச்சியை இத்தகைய பாலியல் உறவு தரலாம். ஆனால், நாளடைவில் அந்த உறவால் மன நிம்மதியை இழக்க நேரிடும். இது ஒரு இனிப்பான நஞ்சு, முடிவில் இது உங்களையே அழித்துவிடும். மற்றவர்களையும், குறிப்பாக வாழ்க்கைத் துணையையும் அது பாதிக்கும். குழந்தைகளைப் பாதிக்கும். ஒருவகையில் குழந்தைகள்தான் அதிகமாக பாதிக்கப்படுவார்கள். அக்குழந்தை (அவனோ, அவளோ) வாலிப வயது அடையும் போது மகிழ்ச்சிகரமான இல்லற வாழ்க்கையை நடத்த முடியாமல் மன நோயாளியாக மாறி வாழ்க்கைத் துணையைச் சித்திரவதைக்கு உள்ளாக்குவார்கள். பெற்றோர்களுடன் மகிழ்ச்சியாக இருக்கும் மற்ற குழந்தைகள் மீது பொறாமை கொண்டு அவர்களுக்கு உடல் ரீதியாக தீங்கு செய்யும் நிலைக்குப் போவார்கள். அவர்கள் குற்றவாளிகளாக மாறி சிறையில் தள்ளப்படுவார்கள்.

சரி, எனது உணர்வுகளை திருப்திபடுத்த முடியாத போது நான் வேறு என்ன செய்வது? என்று சிலர் கேட்கலாம். உண்மையில் முழுமையாக ஒருவரை திருப்திப்படுத்தும் துணையை ஒருவராலும் அடையவே முடியாது. எல்லாருமே குறை உள்ளவர்களே. ஒவ்வொரு உறவும் நாம்

தொடர்ச்சி 22ம் பக்கம்



# NEW CONDO AT YONGE & BLOOR



1 Day Only

> Special VIP package
> Up to 25,000 off*
> Free Assignment*
> Lease back*

இவை பற்றிய மேலதிக விபரங்களுக்கு
HomeLife/GTA Realty Inc.
முகவர்களை தொடர்பு கொள்ள

HOMELIFE/GTA REALTY INC., BROKERAGE*

1771 Mccowan Rd. #206, Toronto - Tel: 416.321.6969
145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666
*Some conditions may apply *Independently Owned & Operated

# ஈழத்துக் காதலிசைகள்

## கிராமிய இசையும் காதலுணர்வின் வெளிப்பாடும்-4

"சுற்றிவர வேலி சுழலவர முள்வேலி எங்கபுள்ளை நான் வரட்டும்" எனவும் அவள் நீ ஆண்மகன் தானே துணிந்து வா என்று பதில் சொன்னாளோ என்னவோ அவனது முயற்சி திருவினையாக்கவில்லை.

சுற்றிவரலாகாதோ?" சும்மா வெற்றிலையைக் கையிலை வைத்துக்கொண்டு கொஞ்சம் சுண்ணாம்பு தாருங்கள் என்று கேட்டு வரலாம் தானே! எனது பெற்றோர் இருக்கும் நேரத்திலேயே நீ வரலாம் தானே? என்று

அவள் மிக விலையுயர்ந்த சந்தன மரத்தை நீ அணுகவேண்டுமாயின் இந்த இடத்தில் போய்ப் பார்க்கலாம் என்று, தான் நீர் மெள்ளப்போகும் இடத்தையும் நேரத்தையும் குறிப்பிடுகின்றாள்: "சந்தன மரத்தைமச்சான் சந்திக்கவேணும் எண்டால் பூவலடிக்கு மச்சான் பொழுதுபட வந்திடுங்கோ" அது மட்டுமன்றி நீ எனது வீட்டுக்கு அண்மையில் வந்து ஒரு சிறு சத்தம் எழுப்பினால் நான் எழுந்து வரமாட்டேனோ என்று உணர்த்துகின்றாள்: கடப்படியில் வந்துநின்று காளை கனைக்குமென்றால் எங்கிருந்தபோதும் நாகு எழுந்துவர மாட்டாதோ"

களவு வழியில் சந்தித்துக்கொண்ட தலைவனையும் தலைவியையும் கண்டுகொண்டவர்கள் அதனை பெண்ணின் தாய் தந்தையருக்கு உணர்தும் தன்மை மிகவும் சுவை தருவதாகவும் கவி நயம் சொட்டுவதாகவும் அமைந்து காணப்படுகின்றது.

வெள்ளைக் கிடா நாம்பன் வீசு கொம்பன் தாமரையன் பள்ளத்து வெள்ளாமையை பால்பறக்கத் தின்னுதங்கே" அதாவது மிக அழகான மாவெள்ளை நிறத்தை உடையவன் உனது மகளின் காதலன், பார்ப்பதற்கு மிடுக்கான தோற்றமுடையவன், தாமரைப் பூப்போன்ற முகத்தை உடையவன் நீ விதைத்து வளர்த்த பயிரை மேய்கின்றது என்று மறைமுகமாகக் கூறும் ஆற்றல் சர்வசாதாரணமாக உவமான உவமேயங்களைக் கூட்டி இரட்டைப் பொருளில் தரும் தன்மை கிராமியப்பாடல்களின் மெருகை மேம்படச் செய்கின்றன.

இதனைக் கேள்வியுற்ற தந்தை கோபத்தோடு வந்து இந்த நேரத்தில் இவ்வளவு தடைகள், காவல்கள் இருந்தும் இதற்குள் யாரோ ஒருவன் வந்துள்ளானே அவன் யார் என்று தந்தை கோபாவேசமாக தாயிடமும் மகளிடமும் கேள்வி எழுப்புகின்றார்.



- த. சிவபாலு -

"எங்கும் ஒரு வேலி எதாலை புள்ளை நான் வரட்டும்" என்று தனக்கும் அவளுக்கும் இடையே உள்ள தடைகளைக் குறிப்பிடுகின்றார். இலக்கியங்களில் மட்டுமா உவமானம், உவமேயம். இங்கும் அது நன்கு விளையாடுகின்றது. பெற்றோரைப் பெண்ணின் வேலியாக, பாதுகாவல் அரணாகக் குறிப்பிடப்படுகின்றது. தன்னிடம் வருவதற்கு இத்தடைகள் ஒரு காரணமா? நீ துணிந்தால் வரலாம் என்னும் பொருள்படப் பெண் தனது விருப்பைத் தெரியப்படுத்துவதாக அமைகின்றன அதற்கான விடைகள்:

"காவல் அரணோ மச்சான் கள்ளருக்கு முள்ளரணோ? வேலி அரணோ மச்சான் வேணுமென்ற கள்ளனுக்கு?" அதாவது துணிந்தவனுக்கு தூக்குமேடை துச்சம் என்பார்களே அது போன்று நீ துணிந்தால் என்னை அடையலாம். இவை எல்லாம் ஒரு அரணா?

அது மட்டுமன்றி வருவதற்கான சில உபாயங்களையும் உணர்த்தி அதற்கான வழியையும் சொல்லிக் கொடுக்கின்றாள் அவனைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலோடு இருக்கின்ற அவனது காதலி: "வெற்றிலையைக் கைப்பிடித்து வெறும்புளகை வாயிலிட்டு சுண்ணாம்பு இல்லையென்று

அவள் வழி காட்டுகின்றாள்.

"நித்திரைக் கண்ணிலையும் நினைவிலையும் தோணுவது கலிமா (ஐந்து) விரலும் மச்சான் கல்பதித்த மோதிரமும்" என்று உன் நினைவாகவே நான் இருக்கின்றேன் என்று உணர்த்துகின்றாள். அது மட்டுமன்றி பெண்ணின் அழகினை ஆண்கள் வர்ணிப்பதுபோன்று ஆணையும் வர்ணிக்கும் பாங்கு இந்தக் கிராமியப் பாடல்களில் உண்டு. விரகதாகத்தில் கட்டுண்டு காதல் வயப்பட்டவள். நீதான் எனது நாதன் உன்னில் நான் மயங்கிவிட்டேன், நீதான் என்வாழ்வு என்பதனை உணர்த்துவதாக அவள் குறிப்பு:

"வட்டமுகமும் உந்தன் வடிவிலுயர் மூக்கழகும் கட்டுஉடலும் மச்சான் என்கருத்தழியச் செய்யுதுகா" என்று அவள் அவனின் கட்டுடல் பற்றிக் குறிப்பிட்டு அவனை வர்ணிக்கின்றதோடு உன் நினைவாகவே இருக்கின்றேன் என்பதனை உணர்த்துகின்றாள்.

அவனும் விட்டுவிடுவதாக இல்லை அவளை நோக்கி ஒரு போடு போடுகின்றான். அவளின் உடல் மினுமினுக்கின்றது. அழகில் ஜொலிக்கின்றது என: 'தங்கத் தகடோ எந்தன் தகதகத்த பொன்தகடோ வெள்ளித்தகடோ உன்னை விலைமதிக்கக் கூடுதில்லை"

# மந்திரப்புன்னகை...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

விரும்பும், வெறுக்கும் குணாதிசயங்களின் சேர்க்கை அடங்கிய பெட்டி போன்றது. நாம் இருதரப்பினரையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திருமணத்துக்குப் பிறகு பலர் தமது தேவைகளைத் தமது வாழ்க்கை துணையோடு பகிர்ந்து கொள்வதில்லை. ஆகையால், ஒருவர் தேவையை இன்னொருவரால் புரிந்து கொள்ள முடியாமல் போகிறது. புரிந்து கொள்ளும் போது வாழ்க்கைத் துணையால் அவர்கள் திருப்தியுறலாம். இத்தகைய வழியைத் தேடாமல், இதற்கு மாறாக நண்பர்களோடு வாழ்க்கைத் துணை குறித்த வருத்தங்களை பகிர்ந்து கொள்வதே பிரச்சினைக்கு அதிகம் காரணமாகிறது. குறிப்பாக, அலுவலக தோழர்களிடம் தமது திருமண சிக்கல்களை பகிர்ந்துகொள்கிறார்கள். இந்நிலையில் அந்த இருவரும் ஒருவருக்கு ஒருவர் அனுதாபப்பட்டு ஒருவரை ஒருவர் கவருகிறார்கள். இதற்குப் பதிலாக உளவியலாளரோடு அல்லது மதிப்புமிக்க மூத்தவரோடு தங்கள் சிக்கல்கள் குறித்து பேசுவது நல்லது. ஒருவருக்கு தனது வாழ்க்கைத் துணையோடு பால் சார்ந்த சிக்கல் இருந்தால், பாலியல் மருத்துவரை நாடி யோசனை கேட்கலாம். இன்றைக்கு மருத்துவத் துறை பெரிய வளர்ச்சி கண்டுள்ளது. எல்லாவிதமான பால் சார்ந்த சிக்கல்களையும் தீர்த்து வைத்துள்ளது.



ஒருவர், தனது வாழ்க்கைத் துணையின் திருமணத்துக்குப் புறம்பான பாலியல் உறவை கண்டுபிடித்தால் என்ன செய்ய வேண்டும்?

முதலில் நான் அவர்களுக்கு சொல்லும் ஆலோசனை, வாழ்க்கை துணையை கைவிடாதீர்கள் என்பதுதான். மேலும், அவருக்கு உடம்பாலும் தீங்கு செய்யாதீர்கள். இது பரிகாரம் ஆகாது. இச்செயல்கள் மனரீதியாக நமது குழந்தைகளை காயப்படுத்தும். முதலில் சூழ்நிலையின் யதார்த்தத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். இத்தகைய தவறான உறவு முறை உருவானதுக்கு நாமும்கூட பொறுப்பு என்பதை உணர வேண்டும். இதை ஒரு தண்டனைக்குரிய குற்றமாக கருதாமல் திருத்தக்கூடிய தவறுதான் என்று நினைக்க வேண்டும். திருமணத்துக்கு புறம்பான உறவால் இணைவோர்களை உணர்ச்சி குருடர்களாக மாற்றிவிடுகிறது. எனவே, இத்தகைய உறவுகளை முறிப்பது அவர்களுக்கு மிகவும் வேதனை தரக்கூடியது. ஆகையால், சில ஆண்கள்

தொடர்ச்சி 40ம் பக்கம்

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
HOMELIFE HIGHER STANDARDS
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666

# மதியிறுக்கம் (Autism) என்னும் குறைபாட்டுடன் வளரும் பிள்ளைகளின் வாழ்வுக்கு வழிகாட்டுவோம் வாரீர்!

## கனடிய தகவல் தொடர் 141

### அன்றாட வாழ்வின் செயல்பாடுகளை பற்றிக்கொள்ளும் பயிற்சி மதியிறுக்கம் உடைய பிள்ளைகளுக்கு

கனடாவில் தமிழர்கள் மத்தியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு ரொரன்ரோவில் உள்ள தெற்காசிய சமூகத்தினையும் சேர்ந்து விஸ்தரிக்கப்பட்டு தாயக மண்ணையும் நோக்கி பரவலாக்கப்படல் வேண்டும் என்ற நீண்டகால குறிக்கோளில் இயங்கிவரும் **"தெற்காசிய மதிறுக்க விழிப்புணர்வு மையம்"** (South Asian Autism Awarence Center) பின்வரும் பயிற்சி நெறித்திட்டங்களை தற்போது ஸ்காபரோவில் நடத்தி வருகின்றது. அவையாவன பின்வருமாறு!

### *Occupational Therapy*

பொதுவாக விபத்துகளில் காயமடைந்த ஒருவருக்கு மூளைக்கும் உடலின் செயல்பாடுகளுக்கும் சிலவிதமான தொடர்புகள் அற்ற நிலையில் இருப்பவர்களுக்கே இத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்களினால் (Occupational Therapist) அவர்களை அன்றாட வாழ்வில் இயங்கபண்ணுவதற்கு இத்தகைய பயிற்சிகள் தேவையாக இருப்பது வழமையாகும்.

அதேபோல் இங்கு 'மதியிறுக்கம்' (Autism) என்ற குறைபாட்டுடன் பிறந்து வளர்ந்து வரும் பிள்ளைகளுக்கும் மூளைக்கும் உடலின் செயல்பாடுகளுக்கும் தொடர்புகள் குறைந்த நிலைமை ஏற்படும்போது அவற்றினை செயல்படவைப்பதற்கு இங்கு பயிற்சி வழங்கப்படுகின்றது. உதாரணமாக இத்துறை சான்றோரின் பயிற்சிகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

- பேனா பிடித்து எழுதும் திறமை (Skills for handwritting)
- சேர்ட் பர்ட்டன் பூட்டி அணிவது (Shirt buttoning)
- பல் துலக்குவது (Brushing)
- தாமாக தமது உணவினை சாப்பிடுவது (Feeding)



- பாதுகாப்பாக வீதிகளில் நகர்வது (Community Mobility safty procedures)
- சமூகத்தில் பழகுவது

இவ்வாறு அவர்களை அவதானித்து அவர்களின் உணர்வுகளுக்கு ஏற்றமாதிரி பயிற்சி வழங்குவதனை இங்கு குறிப்பிடலாம்.

### பேசமுடியாதவர்களுக்கு வழங்கும் பேச்சுப் பயிற்சி (Speech language pathology)

வார்த்தைகள், சொற்தொடர்புகளை வாய் திறந்து உச்சரிக்க முடியாமல் திணறுவது என்பது 'மதியிறுக்கம்' (Autism) என்னும் குறைபாட்டுடன் வளர்ந்துவரும் பிள்ளைகளுக்குரிய ஒரு மிகப்பெரிய குறைபாடாகும். இக் குறைபாடு உடையவர்களுக்கு 'பேச்சுப்பயிற்சி' என்பதில் ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்தனியாக பயிற்சி வழங்கி, சரியான முறையில் அவர்களை நெறிப்படுத்தி கொண்டு வருவதற்காக அரச மருத்துவ அனுமதிப்பத்திரம் பெற்ற நிபுணத்துவம் வாய்ந்தவர்களே இங்கு பயிற்சி வழங்கும் பயிற்சியாளர்கள் (Speech Pathologist Voice Specialist) ஆவார்கள். இங்கு சொற்களை உச்சரிக்கும் பயிற்சி தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் படிப்படியாக வழங்கப்படுகின்றது.

### இசைக்கலைத்துறை பயிற்சிகள் (Music Therapy)

'மதியிறுக்கம்' என்ற குறைபாட்டுடன் வளர்ந்து வரும் இப்பிள்ளைகளுக்கு அனேகமாக இசைக்கலைத்துறைகளில் ஒரு நாட்டம் என்பது இயற்கையாக இருக்கும்.

இங்கு இசைத்துறை பக்கவாத்தியங்கள் (Music Instruments) உதவியோடு கூட்டாக அவர்களை சேர்த்து வழங்கும் இசைத்துறை பயிற்சிகள் என்பது அவர்களுக்கிடையில் முடங்கிக் கிடக்கும் ஆர்வங்களை தூண்ட, அதிலிருந்து உருவாகும் ஆனந்தம் என்பது ஏனையோருக்கிடையேயுள்ள உறவுகள், தொடர்புகளை (Social Interactions) அவர்களிடம் அதிகரிக்கப்பண்ணுகின்றது

### ஆடல்கலைகள், நாட்டியங்களில் பயிற்சிகள் (Dance Therapy)

மேலைத்தேச கூத்து பாடல்கள் (Western Music), இந்திய பாடல்கள் (Classical Indian dance) ஆகியவற்றுக்கு கூட்டாக பாடல்களுடன் சேர்ந்த ஆடல்கலைகள், அத்துடன் தமிழரின் பாரம்பரிய பரதநாட்டிய கலைகள் என்பனவற்றில் வழங்கப்படும் பயிற்சிகள் பாதிக்கப்பட்ட மதியிறுக்கத்திற்குரிய பிள்ளைகளின் வாழ்வில் உற்சாகத்தினையும் ஒரு உந்துசக்தியினையும் தட்டிவிடுகின்றது.

### யோகாசன வகுப்புகளும் பயிற்சிகளும் (Yoga Exercise Therapy)

யோகாசனம், மூச்சு பயிற்சி என்பனவற்றின் ஊடாக அந்த துறையில் பாதிப்புகளுடன் வளரும் பிள்ளைகளுக்கு பயிற்சிகள் கொடுத்து ஓரளவு அமைதி வாழ்வுக்கு பயிற்சி வழங்குதல்.

### கல்வித்துறை வகுப்புகள் (Educational Classes)

மொழி (Language), கணிதம் (Mathematics) போன்ற பாடங்களில் இத்தகைய பாதிப்புகளுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு அதனை புரிந்து கற்றுக்கொள்வது என்பது பலத்த சிரமமாகவே இருக்கும். இங்கு ஓரளவு பாடத்திட்டங்களை கற்றுக் கொள்ளும் நிலைமைக்கு வந்தவர்களுக்கு மெதுமெதுவான முறையில் இக்கல்விப் போதனை வகுப்புகள் நடத்தப்படும்.

### விளையாடும் பயிற்சிகள் (Play Therapy)

சாதாரணமாக பிறந்து வளரும் பிள்ளைகளுக்கு ஒவ்வொரு வயதுக்கும் உரிய விளையாட்டை விளையாட வேண்டும் என்ற உந்து சக்தியினை முழுமையாக வழங்கிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் பெரிதாக இருக்காது. அந்தந்த வயதில் ஆர்வமும் துடிப்பும் இயற்கை யாகவே அவர்களுக்கு வந்து கொண்டே யிருக்கும். ஆனால் இங்கு 'மதியிறுக்கம்' (Autism) என்னும் குறைபாட்டுடன் வளரும் பிள்ளைகளுக்கு இத்தகைய அந்தந்த வயதிற்குரிய விளையாட்டு ஆர்வங்கள் அவர்களிடமிருந்து உருவாகமாட்டாது.

இங்கு இப்பயிற்சி நெறிதிட்டத்தில் விளையாட்டு பயிற்சியாளர்கள் அதற்குரிய உபகரணங்களுடன் அதற்குரிய பயிற்சிகளை வழங்குவார்கள். குறிப்பாக கோடைகாலத்தில் விளையாட்டு மைதானத்திலும், பூங்கா பகுதியிலும் இப்பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சியாளர்களின் உதவிகள், வழிகாட்டல் களுடன் கூட்டாக சேர்ந்து விளையாட்டில் ஈடுபட்டு அவர்களை உற்சாகப்படுத்தும் போது அந்த பயிற்சி என்பது சமூகத்தின் தொடர்புகள், சமூக ஈடுபாடுகள் என்பனவற்றில் படிப்படியாக ஏதோ மாற்றங்களை கொண்டுவரும்.



**சிவ. பஞ்சலிங்கம் B.Com.,**
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

---

## 'தெற்காசிய மதியிறுக்க விழிப்புணர்வு மையம்'
(South Asian Autiness Awareness Centre)

அலுவலகம் - 310 - 80, Acadia Ave., Markham, ON L3R 9V1
Phone - 416.824.8847 E.mail - info@saaac.org
Website - www.saaac.com Founder excutive director - Mrs. Geetha Moorthy

இந்நிறுவனம் கனடாவில் வசிக்கும் தெற்காசிய சமூகத்தில் குறிப்பாக இலங்கைத் தமிழர்களின் குடும்பங்களில் 'மதியிறுக்கம்' (Autism) என்னும் குறைபாட்டுடன் ஏராளமாக பிறந்து வளரும் பிள்ளைகளை ஒன்று சேர்த்து அவர்களின் வாழ்வில் ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தி அவர்களையும் இந்த சமூகத்தில் சுயாதீனமாக வாழவைப்பதற்காக 2008ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு லாபகரமற்ற தர்மஸ்தாபனம்.

இந்நிறுவனங்களின் ஆதரவுடன் இவர்களுக்கான பயிற்சிநெறித்திட்டங்கள் உளவியல் துறை, மருத்துவ துறைகளில் நிபுணத்துவம் பெற்ற தொண்டர்களினால் பின்வரும் இரு இடங்களிலும் நடத்தப்படுகின்றது.

1. ஸ்ரீ ஐயப்பன் ஆலயம், 635 Middlefield Road, Scarborough, ON
2. Markham Civic Centre, 101, Town Centre Court, Markham, ON

இங்கு தேவை: இவ் ஒருங்கிணைப்புக்கும் பணிகளுக்கும் நிதி தேவை! அதற்காக இரண்டாம் வருடமாக நடத்தப்படுவதே **''நிதி சேகரிப்பு இராப்போசன நிகழ்வு''**
(***Fund raising gala dinner dance***)

காலம் - மார்ச் 05, 2011
இடம் - Platinum convention centre, 17, Vinyl Court, Woodbridge, ON L6R 3G8
விலை - ஒரு நபருக்கு $50 டொலர் மட்டுமே Raffle ticket $5 டொலர்.

இங்கு தேவை: பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் வாழ்வுக்கு உங்கள் கை கொடுப்பு! தங்கள் உதவிகள்!
தங்கள் ஆளுமைக்கு ஏற்ற வழிகளில் தொடரட்டும் உதவிகள்!

தொடர்புகளுக்கு - கீதா - 416.824.8847 றோகன் ஜோர்ஜ் - 647.202.5404
ஜோன் சபாரத்தினம் - 416.450.1690

ஏனெனில் இந்த பாதிப்பின் துடிப்பில் துயரும் தமிழ் குடும்பங்கள் ஏராளம்! இவ்விழிப்புணர்வும் சேவையும் கனடாவில் உள்ள தமிழர்களில் ஆரம்பித்து தாயக மண் வரை தொடரவேண்டும்.

# BASEMENT RENT

**MARKHAM & PAINTED POST**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. 1 அறை மேல்தளத்திலும் வாடகைக்கு உள்ளது. Avail. Anytime. Ladies or old people preferred.
416.431.4730 / 647.771.3801

**9TH LINE & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close TTC, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.471.1986

**MORNINGSIDE & MORNINGVIEW**
Newly renovated 1 bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.289.9744

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. March 01, 2011.
905.471.7667 / 647.338.9631

**KENNEDY & ST.CLAIR**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, sep. laundry. Close to School, bus, subway, stores, etc. Avail. March 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.266.7704

**VICTORIAPARK & ELLESMERE**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, stores, mall & more. Avail. immediately
416.576.2655 / 416.444.2655/ 416.844.2655

**MCCOWAN & 16TH AVE.**
1 அறை கொண்ட bsmt Apt. வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable, laundry. Close to bus, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.414.5562

**DUFFERIN & RUTHERFORD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, GO station, school. Avail. March 01, 2011.
தொடர்புகளுக்கு: 905.303.3022

**BIRCHMOUNT & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately. Family preferred.
416.873.0549 / 416.297.0549

**BRIMLEY & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, shared laundry. Close to YRT, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.204.2439

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.802.6067

**FINCH & TAPSCOTT**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, Hindu temple, mall.
தொடர்புகளுக்கு: 416.726.4186

**MCCOWAN & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, mall, hwy 401. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.273.2883

**MIDLAND & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 Washrooms, laundry, cable. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.827.0147
Monday - Friday After 5:00 pm
Weekends Anytime

**9TH LINE & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to YRT, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.294.9067

**KENNEDY & EGLINTON**
1 bedroom for rent in a 2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance, Parking, Laundry, Cable. Avail. immediately, Elders or Ladies preferred. தொடர்புகளுக்கு:
416.209.6571 /416.759.1916

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to bus, YRT, mall, tamil stores. Girls or small family preferred. Avail. March 01, 2011.
905.910.9926 / 647.885.1429

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Living room, kitchen, full washroom, parking, TV, cable, Sep. entrance. Close to TTC (Kennedy Subway), school & all amenities. Quiet place. Avail. March 01, 2011.
தொடர்புகளுக்கு: 905.334.5409

**KENNEDY & DENISON**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry . All facilities close by. Avail. March 01, 2011.
தொடர்புகட்கு: 416.875.7146

**MCCOWAN & ELSON**
Newly renovated 2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry. Step to school, TTC. Quiet place. Park near-by. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.991.4437

**9TH LINE & ROUGEBANK**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to Mandarin mall. Avail. immediately. No pets & No smoking.
905.554.0849 / 416.219.6555

**BELLAMY & PANDORO CIR.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. February 01, 2011. Students or small family preferred.
416.438.2559 / 416.454.3469

**DUFFERIN & STEELES**
1 Bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. February 01, 2011.
905.532.9204 / 416.728.4891

**MARKHAM & HIGHGLEN**
Newly finished bsmt at Middlefield & Highglen. 2 Bedrooms, 1 washroom, kitchen, laundry, Sep. entrance. All necessities within walking distance: high school, public school, mall, banks. தொடர்புகளுக்கு:
647.287.2807 / 905.554.1931

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school. Avail. Anytime. 1 or 2 person or working people preferred. தொடர்புகளுக்கு: 416.841.2232

# KENNEDY & EGLINTON

***Very convenient location with all facilities. 2 Bedroom & 1 bedroom, living room, dinning room, kitchen, stove, fridge, washroom, separate side entrance, parking. Very good for working couple or small family.***

**416.285.4695 / 416.264.3899**

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. February 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.523.1312

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. February 01, 2011.
416.750.9138 / 647.401.9423

**MORNINGSIDE & NIGHTSTAR**
2 Bedroom walkout bsmt for rent. Parking, laundry. Close to TTC... Avail. immediately.
416.299.7208 / 416.871.8627

**MEADOWALE & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Utilities included. Close to TTC, school, University, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.431.5078

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. February 15, 2011.
416.431.2922 / 416.846.7973

**MIDLAND & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen, living room.Close to bus, school, stores. Avail. February 01, 2011. தொடர்புகளுக்கு: 416.269.1332

**FINCH & STAINS**
One Bedroom bsmt. for rent. Parking, cable, laundry. Close to TTC & etc . Avail. immediately. Single family preferred.
416.284. 0712 / 416.906.5353

**MORNINGSIDE & FINCH**
Bsmt room & upper floor rooms for rent. Close to all facilities. முழுநேர அல்லது பகுதிநேர வேலை ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.857.8548

**FINCH & TAPSCOTT**
2 Bedroom bsmt for rent. Sept. entrace. Parking, Tamil TV, bills inclu. Close to TTC, School, Malvern mall. Avail. immediately.
416.754.2002 / 416.688.8364

**STAINS & MORNINGSIDE**
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance. Large kitchen, washroom, dining room, parking, laundry, cable. Close to TTC, mall, etc. Avail.immediately.
416.315.4653 / 416.297.9974

**MCCOWAN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet. Close to TTC, mall, tamil stores, hospital, subway. தனிநபர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 905.554.2496

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC, school, shopping, etc. Avail. immediately.
905.683.5105 / 416.277.9044

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry. Close to TTC, malvern mall, school. No smoking. Avail. immediately. 416.724.8727 / 647.280.6163

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.879.7881 / 416.750.0685

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to ttc, subway, school, church, bank, shopping, etc. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.755.1334 / 416.903.9053 / 416.953.7672

**MORNINGSIDE & OLDFINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking. Close to school, ttc, etc. Avail. immediately. தொடர்புகளுக்கு:
647.350.1515 / 647.836.0654

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.565.3209

**DONMILLS & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC. No smoking & No drink Very strictly. Rent $300. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**MCCOWAN & EGLINTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, shopping, school. Avail. immediately.
416.264.6253 / 416.834.3677

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

மேலும் பக்கங்கள் 25, 26

# BASEMENT FOR RENT

**HIGHGLEN & MCCOWAN**
Newly renovated 2 Bedroom walkout bsmt for rent. Dishwasher included. Close to 3 different high schools & also Elementary school, TTC. Avail. immediately.
Price negotiable. தொடர்புகளுக்கு: 416.737.4807 / 416.898.4846

---

**WARDEN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, living room, laundry, cable & internet including. Close to TTC, hwy (401, DVP). Avail. immediately. பெண்கள் மட்டும்.
தொடர்புகளுக்கு: 416.997.6575

---

**MCNICOLL & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Very strictly No smoking, No drink & Clean. Rent $650 & 40% utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

---

**BRIMLEY & LAWRENCE**
2 Rooms for rent in a basement. Sep. entrance & parking, laundry. Close to TTC, stores & other facilities. Very quiet place. Avail. Immediately. Bachelor preferred.
தொடர்புகளுக்கு: 416.264.8177

---

**SHEPPARD & MORNINGSIDE ROUGH RIVER**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC & shopping, etc . Avail. immediately.
Couple or students preferred.
416.286.1755 / 416.220.5967

---

**KENNEDY & FINCH**
Newly renovated 2 Bedroom bsmt for rent. Sept. entrance. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.568.6407

---

**NEILSON & SHEPPARD**
மூன்று அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Bills included. Close to school, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.286.1535

---

**16TH AVE. & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.575.5055

# ROOM RENT

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom for rent. Close to TTC, mall, school. Avail. immediately.
416.724.6186 / 647.833.3893

---

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.351.0422

---

**NEILSON & FINCH**
அறை உடன் வாடகைக்கு உண்டு. தனி குளியலறை. சமைக்கும் வசதி அல்லது உணவு தரலாம். வயதான பெண்கள் விரும்பத்தக்கது. குறைந்த வாடகை.
தொடர்புகளுக்கு: 416.554.4416

---

**BRIMLEY & STEELES**
1 Room for rent. Close to TTC, tamil stores. Avail. February 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.844.7550

# ROOM FOR RENT

**MEADOWVALE & SHEPPARD**
One Bedroom for rent - Second floor. 1 Washroom, parking, internet, 3 times food including. Close to high school, university, 24 hrs. TTC. Ladies preferred.
647.833.2351 / 416.724.4433

---

**MIDDLEFIELD & FINCH**
1 Room for rent.Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.332.2840

---

**WARDEN & FINCH**
Condo. வில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Washroom, laundry, cable, parking avail. Close to TTC, shopping, etc. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.495.9775

---

**MARKHAM & ELLESMERE**
One Room for rent. Close to all facilities. Avail. immediately. Boys preferred.
தொடர்புகளுக்கு: 416.566.1918

---

**MARKHAM & SHEPPARD**
3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall.
416.335.5242 / 416.820.1999

---

**MARKHAM & DENISON**
Room for rent in main floor. Parking, cable & laundry. Close to TTC, YRT, Mall & school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.339.1062

---

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt rooms available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

---

**MARKHAM & STEELES**
1 Bedroom for rent. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு:
905.294.7026 / 647.703.1343

---

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

---

**MARKHAM & STEELES**
4 படுக்கை அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Close to TTC, YRT, walmart, etc. மாணவர்கள் அல்லது பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.726.0897

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடியில் சுமார் 3 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. கிணறு மற்றும் தண்ணீர் தாங்கியுடன் உள்ளது. யாழ்ப்பாணம் டவுன் ரவுனிலிருந்து 9 நிமிட தூரத்தில் உள்ளது. மேலதிக தொடர்புகட்கு 416-450-6833 அல்லது 905-887-7457.

# WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. Any condition.
Raj - **647.269.6552**

# CONDO. FOR RENT

**MCLEVIN & NEILSON**
1 Bedroom condo. for rent. Close to Malvern mall, bus, banks, etc.
416.402.3947 / 647.219.5266

---

**MCCOWAN & HWY 401**
2 Bedroom luxury condo. for rent. 2 Washrooms. Parking included. Close to TTC. Avail. February 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.910.1303

---

**KENNEDY & EGLINTON**
**Rainbow Village**
2 Bedroom + 2 Washroom condo for rent. Close to TTC, Kennedy Subway, tamil stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.267.5085

# HOUSE FOR RENT

**BIRCHMOUNT & MCNICOLL**
5 + 3 Bedroom for rent. 4 Washrooms. Close to TTC, hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

---

**MARKHAM & EGLINTON**
2 +2 Bungalow house for rent. Close to TTC, school, mall, Tamil stores. Avail. April 01, 2011.
416.265.5437 / 647.269.4130

---

**BIRCHMOUNT & FINCH**
4 bedroom detached house for rent. Close to stores, hospital, ttc, etc. Avail. anytime.
தொடர்புகளுக்கு: 416.897.4838

---

**BIRCHMOUNT & FINCH**
மேல்தளத்தில் 3 அறைகளும், கீழ்தளத்தில் 3 அறைகளும் வாடகைக்கு உண்டு. Close to all facilities. அத்துடன் 1 தனி அறையும் வாடகைக்கு உண்டு. Avail immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

# HOUSE FOR SALE

புலோலியில் 3 பரப்பும் 11குளியும் கொண்ட காணியில் 6 அறைகள் கொண்ட வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு. கோவில், பாடசாலை, வைத்தியசாலை, பஸ்தரிப்பு என்பன அருகில்.
ananthy273@hotmail.com.

---

**DANFORTH & EGLINTON**
4 bedroom new Townhouse for sale. Close to bus, 5 min. to Kennedy subway, stores. தொடர்புகளுக்கு: 647.960.4120

---

# HOUSE FOR SALE

மானிப்பாயில் 3 3/4 பரப்பு காணியில் உள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. கோவில், வைத்தியசாலை, பாடசாலை என்பன அருகில் உள்ளன.
தொடர்புகளுக்கு: 011.94.1.1250.3018
mohan1821@hotmail.com

# SPACE FOR RENT

**KENNEDY & LAWRENCE**
Office, நடனவகுப்புக்கள்,Tution போன்றவற்றை நடத்தக்கூடிய இடம் ஒன்று வாடகைக்கு உள்ளது.
416.755.8354 / 647.836.9255

---

KKM Auto Maintance Inc. கார் Wash பண்ணுவதற்கு ஓர் இடம் வாடகைக்கு உண்டு.
416.755.8354 / 647.836.9255

மேலும் பக்கங்கள் 24, 26

# JOB JOB JOB

## COOK & CASHIER WANTED

**MIDDLEFIELD & FINCH**
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் உணவகம் ஒன்றுக்கு, சமையல் தெரிந்தவரும் Cashier வேலைக்கும் ஆட்கள் தேவை
தொடர்புகளுக்கு: 416.286.5868

---

**KENNEDY & ELLESMERE**
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக தொடர்புகளுக்கு: 647.430.8238

## SAREE BLOUSE



**அனைத்து தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259

## COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

# TUITION

**MCLEVIN & TAPSCOTT**
Behind Malvern mall.
Math & English (JK - Grade 3).
Homework help. Preparing kids for JK. 3 Classes a week $50 per month.
தொடர்புகளுக்கு: 416.332.1254

# ஆசிரியர் தேவை

**MIDLAND & FINCH** சந்திப்பிற்கு அருகாமையில் வீட்டிற்கு வந்து Math & English பாடங்களும், வீட்டு வேலைகள் (Home Work) போன்றவற்றை படிப்பிப்பதற்கும் கனடாவில் பட்டம் பெற்ற ஆசிரியர் அல்லது ஆசிரியை தேவை.
தொடர்புகளுக்கு: 647.701.1666

# CARS FOR BUY & SELL

2005 Corolla, 2001 Toyota Sienna, 1997 Honda Civic, 1995 Honda Accord கார்கள் விற்பனைக்கு உண்டு.
கார்கள் வாங்குவதற்கும் விற்பனைக்கும் உண்டு.
அத்துடன் **Van** வாடகைக்கு ஓட்டப்படும்.
அழையுங்கள் : **416.625.4146**

# மணமகள் தேவை

35 வயதுடைய M.SC. முடித்த மணமகனுக்கு கனடாவில் வசிக்கும் படித்த மணமகள் தேவை.
905.426.8424 / 905.472.8533

---

# மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த தற்பொழுது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Accounts assistant ஆக பணிபுரியும் 1972 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம், 5'4" உயரமுடைய அழகிய பெண்ணுக்கு நற்பண்புள்ள வரனை எதிர்பார்க்கின்றோம். திருமண சேவை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 647.618.9316

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 647.831.0363

**Tutoring**
Gr.1-12; College & University
* English * French * Math * Physics * Chemistry * Biology *
- Systematic and individualized Plan to Build Strong Base in Core Subject Areas
- Strict Adherence to Ontario Curriculum
- Regular School Teachers and Canadian University Graduate and Post Graduate Students Taking Classes

GTA Tutors
Ph: (647) 705 0725
Our Aim is to Make Students Competent Internationally while Committed to Affordable Rates

# மகாவம்சத்திலிருந்து சிங்கள தேசியவாதத்தை நோக்கி - 2

நடராஜா முரளிதரன்

## இலங்கையின் வரலாற்றை எழுதுதல்

நீண்ட காலமாகக் கவனிப்பாரின்றிக் கிடந்த மகாவம்சத்தின் விளக்கவுரையை பௌத்த மதகுருவானவர் மூலம் பெற்றுக் கொண்ட “Turnour” அவர்கள் 1826இல் அதனை முதன் முதலாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருந்தார். இந்த மொழிபெயர்ப்பு இலங்கை தொடர்பான மதிப்பை அதன் தொன்மையான சமூக, பண்பாட்டுப் பாரம்பரிய வரலாற்றுக் காரணிகளுக்கூடாக அனைத்துலக அளவில் எடுத்தியம்ப உதவியுள்ளது.

1912 இல் “கெய்கா” என்ற ஜேர்மனியர் மகாவம்சத்தை முழுமையாக மொழி பெயர்த்து வெளியிட்டார். “குணரத்னாவின்” கூற்றுப்படி மகாவம்சமானது ஜேர்மனியர்கள், ஆங்கிலேயர்கள் போன்றோரால் பொதுமக்களது சொல்லாடல் தளத்திற்கும், கருத்துப் பரிமாற்றத்திற்கும் கொண்டு வரப்பட்டது. இதன் பின்னர் மேற்கூறிய இருவரதும் நூல்களை ஆதாரம் காட்டி மேலும் பலர் பல நூல்களை எழுதியிருந்தார்கள்.

19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இலங்கை தொடர்பான வரலாற்று நூல்கள் உண்மையில் ஆங்கிலம் படித்த இலங்கையர்களுக்கு இங்கிலாந்தின் அரசியல் கருத்துக்களைக் கூறுவதற்காகவே பயன்படுத்தப்பட்டது எனலாம்.

அன்றைய காலகட்டத்தில் “பௌத்தம்” என்பது எந்த ஒரு இன-மொழிக் குழுவுக்கும் தனியான உரித்துடையதாக இருக்கவில்லை. பௌத்தத்திற்கு விளக்கவுரை எழுதியவர்களில் பெரும்பான்மையானோர் சோழத் துறவிகளாகவோ அல்லது தென்னிந்தியத் தொடர்புகளைக் கொண்டவர்களாகவோ இருந்தார்கள்.

சமகால நிகழ்வுகளில் இருந்து கடந்த காலத்தை உய்த்தறிய முனைவதை இங்கு உள்ளார்ந்து காண முடிகிறது. தற்காலத்தில் காணப்படும் இந்த வரலாற்றுப் பிரக்ஞை என்பது மட்டுமே தன்னளவில் பண்டைய காலத்தில் இருந்தே இப்படிப்பட்ட வரலாற்றுணர்வு தொடர்ந்து வருவதாக அர்த்தப்படுத்திவிடுவதற்கு ஆதாரமாக அமைய மாட்டாது.

எனவே சிங்கள மக்களது வரலாற்றுப் பிரக்ஞை என்பது வரலாற்று நினைவுகளில் இருந்து பெறப்பட்டதாகக் கருதமுடியாது என்பது கட்டுரையாளரது வாதம். இதற்கு மாறாக ஜதீகங்கள், வீரகாவியங்கள், சடங்குகள் போன்றவற்றை முன்வைத்துத் தொடர்ச்சியான வரலாற்றுப் பிரக்ஞையைச் சிங்கள மக்கள் கொண்டிருந்தனர் என்ற வாதமும் சிலரால் முன்வைக்கப்படுகின்றது என்பதையும் “குணரத்னா” தனது கட்டுரையில் சுட்டிக் காட்டுகிறார்.

இலங்கையின் பாரம்பரிய இலக்கியங்கள் முழுதாகப் பௌத்த மத அறநெறி சார்ந்தவையாகவும், புராணச் சம்பவங்களைக் கொண்டதாகவும், கோட்பாட்டு விளக்கங்களாகவும் அமைந்திருந்தன. புத்தரது வாழ்வு, மன்னர்களது பட்டியல், மன்னர்கள் எவ்வாறு பௌத்தத்திற்கு சேவையாற்றினார்கள் போன்றவை அதற்குள் அடங்குகிறது.

17ஆம் நூற்றாண்டின் சிங்கள இலக்கிய மரபில் வேறுபட்ட இலக்கிய வடிவங்கள் ஆரம்பமாகத் தொடங்கின. வரலாறு தொடர்பான கதையாடல்கள், பயணக் குறிப்புக்கள், இலங்கையோடு தொடர்புடைய ஐரோப்பியரது நினைவுக் குறிப்புக்கள் என அவை அமைந்தன.

இதில் முக்கியமாக “Robert knox” கிழக்கிந்தியக் கொம்பனியில் மாலுமியாகப் பணியாற்றியவர். இவரது கப்பல் கிழக்கிலங்கையில் கொட்டியாரக் குடாவில் கரைதட்டிய போது 1660இல் சிறைப் பிடிக்கப்பட்டார். இவர் ஏறத்தாள 20 வருடங்கள் கண்டிய மன்னனின் கைதியாக சிறை வைக்கப்பட்டிருந்தவர். இவர் சிங்கள மொழியைக் கற்று அவர்களது பழக்க வழக்கங்களில் நன்கு தேர்ந்திருந்தார். விவசாயியாக, வியாபாரியாக வாழ்ந்த இவர் கிராமம், கிராமமாக அலைந்து திரிந்தவர்.



AN
Hiſtorical Relation
Of the Iſland
CEYLON,
IN THE
EAST-INDIES:
TOGETHER,
With an ACCOUNT of the Detaining in Captivity the AUTHOR and divers other Engliſhmen now Living there, and of the AUTHOR's Miraculous ESCAPE.

Illuſtrated with Figures, and a Map of the ISLAND.

By ROBERT KNOX, a Captive there near Twenty Years.

LONDON,
Printed by Richard Chiſwell, Printer to the ROYAL SOCIETY, at the Roſe and Crown in St. Paul's Church-yard, 1681.

FACSIMILE OF TITLE PAGE OF 1681 EDITION

இவர் எழுதிய “நூல்” கண்டிய சமூக வரலாறு தொடர்பாக முக்கியமான நூலாகக் கருதப்படுகின்றது.

கண்டி இராச்சியமானது மன்னருக்கும், பிரதானிகளுக்கும், சேவை செய்வதை அடிப்படையாகக் கொண்ட சாதீயக் கட்டமைப்பைக் கொண்ட சமூகமாகவே இருந்தது. பௌத்த மதத்தின்பால் இவர்கள் கொண்டிருந்த பற்றுதியானது இவர்கள் அனைவரையும் இணைக்கும் பொதுவான அடையாளமாக அமைந்தது. தென்னிந்தியாவைச் சேர்ந்த நாயக்க அரச பரம்பரையினர் ஏறத்தாள நூறாண்டுகள் காலம் இந்த இராச்சியத்தை ஆண்டுள்ளனர். இவர்களே நாட்டில் இருந்த ஒரேயொரு “சத்திரிய” சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதால் தொடர்ச்சியாக ஆள முடிந்தது. இங்கு அரச பதவியென்பது சடங்கு ரீதியான சாதீய அந்தஸ்த்தினால் நிர்ணயிக்கப்படுவதாக அமைந்திருந்தது. ஆனாலும் இவர்கள் பௌத்தத்தைத் தழுவியவர்களாக இருந்தார்கள்.

கரையோர மக்கள் தமிழ் - சிங்கள மக்கள் மத்தியில் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்களைத் தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்களாயே “குணரத்னா” குறிப்பிடுகிறார். இவர்கள் மன்னர்களிடம் சேவையாற்றுவதற்கு வந்த படைவீரர்கள். 1400களில் கோட்டையை ஆண்ட 4ம் பராக்கிரமபாகுவினால் தென்னிந்தியாவில் இருந்து பணிக்கென அழைத்து வரப்பட்ட படை வீரர்களுக்கு அளிக்கப்பட்ட பகுதியே நீர்கொழும்பு பகுதி. ஆனால் இவர்கள் படிப்படியாக சிங்கள மொழியையும், கலாச்சாரத்தையும் அறிந்து கொண்டு வாழுவதற்குத் தலைப்பட்டார்கள். இன்று சிங்கள மக்களாகவே ஆக்கப்பட்டும் விட்டார்கள்.

19ஆம் நூற்றாண்டில் சிங்கள மக்கள் மத்தியில் எழுச்சிக்குள்ளாகின்ற புதிய மேட்டுக்குடியாக Michael Roberts என்பவர் “கரவா சாதியை” நோக்குகிறார். இவர் மேற்கோள் காட்டும் கதை “ஜெரோனிஸ் பீரிஸ்” என்பவர் பற்றிய கதை. இந்த வாய் வழிக் குடும்பக் கதையின்படி ஜெரோனிஸ் பீரிசுடைய தந்தையார் வட இந்தியாவைச் சேர்ந்த ராஜபுட் மரவர் சாதியைச் சேர்ந்தவர். 1747 - 1782 பகுதியில் கண்டிய அரசனாக விளங்கிய “கீர்த்தி சிறி இராஜசிங்கனது” படையின் தலைமை அதிகாரியாக இருந்தவர். அவரது பணிக்காலம் முடிந்தவுடன் அங்கேயே தங்கி விட்டார். அத்துடன் கண்டிய உடை, சிங்களப் பெயர் போன்றவற்றையும் தனதாக்கிக் கொண்டுவிட்டார்.

கரவா சாதியினரிடம் மரபார்ந்த கதையுண்டு. பாரத யுத்தத்தில் தோல்வியடைந்த சத்திரியர்களான கௌரவர்கள் பல இடங்களுக்கும் பரவிச் சென்று வாழ்ந்ததாகவும் அவர்களின் வழித்தோன்றல்கள்தான் தாங்கள் என்பதாகவும் அக்கதை அவர்கள் மத்தியில் நம்பப்பட்டு வருகிறது. இங்கு மேலே கூறப்பட்ட ஜெரோனிஸ் பீரிசுடைய கதை கரவா சாதியினரிடம் பெருவழக்காகப் பேசப்பட்டு வந்த வாய் வழிக் கதையான சத்திரிய வம்சம் தொடர்பான கருத்தை மறுதலிப்பதாவே அமைந்துள்ளது. இங்கு கரவா சாதியினர் தம்மைச் சத்திரியர்களாக இனம் காட்ட முனைவதானது கொவிகம சிங்களவரது ஆதிக்க நிலைக்கு எதிரான கரவா சாதியினரின் எதிர்நிலையாகக் கட்டுரையாளர் இனம் காண்கிறார்.

Stirret என்பவரின் ஆய்வு, கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த கரவா சாதியினரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப்படி இவர்கள் கடலிலும், வீட்டிலும் தமிழைப் பேசுகிறார்கள். மற்ற விடயங்களுக்குச் சிங்களத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

1960 களின் ஆரம்பத்தில் சிங்களம் அவர்களது வாழ்வில் அதிகளவு முக்கியத்துவத்தைப் பெற ஆரம்பிக்கின்றது. இந்தப் போக்கை ஊக்கப்படுத்தியவை கத்தோலிக்க ஆலயங்கள். முன்பு இந்துக்களாக இருந்த இவர்கள் மதமாற்றத்திற்கு உட்பட்ட காலகட்டம் போர்த்துக்கேசர் காலம். ஆயினும் இப்போது அவர்கள் முற்றிலும் சிங்களவர்களாக மாறி விட்டார்கள். (இன்னும் வரும்)

**TUTORING**
**BRIMLEY & LAWRENCE**
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS.
**Grade 5 - 12**. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: **416.669.3101**

**சங்கீத வகுப்பு**
Ajax, Markham, Scarborough, Downtown
ஆகிய இடங்களில் Swaraganam Academy
ஆசிரியை வாசுகி சிகாமணி அவர்களால் சங்கீத வகுப்பு நடத்தப்படுகின்றது.
தொடர்புகளுக்கு: 905.427.1792

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 24, 25

**VACANCY**
*Accounting Clerk - Scarborough*
***Qualifications**: College diploma in accounting simple accounting Lotus - 1 - 2 - 3 / Excel, Data Entry.*
**Training would be provided. Please send a resume to the following email address those who have the above qualifications. Email address: singco90@yahoo.com.**

**Commercial Basement For Rent**
**MARKHAM & ELLESMERE**
Smart kids Diaper Factory Outlet இன் நில அறை வாடகைக்கு உண்டு. Very Busy area.
தொடர்புகளுக்கு: **416.499.8517 / 647.321.7575**

## சுயாதீன கலை திரைப்பட மையம் ரொரண்ரோ

## 9th IF Tamil -2011

ஒன்பதாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா - படைப்புகளுக்கான கோரல்

சுயாதீன கலை திரைப்பட மையத்தால், கனடாவின் ரொரன்ரோ நகரில் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புக்கள் ஆங்கில துணைத் தலைப்புக்களை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

விழாவில் சிறந்த திரைப்படைப்புக்களுக்கான 3 பரிசுகள் வழங்கப்படும்.
அவையாவன:: $500- $300- $200

படைப்புக்கள் பின்வரும் விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்படவேண்டும்:

- படைப்புக்கள் மே 15, 2011க்கு (May. 15, 2011) முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புகளுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்பக்கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது..
- படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

Tam Sivathasan
Exceutive Director - IAFS
1345 Morningside Ave., Unit # 8, Toronto, ON. Canada, M1B 5K3
மேலதிக தொடர்புகளுக்கு: 1-416-450-6833; 1-416-804-3443;
rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com
- Independent Art Film Society of Toronto

# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# "உயிரினும் மேல் எங்கள் தாய்மொழி"

உலகில் பல மொழிகள் உண்டு. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்"என்றார் பாரதி யார். மூத்த மொழி எங்கள் தமிழ் மொழி. தமிழ் மொழி இனிமையான ஒரு மொழி. அதனால் தான் அதனை "அமுது" என்றழைப்பர். தமிழ் தமிழர்களாகிய எங்களின் தாய்மொழி. தமிழ் பேசும் தமிழர்கள் உலகில் பல நாடுகளில் உள்ளனர். எனினும் இந்தியாவில் தமிழகத்திலும் இலங்கையில் தமிழீழத்திலுமே அதிகமாக உள்ளனர்.

தமிழ் இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பிரிக்கப்படுகின்றது. இதனால் தமிழை "முத்தமிழ்" என்றும் அழைப்பர். தீஞ்சுவை கொண்டதனால் அதனை "தீந்தமிழ்" என்பர். பசுமை நிறைந்ததனால் "பைந்தமிழ்" என்பர். என்றும் இளமையானது என்பதனால் அதனை "இளந்தமிழ்" என்றும் "கன்னித்தமிழ்" என்றும் அழைப்பர். இவ்வண்ணம் தமிழை பலவாறெல்லாம் போற்றுவர்.

தமிழ் ஒரு மூத்த மொழி. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கும் முன் தோன்றிய மொழி. பழமையான எங்கள் தமிழில் பழமையான நூல்கள் பல உள்ளன. தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, மலைபடுகடாம் போன்ற பல சிறப்பான நூல்கள் உள்ளன. ஐம்பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணி மேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பன தமிழ்த்தாயை அலங்கரிக்கும் அணிகலங்களாகத் திகழ்கின்றன. பொய்யா மொழியான திருக்குறளோ உலகப் பொதுமறையாக உலகமக்களால் பெரிதும் போற்றப்படு கின்றது. தமிழ் நூல்கள் உலகிற்கே வழிகாட்டியாக விளங்கி நல்ல கருத்துகள் பலவற்றை உலகமக்களுக்குச் சொல்கின்றன.

தமிழ் அழகிய பண்பாட்டுச் சிறப்புள்ள ஒரு மொழி. பல்லின மக்களும் விரும்பும் ஒரு அழகிய மொழி. இனிமையான தமிழை சொல்ல சொல்ல இனிமையாக இருக்கும். பல்லின மக்கள் வாழும் நாட்டில் வாழும் எம்மை தமிழர் என அடையாளம் காட்டுவது எங்கள் தமிழ் மொழியாம் தாய்மொழி. தமிழில் 247 எழுத்துக்கள் உள்ளன. அவையாவன 12 உயிர் எழுத்துக்கள், 18 மெய் எழுத்துக்கள், 216 உயிர் மெய் எழுத்துக்கள் 1 ஆய்த எழுத்து என்பனவாகும். தமிழ் எழுத்துக்கள் வல்லினம் மெல்லினம் இடையினம் என ஒலிக்கேற்ப பிரிக்கப்படும். நீண்டு ஒலிக்கும் எழுத்துக்கள் நெட்டெழுத்துக்கள் என்றும் குறுகி ஒலிப்பவை குற்றெழுத்துக்கள் என்றும் பிரிக்கப்படும்.

தமிழில் இல்லாத சொற்களே இல்லை. வளமான எங்கள் தமிழிருக்க நாம் வேறு மொழியை நாடலாமா? கனியிருப்பக் காய் விரும்பலாமா? அந்நிய மொழி மோகம் எம்மை ஆட்டிப் படைக்கலாமா? தமிழர் நாம் வீட்டில் ஆங்கிலத்தில் பேசலாமா? தமிழ்ச் சிறுவர் நாம் மற்றைய தமிழ்ச்சிறுவர்களுடன் வேற்றுமொழியில் கதைப்பது தவறல்லவா? வேற்றுமொழி தன்னில் பல வித்தை கற்றாலும் வீட்டுமொழி தமிழது என்று விரும்பிப் படிக்க வேண்டும்.

இங்கே பல தமிழ்ப் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு தமிழ் சொல்லிக் கொடுக்கவென்று தமிழ் பள்ளிகளுக்கு ஓடியோடி அனுப்புகின்றனர். வீட்டில் தம் பிள்ளைகளுடன் தமிழில் கதைக்காமல் பிள்ளைகள் தமிழ் பேசுகிறார்களில்லை என்று சொல்லி கவலைப்படுவது சரியா? வீட்டில் பெற்றோர் ஆங்கிலம் கதைத்தால் பிள்ளைகள் தமிழ் கதைக்க ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். முயற்சிக்கவும் மாட்டார்கள். தமிழை வளர்க்க வேண்டுமானால் முதலில் தமிழை வீட்டில் நாம் கதைக்க வேண்டும். நல்ல தமிழ்ப் பண்பாட்டை பின்பற்றி நல்ல தமிழராக வாழவேண்டும்.

தமிழிற்கும் தமிழராகிய எமக்கும் உள்ள உறவை எவரும் பிரிக்க முடியாது. தமிழை தாயை விட உயர்வாக போற்ற வேண்டும். தமிழை தமிழன்னையாகப் போற்றி வணங்கிக் காப்பாற்ற வேண்டும். எங்கள் அம்மாவிற்கு ஒரு துன்பம் வந்தால் நாங்கள் துடிப்பது போல் தமிழை யாரும் அவமதித்தால் நாங்கள் துடிக்க வேண்டும். கோபம் கொண்டு தட்டிக்கேட்க வேண்டும். எங்கள் மொழியைப் பழிக்க எவரையும் விடக் கூடாது. தமிழின் பெருமை அதன் தொன்மையிலில்லை. அதன் தொடர்ச்சியில் மட்டுமே உள்ளது! தங்கத்தமிழும் தமிழீழ மண்ணும் தமிழர்களாகிய எங்கள் இரு விழிகள்!

தமிழைப் போற்றுவோம்!
நல்ல தமிழராய் வாழ்வோம்!



**திவ்யா பிரபாகரன்**
**அகவை 11**

# ஓர் இதய நோய் நிபுணருடன் கலந்துரையாடல்

## மின்வலையில் வந்தவை - 8

**டாக்டர் தேவி ஷெட்டி**
**இருதய நிபுணர் - பங்களூர்.**

**கேள்வி** - பொது மனிதனுக்கு இதயத்தைப் பாதுகாப்பதற்குரிய அறிவுறுத்தல்கள் என்ன?
பதில் - 1. உணவு - குறைவான காபோவைதரேற்றும் எண்ணையும், கூடுதலான புரதம்.
2. உடற்பயிற்சி - வாரத்தில் 5 நாட்களுக்காகவேனும் அரை மணித்தியால நடை, மின்சார ஆள்காவிகளை (Elevator ) தவிருங்கள், நீண்ட நேரம் அமர்ந்திருப்பதையும் தவிருங்கள்.
3. புகைப்பதை விட்டுவிடுங்கள்.
4. உடல் எடையைக் கட்டுப்படுத்துங்கள்.
5. இரத்த அமுக்கம் (Blood Pressure), சீனி இரண்டையும் கட்டுப்படுத்துங்கள்.

**கேள்வி** - மாமிச உணவு (மீன்) இதயதுக்கு நல்லதா?
பதில் - இல்லை.

**கேள்வி** - நல்ல தேகாரோக்கியமுள்ளவர்களில் சிலர் இதயத் தாக்கத்துக்கு ஆளாகிறார்களே. இதை எப்படி விளங்கிக்கொள்வது?
பதில் - இது அமைதியான இதயத் தாக்கம் எனப்படுகிறது. இதனால் தான் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் யாவரும் வழமையான உடல் பரிசோதனைகள் செய்ய வேண்டும் என நாம் விதந்துரைக்கிறோம்.

**கேள்வி** - இதய நோய்கள் பரம்பரை நோய்களா?




பதில் - இல்லை.

**கேள்வி** - இதயத்துக்கும் கூடுதலான அழுத்தந் கொடுக்கும் சந்தர்ப்பங்கள் எவை? இவ்வழுத்தங்களை (Stress) குறைப்பதற்கான நடைமுறைகள் என்ன?
பதில் - வாழ்க்கை பற்றிய உங்கள் மனப்பான்மையை மாற்றுங்கள். வாழ்வின் ஒவ்வொரு நடைமுறையிலும் ஒரு பூரணத்துவத்தை (Perfection) அடைய எத்தனிக்காதீர்கள்.

**கேள்வி** - ஓர் ஆரோக்கியமான இதயத்தைப் பேணுவதற்கு நடப்பதா, மெல்ல ஓடுவதா, தீவிர உடற்பயிற்சியா உகந்தது.
பதில் - மெல்ல ஓடுவதிலும் பார்க்க நடப்பது நல்லது. ஏனெனில் ஓடினால் விரைவில் களைப்பும், மூட்டுக்களில் காயங்களும் ஏற்படலாம்.

**கேள்வி** - நீங்கள் வறியவர்களுக்கும் தேவைபட்டவர்களுக்கும் அளப்பரிய சேவைகள் செய்துள்ளீர்கள். இவற்றைச் செய்வதற்கு உந்துசக்தியாக இருந்தவர் யார்?
பதில் - என்னிடம் மருத்துவசேவைக்காக வரும் தெரோசா அம்மையார்.

**கேள்வி** - குருதி அமுக்கம் குறைவானவர்களுக்கு இதய நோய்கள் வருமா?
பதில் - மிகவும் அரிது.

**கேள்வி** - கொலஸ்ரோல் சிறுவயதிலிருந்தே உடலில் ஒன்று சேர ஆரம்பிக்குமா? (எனக்கு இப்போது 22 வயது) அல்லது 30 வயதுக்குப் பின்னரே அதைப்பற்றி அக்கறை கொள்ளவேண்டுமா?
பதில் - ஒன்று சேர ஆரம்பிக்கும்.

**கேள்வி** - ஒருங்கீனமான உணவு, உண்ணும் பழக்கம் எவ்வாறு இதயத்தைப் பாதிக்கும்?
பதில் - நீங்கள் விரைவுணவுகளை (Junk Foods) ஒழுங்கற்ற முறையில் உண்ணும் பழக்கமுள்ளவர்களானால், உணவை ஜீரணிக்கும் நொதியங்களை (Enzymes) உடல் சுரப்பதற்குக் குழப்பமடையும்.

**கேள்வி** - மருந்துகள் எதுவும் சாப்பிடாமல் கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டும்?
பதில் - உணவுக்கட்டுப்பாடு, நடை, வோல்நாற் (Walnut) சாப்பிடல்.

**கேள்வி** - யோகாப்பயிற்சி இதய நோய்களுக்குச் சிறந்ததா?
பதில் - யோகா உதவும்.

**கேள்வி** - இதயதுக்குச் சிறப்பான, கூடாத உணவு எது?
பதில் - சிறந்தது பழங்கள், கூடாதது எண்ணெய்.

**கேள்வி** - எந்த எண்ணெய் நல்லது? நிலக்கடலை, ஒலிவ், சூரியகாந்தி.
பதில் - எல்லா எண்ணெய்களும் கூடாது.

**கேள்வி** - ஒருவர் செய்ய வேண்டிய வழமையான பரிசோதனைகள் எவை? ஏதாவது குறிப்பான பரிசோதனை தேவையா?
பதில் - சீனி, கொலஸ்ரோல் சரியாக உள்ளனவா என்பதைப் பார்க்க வழமையான குருதிச் சோதனை செய்ய வேண்டும். குருதி அமுக்கத்தைச் சரிபார்க்க எக்கோ சோதனையும் நடையந்திரப் பரிசோதனையும் செய்ய வேண்டும்.

**- துறையூரான் -**

**கேள்வி** - இதயத் தாக்கம் ஏற்பட்டவுடன் செய்ய வேண்டிய முதலுதவிப் படிநிலைகள் எவை?
பதில் - தாக்கமடைந்தவரை படுக்க வைத்து, அவரின் நாவுக்குக் கீழே டிஸ்பிரினும், சோர்பிற்றேற் வில்லையிருந்தால் அதையும் வைக்கவும். பின்னர் அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும். ஏனெனில் தாக்கம் ஏற்பட்ட ஒரு மணித்தியாலத்துக்குள் தான் பாரிய இழப்புகள் ஏற்படுகின்றன.

**கேள்வி** - இதய தாக்கத்தின் போது ஏற்படும் வலிக்கும், வயிற்றுக்கோளாறு ஏற்படும் போதுள்ள வலிக்குமுள்ள வித்தியாசம் என்ன.
பதில் - இதய அமுக்கத்தைக் காட்டும் கருவி (EGC) இன்றி வித்தியாசமறிய முடியாது.

**கேள்வி** - வாலிப வயதினரிடையே அதிக அளவு இதய நோய்கள் காணப்படுவதற்கான முக்கிய காரணங்கள் யாவை? 30 - 40 வயதுக்குட்பட்டவர்கள் கூடுதலான இதய நோய்கள் இதயத்தாக்கத்தால் பீடிக்கப்பட்டிருப்பதை நான் அவதானித்திருக்கிறேன்.
பதில் - கூடிய அளவு விழிப்புணர்வு இருப்பதால் நிகழ்வுகள் அதிகரித்துள்ளன. மேலும் ஓரிடத்தில் அமர்ந்திருந்து வாழும் நடைமுறை, புகைத்தல், துரித உணவு, தேகப்பயிற்சி இன்மை ஆகியனவும் முக்கிய காரணங்கள். ஆசியர்களுக்கு ஐரோப்பியரையும், அமெரிக்கரையும் காட்டிலும், மரபு வழியாக மும்மடங்கு இதயநோய்கள் உண்டாகக் கூடியவாய்ப்புகள் உள்ளன.

**கேள்வி** - வழமையான 120/80 வீச்சுக்கப்பால் குருதியமுக்கமுள்ள ஒருவர், தேக ஆரோக்கியமுடையவராக இருக்க வாய்ப்புண்டா?
பதில் - ஆம்.

**கேள்வி** - நெருங்கிய உறவினரை மணமுடித்தால் குழந்தைக்கு இதய நோய்கள் ஏற்படலாம் என்பது உண்மையா?.

தொடர்ச்சி 30ம் பக்கம்

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது







## மேலைத் தேசத்தில் கீழைத்தேசத்து வாசனைகள்

நிரு பிராண்ட்

# நிரு பிராண்ட் தயாரிப்புக்களே

# ஓர் இதய நோய்...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

பதில் - ஆம், ஒரே இரத்த உறவால், பிறப்புப் பிறழ்வுகள் ஏற்படலாம். உங்கள் குழந்தை ஒரு கணினி எந்திரியாக வர வாய்ப்பில்லை.

**கேள்வி** - எம்மில் பெரும்பாலானோர் ஒழுங்கற்ற நடைமுறைகளைக் கொண்டுள்ளோம். சில காரியாலயங்களில் இரவு நேரத்திலும் தங்கியிருந்து வேலை செய்ய வேண்டியுள்ளது. இதனால் எமது இதயம் தாக்கமடையுமா? இதைத் தடுப்பதற்கு என்ன பாதுகாப்பு முறைகளைக் கையாளவேண்டும்?
பதில் - நீங்கள் சிறுவயதினராய் இருக்கும்போது இயற்கை உங்களைச் சீரற்ற ஒழுங்குமுறைகளிலிருந்து பாதுகாக்கும். ஆனால் வளரும் போது உயிரியல் கடிகாரத்தை (Biological Clock) மதித்தே நாம் நடக்க வேண்டும்.

**கேள்வி** - உயர் குருதியமுக்கத்துக்கு எதிராக நாம் எடுக்கும் மருந்துகள், குறுகிய அல்லது நீண்டகாலச் சிக்கல்களை எமக்கு ஏற்படுத்துமா?
பதில் - ஆம், பெரும்பாலானவை பக்க விளைவுகளை ஏற்படுத்தும். எனினும் தற்கால மருந்துகள் மிகவும் பாதுகாப்பானவை.




**கேள்வி** - கூடுதலாக கோப்பி, தேநீர் அருந்துவதால் இதயதாக்கம் ஏற்படுமா?
பதில் - இல்லை.

**கேள்வி** - தொய்வு (ஆஸ்மா) நோயாளருக்கு இதயநோய்கள் கூடுதலாக ஏற்பட வாய்ப்புண்டா?
பதில் - இல்லை.

**கேள்வி** - விரைவு உணவுகள் என்றால் எவை?
பதில் - பேர்கர் (Burgers), பொரித்த உருளைக்கிழங்கு (fries), பொரித்த உணவுகள், சமோசா, மசால தோசை முதலியன.

**கேள்வி** - இந்தியர்களுக்கு இதய நோய்கள் வருவதற்கு ஐரோப்பியரையும் அமெரிக்கரையுங் காட்டிலும் மூன்று மடங்கு கூடுதலான வாய்ப்புள்ளதாகக் கூறினீர்கள். அவர்களும் இந்த விரைவுணவுகளைக் கூடுதலாக உண்கிறார்களே?
பதில் - ஒவ்வொரு இனத்தவருக்கும் சில நோய்கள் ஏற்படக் கூடுதலான வாய்ப்புகள் உண்டு. துர் அதிர்ஷ்டவசமாக இந்தியர்கள் அதிகம் செலவான நோய்களுக்கு ஆளாகிறார்கள்.

**கேள்வி** - வாழைப்பழம் சாப்பிட்டால் குருதியமுக்கம் குறையுமா இல்லை.
பதில் - இல்லை.

**கேள்வி** - இதயத்தாக்கம் ஏற்படும்போது ஒருவர் தனக்கு உதவி செய்ய முடியுமா? (இதுபற்றிய பல மின்னஞ்சல்கள் வருகின்றன)
பதில் - ஆம். அவர் உடனே ஒரு அஸ்பிரின் மாத்திரையை நாவுக்குக் கீழ் வைத்து விட்டுப் படுத்துக்கொண்டு, உடனடியாகத் தன்னை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்படி கூறவேண்டும். அம்புலன்ஸ் (முதலுதவி) வண்டியை உடன் அழைக்கவும்.

**கேள்வி**- வெண்குருதிச் சிறுதுணிக்கைகள் குறைவும் ஈமோகுளோபின் குறைவும் இதய நோய்களை ஏற்படுத்துமா?
பதில் - இல்லை. ஆனால் உங்கள் உடற்பயிற்சி ஆற்றலை அதிகரிப்பதற்கு சாதாரண ஈமோகுளோபின் மட்டத்தைக் கொண்டிருப்பது சிறந்தது.

**கேள்வி**- அவசரவேலைகளின் காரணமாக நாம் சிலவேளை உடற்பயிற்சி செய்ய முடியாமல் போகிறது. அவ்வேளை வீட்டில் வேலை செய்யும் போது நடந்து திரிவது, மாடிப்படிகளில் ஏறி இறங்குவது போன்றவை தேகப் பயிற்சியை ஈடுசெய்யுமா?
பதில் - நிச்சயமாக. ஒரே இடத்தில் அரை மணித்தியாலத்திற்கு மேல் அமர்ந்திருப் பதைத் தவிர்த்துக் கொள்ளவும். எழுந்து இடம் மாறுவது மிகவும் உதவும்.

**கேள்வி** - குருதி வெல்லத்துக்கும் இதய நோய்களுக்கும் தொடர்பு உண்டா?
பதில் - ஆம். மிகவும் வலிவான தொடர்புண்டு. நீரிழிவு நோயாளர்களுக்கு இதயதாக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமுண்டு.

**கேள்வி** - இதய அறுவைச் சிகிச்சைக்குப் பின் ஒருவர் கவனத்தில் கொள்ள வேண்டியவை எவை?
பதில் - உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி, உரிய நேரத்தில் மருந்து உட்கொள்ளல், கொலஸ்ரோல் கட்டுப்பாடு, குருதியமுக்கம், நிறை ஆகியன.

**கேள்வி** - இரவுநேர வேலைபார்ப்பவர்கள் பகல்வேலை பார்ப்பவர்களைக் காட்டிலும் கூடுதலாக இதயநோய்களுக்கு ஆளாகும் வாய்ப்புண்டா?
பதில் - இல்லை.

**கேள்வி** - குருதியமுக்கத்தைக் குறைக்கும் நவீன மருந்துகள் யாவை?
பதில் - நூற்றுக்கு மேற்பட்ட மருந்துகள் உள. உங்களுக்கு ஏற்றவற்றை உங்கள் வைத்தியர் தெரிவு செய்வார். ஆனால் அவற்றைத் தவிர்க்கும் வழிகளைக் கையாள்வது நல்லது. இயற்கை முறைகளான நடத்தல், நிறையைக் குறைப்பதற்கு உணவுக்கட்டுப்பாடு, வாழ்க்கை முறைகளை நோக்கும் மனப்பான்மையை மாற்றிக் கொள்ளல் ஆகியனவற்றைக் கைக்கொள்ளவும்.

**கேள்வி** - அஸ்பிரின் போன்ற தலைவலி மாத்திரைகள் இதயத் தாக்கத்தை அதிகரிக்குமா?
பதில் - இல்லை.

**கேள்வி** - இதயத் தாக்க வீதம் பெண்களைக் காட்டிலும் ஆண்களிளுக்கு அதிகமாக இருப்பதற்கு என்ன காரணம்?
பதில் - பெண்களை 45வயது வரைக்கும் இயற்கை பாதுகாக்கும். (ஆனால் தற்போதைய உலகளாவிய மதிப்பீட்டின்படி பெண்களுக்கு இதயதாக்கம் அதிகரித்துள்ளது.)

**கேள்வி** - எமது இதயத்தை நல்ல நிலையில் வைத்திருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?
பதில் - ஆரோக்கிய உணவு உட்கொள்ளல், துரித உணவுகளைத் தவிர்த்தல், உடற்பயிற்சியை தினந்தோறும் செய்தல், புகைபிடிக்காமை, 30 வயதின் பின் உடற்பரிசோதனை செய்து கொள்ளல். (6 மாதத்திற்கொருமுறை சிறந்தது.)

# தெரிந்ததும் தெரியாததும்



உன் அழகிய பெயர்
தெரியும்
உன் கம்பீரத் தோற்றம்
தெரியும்
நீ குழைந்து பேசும்
பேச்சுத் தெரியும்
உன் அளவுக்கு மீறிய ஆற்றல்
தெரியும்
உன் உதவிக்கரங்கள்
தெரியும்
உன் பட்டம் பதவிகள்
தெரியும்
உனக்குக் கிடைக்கும்
ராஜ மரியாதைகள்
தெரியும்
உன் மனிதாபிமான செயல்கள்
தெரியும்

வருடங்கள் பல பழகியும்
உன் கோபமுகம்
தெரியாது
உன் கடும் சொற்கள்
தெரியாது
இல்லை என்றவார்த்தை
உன் அகராதியில் இல்லை
உன் சாதுரியப்போக்கும்
தெரியும்
தெரிந்து கொண்டேன்
உன் இயல்பிலா நட்பை
வலித்தது மனதில் ஓர்
மூலையில்
ஆனாலும் உன் நட்புக்கு
தலை வணங்குகிறேன்.

---ரஞ்சி கதிர்---
ranji24.kathir@gmail.com

# 2011 ஒஸ்கார்

2011 ஒஸ்கார் விருதுக்கான இறுதிப் பரிந்துரைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. வழமை போல் பல ஆச்சரியங்கள். அதியசங்கள் நடைபெற்றுள்ளன. இவ்வருடம் கான்ஸ் திரைப்பட விழாவில் சிறந்த படமாக தேர்வு செய்யப்பட்ட Uncle Boonmee Who Can Recall His Past Lives தேர்வு செய்யப்படவில்லை. சிறந்த வேற்று மொழிப்படப் பட்டியலிலும் இடம் பெறவில்லை. இது ஒரு தாய்லாந்து படமாகும். ரொரன்ரோ விழாவில் சிறந்த மக்கள் தேர்வுப் படமான The King's Speech க்கு ஒஸ்காரில் வரவேற்பு அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. Mother (South Korea), The Secret In Their Eyes, Please Give, Cyrus, Exit Through The Gift Shop, The Red Riding Trilogy, White Material, I'm Here போன்ற பல படங்கள் பல விமர்சகர்களின் சிறந்த படப் பட்டியலில் உள்ளன. இம்முறை தேர்வு செய்யப்பட்ட படங்களில் பல படங்கள் தொழில்நுட்பம் விஞ்ஞானம் சார்ந்தவை. சீரிய சமூகப் பிரச்சினையை மையமாகக் கொண்டவை இரு படங்களே The Kids Are All Right, Winter's Bone ஆகியவையாகும். இவ் இதழில் இம் முறை இறுதிப் பட்டியலில் உள்ள 10 படங்களைப் பற்றிய சுருக்கத்தை பார்ப்போம். பிறிதொரு இதழில் வேற்று மொழிப் படங்கள், விவரணத் திரைப்படங்கள், குறும் படங்கள் பற்றிப் பார்ப்போம்.



## Black Swan



நியு யோர்க்கில் உள்ள நடன நிறுவனத்தின் நாட்டிய நிகழ்வு Swan Lake. இந்த நிகழ்வில் வெள்ளை, கறுப்பு வாத்தாக நடித்துக் கொண்டிருந்தவருக்கு மாற்றீடாக புதியவர் ஒருவரை தேடுகின்றனர். நினா இந்தப் பாத்திரத்துக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். இவரது தாய் முன்னாள் நடன நடிகை. இவரால் பெரியளவில் முன்னுக்கு வர முடியவில்லை. தாய்க்கு மகளின் முன்னேற்றத்தில் பொறாமை. லில்லி என்ற மற்றொரு நடிகைக்கும் நினா மேல் பொறாமை. நினாவை பின் தள்ள முயற்சிக்கின்றனர். ஒரு நாள் நினாவுடன் உறவு கொண்டு விட்டு அவளை எழுப்பாது லில்லி வந்து வாத்தாக வேடமேற்று நடிக்கின்றார். இந்த பொறாமை தொடர்கின்றது. நிறுவன முகாமைத்துவ நிறுவனர் நினாவை பாலியல் இச்சைக்கு கட்டாயப்படுத்துகின்றார். Natalie Portman நினாவாக நடித்துள்ளார். சிறந்த நடிகைக்கான இவரது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இயக்குனராக Darren Aronofsky பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

## The Fighter

மைக்கி, டிக்கி என்ற இரண்டு குத்துச் சண்டை வீரர்களைப் பற்றியது இப் படம். இருவரும் அரைச் சகோதரர்கள். டிக்கி முன்னாள் வீரர். போதை மருந்து பழக்கத்துக்குள்ளானவர். டிக்கியை இவர்களது தாய் ஆதரிளப்பார். மைக்கிக்கு கிடைக்கும் பணத்தை தாங்கள் சுருட்டிக் கொள்வதே இவர்களது நோக்கம். பல இன்னல்களை கடந்து இவர்களிடமிருந்து பிரிந்து எவ்வாறு மைக்கி வெற்றி பெறுகின்றார் என்பதே இப் படம். சிறந்த துணை நடிகருக்கும், சிறந்த துணை நடிகைகளுக்குமாக இப்படம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## Inception

பிரபல இயக்குனர் கிறிஸ்ரோபர் நோலனின் விஞ்ஞானப் படமிது. நினைவுகளுடாக பயணித்து மற்றவர்களின் விடயங்களை அறிவது ஒரு தேர்ந்த கள்ளனா டோமின் திறமை. இது இவரை மிகவும் பிரபல்யமாக்குகின்றது. இவருக்கு கிடைத்துள்ள புதிய வேலையை இவர் எவ்வாறு செய்தார் என்பதே மிகுதிப் படம். விமர்சகர்களின் பல பாராட்டுக்களைப் பெற்றது இப்படம். Sound Editing, Sound Mixing ,Visual Effects ஆகியவற்றிற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

# தூறல்

**வானரன்**

## The Kids Are All Right

யூல்ஸ், நிக் இரு லெஸ்பியன் தம்பதிகள். நிக் ஒரு வைத்தியர், யூல்ஸ் வீட்டு வேலைகளை கவனிக்கின்றார். பின்னர் நிலம் பராமரிப்பு வியாபாரத்திலும் ஈடுபடுகின்றார். இவர்களுக்கு இரண்டு ரீன் வயது பிள்ளைகள். இவர்கள் இருவரும் அரைச் சகோதரிகள். இவர்கள் இருவரும் ஒருவரது விந்தில் இருந்து உருவாக்கப்பட்டோர். இவர்களில் மூத்தவர் ஜோனிக்கு 18 வயதானவுடன் தனது உயிரியல் தந்தையின் விபரத்தை பெற்று அவரைச் சந்திக்கின்றனர் சகோதரிகள். சந்திப்பு தொடர்கின்றது. ஒரு நாள் தந்தை போலை இரவு உணவிற்கு அழைக்கின்றனர். போல் யூலியஸை தனது

தொடர்ச்சி 39ஆம் பக்கம்


APARTMENTS FOR RENT



$250 Move In Bonus

Best Building in Scarborough!

Clean, family building, FREE parking.

Close to schools, bus stop, Tamil store in building.

Pl. Call: 416.264.2818

# "வறுமை மிக மோசமான வன்முறை"

# சூடான், ரியுனிசியா, எகிப்து அடுத்து எங்கு?

மேற்கூறிய கூற்றைக் கூறியவர் மகாத்மா காந்தி. இன்று உலகில் நடைபெறுவதை இது வெளிப்படுத்துகின்றது.

## சூடான்

சூடானின் வாக்கெடுப்பு முடிவுகள் பெப்ரவரி 14இல் வெளிவரும். 60 வீதமானோர் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தால் தெற்கு பிரிவது உறுதியாக்கப்படும். இதுவரை வெளியான முடிவுகள் பெரும்பாலானோர் ஆதரவாக வாக்களித்துள்ளதாக தெரியவருகின்றது. கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் உள்ள சூடானியர் 97 வீதமானோர் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். தெற்கு சூடானில் 98 வீதமானோர் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். மத்திய சூடானிலும், வடக்கு சூடானிலும் இந்த பிரிவினைக்கு ஆதரவான வாக்குகளின் வீதம் சற்று குறைவாக உள்ளது. ஆனாலும் இங்கும் பெரும்பான்மையினர் பிரிவினையை ஆதரிக்கின்றனர். பெரும்பாலானோர் வடக்கு சூடானுக்கு வெளியில் வசிப்பதனால் வடக்கு சூடான் முடிவுகள் தெற்கு சூடானின் வெற்றியை பாதிக்காது. தெற்கு சூடான் பிரிவினைக்கு தயாராகி விட்டது. மாசி 14 அவர்களுக்கு ஒரு மகா விடுதலை நாள். அவர்களை நாமும் வாழ்த்துவோம். கடந்த வாரம் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் பேச்சிலும் தெற்கு சூடானின் வெற்றிக்கு அமெரிக்காவும் ஒரு காரணம் எனக் குறிப்பிட்டார். செனட்டர் கெரி, முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டர், நடிகர் ஜோர்ஜ் குளுனி போன்றோர் வாக்கெடுப்பின் போது தெற்கு சூடானில் காணப்பட்டனர். எண்ணெய் வளமிக்க தெற்கு சூடானில் அமெரிக்கா தன்னை நிலை நிறுத்தியுள்ளது. அடுத்து எங்கு ரியுனிசியாவா?

'உனக்கு எது சொந்தமானதோ, அது என்னுடையது' பென் அலி குடும்பம்

## ரியுனிசியா 'ஜஸ்மின் போராட்டம்'

அல்ஜீரியாவிற்கும் லிபியாவிற்குமிடையில் மத்திய தரைக் கடலில் அமைந்துள்ளது ரியுனிசியா. அற்லஸ் மலைத் தொடரில் அமைந்துள்ள சிறிய நாடு இது. அமெரிக்க மாநில மான ஜோர்ஜியாவின் பரப்பளவைக் கொண்டது. கி.மு 1500-3000 ஆண்டளவில் Carthage இன் நகரமாக இருந்துள்ளது. பின்னர் ரோம சாம்ராஜ்யத்திலும் முக்கிய நகரமாக திகழ்ந்துள்ளது. bread basket என்ற பெயரையும் அப்பொழுது கொண்டிருந்தது. Ottoman Empire காலத்தில் Regency of Tunis என அழைக்கப்பட்டது. 1881 இல் பிரெஞ்சின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. 1956 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்று Kingdom of Tunisia ஆக மாறியது. 1957இல் Tunisian republic ஆக மாற்றம் பெற்றது.

மொத்த சனத்தொகை ஒரு கோடி (10 மில்லியன்)
மதம் : முஸ்லீம் 98 வீதம்
மொழி: அரபு, பிரெஞ்ச் பலராலும் விளங்கிக் கொள்ள முடியும். வர்த்தக மொழியாக பிரெஞ்ச் உள்ளது.

## சரித்திரக் குறிப்புக்கள்

25 July 1957: Neo Destour party இன் தலைவர் Habib Bourguiba ஜனாதிபதியாக பதவியேற்றார். இவர் அடுத்த 31 ஆண்டுகள் ரியுனிசியாவை ஆண்டார். இவரது ஆட்சிக் காலத்தில் எந்த அரேபிய நாட்டிலும் இல்லாத பல மாற்றங்கள் நடைபெற்றன. பெண்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்தினார். இது அரேபிய முஸ்லீம் நாடுகளில் எதிர்பார்க்க முடியாத ஒன்று. முஸ்லீம் மதத்துக்கு எதிரானவராக தன்னைக் காட்டிக்



கொள்ளாவிடினும், மத நிறுவனங்களின் பல நிலங்களை நாட்டுரிமையாக்கினார். பல மத நிறுவனங்களை மூடினார். இராணுவத்தை வளர்ப்பதில் அக்கறை காட்டவில்லை. இது தொடர்ச்சியாக இராணுவ ஆட்சியை உருவாக்கும் எனத் தெரிவித்தார். 1964 இல் இவரின் கட்சி சோசலிசக் கட்சியாக மாறியது. (Socialist Destour (Parti Socialiste Dusturien or PSD) விவசாயத்துக்கும், கூட்டுறவு முறை தொழில் அபிவிருத்தி முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. Ahmed Ben Salah திட்டமிடல் அமைச்சராக நியமனம் பெற்ற பின்னரே இந்த மாற்றங்கள் நடைபெற்றன. 1970 ஆம் ஆண்டு இவரது வெளியேற்றத்தின் பின் மீண்டும் பல அரச நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டன. இது 1978 இல் ஒரு மிகப் பெரிய பொது வேலை நிறுத்தத்தை ஏற்படுத்தியது. பல தொழிலாளர் தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். பல நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். இதே காலகட்டத்தில் எண்ணெய் நிலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. Renault போன்ற பிரெஞ்சின் மிகப் பெரிய மோட்டார் கார் நிறுவனங்களின் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. வெளி நாட்டு முதலீட்டுக்கள் அதிகரித்தன. இது வரை காலமும் ஒற்றை ஆட்சி முறையில் இருந்த ரியுனிசியாவில் இதர கட்சிகள் அலுவலகம் அமைக்க 1981 இல் அனுமதியளிக்கப்பட்டது. 1983 இல் தொடர்ச்சியாக ஏற்பட்ட பொருளாதார சரிவுகளைத் தொடாந்து சர்வதேச நாணய நிதி யம் விலைகளை அதிகரிக்குமாறு ஆலோசனை கூறியது. இது மீண்டும் பல தொடர் போராட்டங்களுக்கு வழிகோலியது. The Islamic Tendency Movement (MTI) of Rashid al-Ghannushi ஆதிக்கமும் செல்வாக்கும் அதிகரித்தது. பல இஸ்லாமிய தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். தொழிற்சங்கங்கள் கலைக்கப்பட்டன. பல செய்திப் பத்திரிகை நிறுவனங்கள் மூடப்பட்டன.

1982ல் இருந்து 1994 வரையிலான காலப் பகுதியில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முக்கிய தளங்களில் ஒன்றாக ரியுனிசியா விளங்கியது. 1985-ஐப்பசி 01ல் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் ரியுனிசிய தலைமையகம் இஸ்ரேலினால் குண்டுவீச்சுக்குள்ளானது. 60 பேர் இறந்தனர்.

கார்த்திகை-7-1987 இல் Habib Bourguiba இன் சுகயீனத்தை தொடர்ந்தும் Italian military secret service SISMI இன் ஊடுருவலின் பின்னணியில் பிரதம மந்திரி Ben Ali ஜனாதிபதியாக்கப்பட்டார். இந்தக் கால கட்டத்தில் இத்தாலியினதும் அல்ஜீரியாவினதும் ஆதிக்கம் ரியுனிசியாவில் அதிகரித்தது. 1994, 1999 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் பென் அலி முறையே 100, 99.4 வீதமான வாக்குகளைப் பெற்றார். இதுவே இவரது ஆட்சியின் உக்கிரத்தை வெளிப்படுத்துகின்றது. 2009 இல் ஐந்தாவது முறையாக 89 வீதமான வாக்குகளுடன் தேர்வானார். இவரது ஆட்சிக் காலத்தில் தொடர்ச்சியாக ரியுனிசியா பொருளாதாரத்தில் மேலும் வீழ்ந்தது. பென் அலியின் உறவி னர்களில் 50 வீதமான ரியுனிசிய வியாபார நிறுவனங்கள் உள்ளன. அரச நிறுவனங்கள் பல வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்பட்டு ஜனாதிபதியின் குடும்பச் சொத்தாக மாற்றப்பட்டது. இந்த நிலை அரச நிலங்கள், வரிப் பணங்கள் எனத் தொடர்ந்தன. ரியுனிசிய மத்திய வங்கியில் இருந்து 1.5 தொன் தங்கம் பென் அலி குடும்பத்தால் கடத்தப்பட்டு விட்டது. இவரது குடும்பத்தினர் பலர் டுபாயில் வாழ்கின்றனர். Zitoune Bank பென் அலியின் மருமகனுக்கு சொந்தமானது. புஷ் குடும்பத்துக்கும் பென் அலிக்கும் நெருக்கமான உறவுகள் இருந்ததாக தெரியவந்துள்ளது. இத்தாலி, அமெரிக்கா போன்ற நாடுகள் பென் அலியின் வளர்ச்சிக்கு உரமிட்டுள்ளார்கள். எண்ணெய் வளமிக்க ரியுனிசியாவின்

**- ரதன் -**

மோசமான நிலைக்கு இந்த மேற்கு நாடுகளே காரணம். சுதந்திரம் பெற்ற பின்னர் இதுவரை இரு ஜனாதிபதிகளே ரியுனிசியாவை ஆண்டுள்ளனர். தங்களது வீட்டு பின் முற்றம் என ரியுனிசியாவை இவர்கள் கருதியதே இதற்கு காரணம். பென் அலியின் தம்பி மொன்றியலில் உள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பென் அலியின் மகள் மொன்றியலைச் சேர்ந்த ஒரு தொழிலதிபரை மணந்துள்ளார். கனடா என்ன செய்யவுள்ளது என்பது ஒரு சில நாட்களில் உறுதியாக தெரிந்துவிடும்.

ஒரு காலத்தில் மார்க்சிய சிந்தனைகளைக் கொண்டு வளர்ந்த நாடு அதே இடது சாரிக்கட்சி பெயரைக் கொண்ட கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே தொழிற்சங்கங்களும், மக்களும் ஒடுக்கப்பட்டுள்ளனர். இன்று அதே மக்கள் வீதியில் அணி வகுத்து மிகப் பெரிய எழுச்சியை ஏற்படுத்தி, ஒரு பெரிய மாற்றத்தையே கொண்டு வந்துள்ளனர். இந்த எழுச்சியின் பின்னணியில் தொழிற்சங்கங்களே பிரதான பங்கு வகிக்கின்றன. இதன் ஆரம்பமே Mohamed Bouazizi இன் தற்கொலையில் இருந்து தான் ஆரம்பமானது. Eilghij மரக்கறி வியாபாரியான இவரது வியாபாரத்துக்கு தடை விதிக்கப்பட்டது. அனுமதியின்றி வியாபாரம் செய்தார் என குற்றஞ்சாட்டப்பட்டார். எண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். இன்று ரியுனிசியாவில் பென் அலி அகற்றப்பட்டு புதிய ஜனாதிபதி பதவியில் உள்ளார். உல்லாசப் பயணத்துறையும், ஏற்கெனவே முதல் அதிபரால் உருவாக்கப்பட்ட விளை நிலங்களும், எண்ணெய் வளமும் நாளை புதிய ரியுனிசியாவை அமைக்கும். மேற்கு நாடுகளும், சர்வதேச நாணய நிதியமும் மூக்கை நுழைக்காமல் இருந்தால் இந்த

தொடர்ச்சி 34ம் பக்கம்

# இன்னொரு... ஆச்சி வீடு

## பகுதி 13

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

◊ சி.வி. நாதன் ◊

அடுத்த ஒரு கிழமையும் நாகராசனைத் தேடும் படலம் மும்முரமாக நடந்தது. இடைக்கிடை நாயகத்தையும் காவல் துறையினர் தொடர்பு கொண்டனர். இராமலிங்கத்தையும் ஊரை விட்டு எங்கேயும் போக வேண்டாம் என்று தடையுத்தரவும் போட்டிருந்தார்கள். நாட்கள் கடந்து செல்லச் செல்ல வச்சிரவேலுவிற்கும், நல்லைநாதனுக்கும் நாகராசனின் மேல் சந்தேகம் கூடிக்கொண்டே போனது. அவர்களது கணிப்பின்படி, இது நாகராசனால் திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட குற்றம். நாகராசன்தான் இன்பனைக் கடத்திக் கொண்டு போய், வீட்டுக்கும் நெருப்பு வைத்திருக்கின்றான். வீடு நெருப்புப் பற்றி எரிகையில், மற்றவர்கள் தீயை அணைப்பதில் போராடிக்கொண்டு நிற்கையில் இன்பனைக் கடத்துவது எளிதல்லவா!. மேலும், இன்பனும் ஐந்து வருடங்களாக நாகராசனுடன் பழகுவதால், யாருக்கும் சந்தேகம் வராதபடி, பயமில்லாமல் நாகராசனுடன் இன்பனும் கூடவே சென்றிருப்பான். இப்படியாகச் சென்றது இருவரதும் சிந்தனை. இதுதான் அவர்களது முடிவாகவும் இருந்தது.

கடத்திக் கொண்டு போன இன்பனை என்ன செய்வான் நாகராசன்?

ஒன்றில் நாயகம் திலகம் தம்பதிகளுடன் தொடர்பு கொண்டு பணம் கேட்கலாம். கிட்டத்தட்ட 2 மாதமாகிவிட்டது. இன்னமும் அது நடக்கவில்லை. நாயகம் வீட்டுக்குப் பலத்த கண்காணிப்பு இருப்பதை அறிந்து நாகராசன் அதனை இன்னமும் கொஞ்சக் காலத்திற்குப் பிற்போட்டுள்ளானோ?
அல்லது இன்பனைக் கடத்திக் கொண்டு போய் யாருக்காவது விற்று விட்டானோ? சிறுவர்கள் பல தேவைகளுக்குத் தேவைப்படலாம். உடற் கூறுகளை எடுப்பதற்கும், அங்கவீனர்களாக்கிப் பிச்சை எடுப்பதற்கும், கூலியில்லாது கடினமான மீன்பிடி வேலைகளைச் செய்விப்பதற்கும் கூட சிறுவர்களை வாங்குபவர்கள் இருக்கிறார்கள். அப்படி என்றாலும் வீட்டை எரித்துத்தான் இதனைச் செய்ய வேண்டுமா? என்ற கேள்வியும் எழுந்தது.

நாகராசன்!
நாயகம் குடும்பத்தவரின் தூரத்து உறவினன். பக்கத்து ஊரில்தான் வசிக்கின்றான். திருமணத்திற்கு நிச்சயித்திருந்த நாகராசன், குடும்பத்துக்கு ஒரே மகன். அப்பா தோட்டங்களில் தினக் கூலி. அம்மாவும் இடைக்கிடை அப்பாவுடன் கூலி வேலைக்குப் போவதுண்டு. வறுமையின் நிமித்தமாக படிப்பை இடையில் நிறுத்திக் கொண்டான். படிப்பில் நல்ல கெட்டிக்காரன் எனப் பெயர் எடுத்தவன். கணிதத்திலும் விஞ்ஞானத்திலும் மிகவும் விருப்புடையவன். சிறப்பாக பௌதீகத்திலும் இரசாயனத்திலும் நல்ல அறிவு கொண்டவனாக இருந்திருக்கின்றான். படிக்கும் காலத்தில் தன்னை விட உயர் வகுப்பில் படிக்கும் மாணவர்களின் பாட நூல்களையும் வாசித்துக் கொள்வான். அவர்களுக்கே அவர்களது பாடங்களை விளங்கப்படுத்தக் கூடிய வல்லமை கொண்டவனாகவும் இருந்திருக்கின்றான். ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றவனாக இருந்திருக்கின்றான். வகுப்பில் சில பாடங்கள் சலிப்பைக் கொடுத்தாலும் வகுப்பறைகளில் நல்ல ஒழுங்கான மாணவனாகத்தான் இருந்திருக்கின்றான்.

அவனது அறிவுத்திறமையை மெச்சிய ஊரார் அவனது படிப்புக்கு உதவி ஏதும் செய்ததில்லை. அந்த அளவிற்கு அவர்களிடம் வசதியுமில்லை. அவனது நண்பர்கள், இராமலிங்கம் உட்படக் கூறியிருந்தார்கள், வெறும் சீனியையும் ஏதோ கறுப்புப் பொடியையும் கலந்து, அதனுள் கொஞ்சம் தண்ணீரை ஊற்றி நெருப்புப் பற்ற வைத்துக் காட்டினானாம். எப்படியடா இது என்று கேட்டதற்குச் சிரித்துக் கொண்டே, உங்களுக்கு இது விளங்காது எனக் கூறி, சிரித்துச் சமாளித்து விட்டானாம். ஏது அந்தக் கறுப்புப் பொடி? எங்கிருந்து அதனைப் பெற்றான்? அதன் பெயர் என்ன? என்பது ஒருவருக்குமே தெரியாது.

சீனியைக் கொண்டு நெருப்புப் பற்ற வைத்த விடயம் காவல் அதிகாரிகள் இருவரையும் சிந்திக்க வைத்தது. ஒருவேளை இதுபோன்ற எதையாவது கொண்டுதான் ஆச்சிவீட்டை எரியப் பண்ணினானே? ஆனால் தடயவியல் நிபுணர்களின் அறிக்கையின்படி, எந்தவொரு இரசாயனப் பதார்த்தமும் ஆச்சிவீட்டு எரிபாடுகளிடையே இல்லை, ஆச்சிவீட்டை எரிப்பதற்கும் பாவிக்கப்படவில்லை.

நாகராசனின் வீட்டைச் சோதனை செய்த காவல்துறையினருக்கு எந்தவொரு தடயமும் கிடைக்கவில்லை. அவனின் அம்மா அப்பாவுக்கோ ஏதும் தெரியாது. திருமணம் செய்யவிருந்த பெண்ணிற்கும் நாகராசனைப் பற்றி அதிகம் தெரியவில்லை. நல்லைநாதனுக்கும் வச்சிரவேலுவுக்கும் என்ன செய்வது, எப்படி பிரச்சனையைத் தீர்ப்பதென்று தெரியவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் நாகராசனிடம்தான் ஏதோ இருக்கின்றது. அவனைப் பிடித்துவிட்டால் எல்லாம் சரிவந்துவிடும். இராமலிங்கத்தை தங்களது சந்தேகப் பட்டியலில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக அகற்றி விட்டார்கள்.

நாடு முழுவதிலுமான தேடுதலுக்கு ஏற்பாடுகள் செய்தார்கள். நாகராசனின் படமும், இன்பனின் படமும் நாடு முழுவதிலும் ஒட்டப்பட்டு, கண்டவர்கள் அருகில் உள்ள காவல் நிலையத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டார்கள். சிலபேர் சில தகவல்கள் கொடுத்த போதிலும் அவை வலுவானவையாக இருக்கவில்லை. நாட்டில் சந்தேகமான இடங்கள் எல்லாம் சல்லடை போடப்பட்டு தேடுதல் செய்யப்பட்டபோது, வேறு சில குற்றச்செயல்களுக்கான தீர்வுகள் கிடைத்தனவே தவிர, நாகராசனும் இன்பனும் கிடைக்கவே இல்லை.

முடிவாக,
இரண்டு வருடங்களின் பின்னர்,

முதன்முறையாக வச்சிரவேலு நல்லைநாதன் இருவரும் தமது வழக்கொன்றை முடிவில்லாத வழக்கு என முத்திரையிட்டு அந்தக் கோவையை மூடிவைத்தார்கள், இறுகிய முகங்களுடன்.

பகுதி 2 ஆச்சிவீடு முடிவடைந்தது

அடுத்த தடவையில் இருந்து மூன்றாம் பகுதி கனடாவில் இனியன் ஆரம்பம்
- இன்னமும் வரும்

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

your 2nd house is Investment property
1st house put down payment

Tenant (Rent) Pay the Mortgage
Scarborough , Mississauga

Senior Home in Richmondhill 12 Beds

Metal scrap yard for recycling and car sales with house office

Bungalow House with basement Apartment Markham /Sheppard

For students 2 + 1 **Condo.** in Toronto Near Univerisal of York $130,000

யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

ELECTRICAL WORKS

**FRIDGE, WASHER, DRYER** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# குவாண்ரம் பிறந்த கதை

## நுண்ணுலகியல் 03

சென்ற தடவையில் குவாண்ரம் பிறந்த கதையின் அறிமுகத்தை ஆரம்பித்து இருந்தேன். அதில் செம்மைப் பௌதீகம் பற்றிக் குறிப்பிட்டு இருந்தேன் அல்லவா. அது வெறும் அறிமுகம் மட்டுமே. இனித்தான் எமது பிரதான பகுதிக்குள் வரப் போகின்றோம். குவாண்ரம் பிறந்த கதையினைப் பொதுப்படையாகச் சொல்வதெனில், கோமோ சேபியன்கள் என்ற மனித இனம் மனிதக் குரங்குகளில் இருந்து தோன்றிய காலத்தில் இருந்தே (சுமாராக ஒரு மில்லியன் வருடங்கள் முன்னதாக இது நடந்தது என்கின்றார்கள்) இது ஆரம்பமாகி விட்டது என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் அப்பொழுதில் இருந்தே மனித இனத்தின் அறிவியற் தேடல் ஆரம்பமாகியிருக்க வேண்டும். இன்னமும், இற்றைக்கு 35 ஆயிரம் வருடங்களின் முன்னராக இந்த கோமோ சேபியன்களின் மூளையில்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பேரண்டம் - 82**

விகாரம் (brain mutation) ஏற்பட்டு, அதன் பின்னராகவே மனித இனத்தின் தொடர்பாடல்கள் அதிகரித்து அவர்களது அறிவியல் நிலையானது மேம்படத் தொடங்கியது என்கின்றார்கள், ஆய்வாளர்கள். இந்த மூளை விகாரத்தை ஏற்படுத்தியவர்கள் வேற்றுக் கிரக மனிதர்கள் என, ஒருசில வேற்றுக் கிரக மனிதர்கள் பற்றிய ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள், ஆதாரங்கள் ஏதுமில்லாது. மனித இனத்தின் மூளை விகாரம் எப்படி ஏற்பட்டிருந்தாலும், இந்த நிலையினைக் கூட ஆரம்ப இடமாகக் கருதலாம். ஆனால், அக்காலங்களில் என்னென்ன வளர்ச்சிகள் ஏற்பட்டன?, யார் யாரெல்லாம் அவற்றிக்குக் காரணர்களாக இருந்தார்கள்? என்பவை எல்லாம் எமக்குத் தெரியாது, தெரியவும் போவதில்லை. எனவே, அவற்றினை விடுத்து எமக்குத் தெரிந்த, குறிப்புக்கள் உள்ள காலங்களில் இருந்து ஆரம்பிப்போம்.

### பொருட்கள் எவற்றினால் ஆகியவை?

குவாண்ரம் பிறந்த கதையின் ஆரம்ப இடமாக நான் எடுத்துக் கொண்டது கி.மு. நாலாம், ஐந்தாம் நூற்றாண்டுக் காலப் பகுதியை. அக்காலத்தில்தான் பொருட்கள் எவற்றினால் ஆனவை என்ற கருத்து மோதல்கள் உண்டாயின. இக்கருத்து மோதலானது தொடர்ச்சியாக,



வளமான போட்டியாக வந்ததினாலேயே அறிவியல் காலத்திற்குக் காலம் வெவ்வேறு பரிணாமங்கள் எடுத்து இன்று இப்பரிமாணத்தினை எடுத்துள்ளது. எனவே நானும் (நாங்களும்) இப்பகுதியில் இருந்தே ஆரம்பிப்போம்.

அன்றிருந்த மக்களின் பேரண்டம் பற்றிய அறிவினை மனக் கண்களில் கொண்டுவருவோம். மிகவும் சிறியதான பேரண்டம். அதன் மத்தியில் எமது புவி. வான்வெளியில் சில கோள்களும் சில ஆயிரக்கணக்கிலான விண்மீன்களும்தான் புவியின் மாந்தருக்குத் தெரிந்த பொருட்கள். அத்துடன் ஆகாய கங்கை எனவொன்று, காலத்திற்குக் காலம் வானிலே தென்படும். இந்த வான் பொருட்களைப் பற்றி எதுவித ஐயமும் இல்லை. அவையெல்லாம் புவியிலே இல்லாத ஒன்றான ஈதர் என்ற மர்மப் பொருளினால் ஆனவை. அவர்களைப் பொறுத்தவரையில் வெகு தொலைவில் உள்ள ஈதரினால் ஆன பொருட்களைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. இந்தப் புவியில் உள்ள பொருட்கள்தான் எவற்றினால் ஆனவை என்பது சிக்கலாக இருந்தது.

கி.மு. 427- 322 காலப் பகுதிகளில் வாழ்ந்த தத்துவஞானிகளாகிய பிளேட்டோவும் அவரது மாணவனாகிய அரிஸ்ரோற்றலும் பொருட்கள் எல்லாம், காற்று, நீர், நெருப்பு, நிலம் என்ற நான்கு மூலகங்களின் சேர்க்கையினாலேயே தோன்றின அல்லது உள்ளன எனக் கூறினார்கள். இதனை நான்கு மூலகக் கொள்கை என்பார்கள். இந்த நான்கு மூலகங்களினாலும் ஆன பொருட்கள் எல்லாம் மேலே இருந்து விழவிடப்பட்டால், புவியினை நோக்கி வரும். கோள்கள், விண்மீன்கள் என்பவை புவியில் வந்து வீழாதபடியால், அவை இந்த நான்கு மூலகங்களும் அல்லாத இன்னொரு சடமாகிய ஈதரினால் ஆகியிருக்க வேண்டும் என்று ஏற்றுக் கொள்ளக் கூடியதான கருத்தினையும் முன்வைத்தார்கள் இவர்களுக்கு முன்னராக வாழ்ந்த பிரபல கணித மேதையான பைதகரசும் இதே கருத்தினைத்தான் கொண்டிருந்தார் எனக் கூறுகின்றார்கள். இந்த நாலு மூலகக் கொள்கையை அவர்கள் எழுந்தமானமாகக் கொண்டிருக்கவில்லை. அதற்காக அவர்கள் தந்த எளிமையான, அக்கால அறிவி யல் நிலைக்கு ஒத்ததான விளக்கத்தினைப் பாருங்கள்.

ஒரு சிறிய மாத்துண்டை எரிக்கையில் என்ன மாற்றங்கள் நிகழுகின்றது என்பதனைப் பாருங்கள். அட அதுவா! எங்களுக்குத் தெரியும்தானே என்கின்றீர்களா. நல்லது, அடுத்த தடவையில் சந்திக்கும் போது, அரிஸ்ரோற்றில் கூறிய விளக்கத்திகை கூறுகின்றேன். அதுவரையில் நீங்களும் அது பற்றிக் கொஞ்சம் இலகுவாக யோசித்துப் பாருங்கள்.



- கனி -
416.261.1348
kani1vimal@hotmail.com

# "வறுமை...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

மாற்றம் இலகுவில் நடக்கும்.

## எகிப்தில் புரட்சி

ரியுனிசியாவைத் தொடர்ந்து நீண்டகாலமாக ஆட்சி புரியும் முபாரக்கு எதிராக போராட்டங்கள் தொடங்கிவிட்டன. முபாரக்கின் பின்னர் அவரது மகன் காமல் ஆட்சிக்கு வருவார் என எதிர்வு கூறப்படுகின்றது. பென் அலியைப் போன்று காமலும் எகிப்திய பொருளாதாரத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கின்றார். இன்றைய எகிப்தின் பொருளாதார தேய்வுக்கு முக்கிய காரணம் இதுவே. வேலையின்மை விகி தம் அதிகரிப்பு, வீடு வாய்ப்பின்மை, அடிப்படை சம்பள உயர்வு, பேச்சு எழுத்து சுதந்திரமின்மை போன்றவையே முபாரக்கின் முப்பது வருட ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர மக்கள் வீதிக்கு வந்துள்ளனர். எகிப்திலும் நாசர் 16 வருடங்கள் ஆட்சி புரிந்துள்ளார். பின்னர் அன்வர் சதாத் கொலை செய்யப்படும் வரை 10 வருடங்கள் ஆட்சி புரிந்தார். முபாரக்கின் பின்னணியில் அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகள் இருந்த போதும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோர் அமெரிக்க கொடியை கொண்டு செல்லவில்லை. இது இவர்கள் தங்கள் போராட்டத்தில் உள்ள அதிக கவனத்தை உணரக் கூடியதாகவுள்ளது. போராட்டம் தொடருமாயின் முதல் நாடாக அமெரிக்கா முபாரக்கை பதவியிறக்க கட்டளையிடும். இக்கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் பொழுது கெய்ரோ வீதிகளில் மக்கள் திரண்டு போராடுகின்றனர். வீதிகளில் இரத்தம் ஓடுகின்றது. பெரும்பாலான மக்கள்




வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர்.

பல இன்னல்களுக்கு மத்தியில் இவர்கள் வாழ்கின்றனர். வெகு விரைவில் முபாரக் பதவியிறக்கப்படுவார். முன்னர் குறிப்பிட்டது போல் இதனை முன்னெடுக்கும் நாடு அமெரிக்காவாகத்தானிருக்கும் தனது நல்ல பெயரை மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தும். முபாரக்கின் வளர்ச்சிக்கு உரமிட்டது அமெரிக்கா. பிந்திய செய்தியின் படி முபராக் தனது அமைச்சரவையை கலைத்து விட்டார். புதிய அமைச்சரவை ஒரு சில நாட்களில் பதவியேற்கும்.

இந்தப் போராட்டங்களின் பின்னணியில் நவீன தொழில் நுட்பமும் பிரதான பங்களிக்கின்றது. Facebook, Internet போன்றவற்றின் மூலமும் மக்கள் அழைக்கப்படுகின்றார்கள். உண்மை நிலைகள் வெளிக்கொணரப்படுகின்றன. பத்திரிகை சுதந்திரத்தை கட்டுப்படுத்தலாம். இவற்றை கட்டுப்படுத்த முடியாது. ரிரிசியில் இருந்து போராட்ட களம் வரை இவை பயன் தருகின்றன.

# மாயன் நாகரிகம் - பாகம் - 1

பல நூற்றாண்டுகளுக்கு முன், தெளிவற்ற காரணத்தோடு, ஒரு இனம் உலகின் பார்வையிலிருந்து காணாமற் போகிறது. அந்த இனத்தின் பெயர் மாயா. அவர்கள் எங்கே போனார்கள் என்ற காரணம் யாருக்கும் தெரியவில்லை. நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த கோவிலின் வேலைப் பாடுகள் நிறைவடையவில்லை. சிலைகள் பாதியாய் உருவம் வாங்கி நிற்கின்றன. அனைத்துக் கட்டுமானங்களும் பாழடைந்து புதைந்து கொண்டிருக்கிறன.

வேண்டுதல்களும், மாய மந்திர வேலைகளும் நின்றுவிட்டன. அன்று முதல், இவ்வினத்தின் மூதாதைகளின் புத்திசாலிதனமும், கற்பித்தலும் காற்றோடு கலந்துவிட்டது. மிச்சம் மீதி இருந்த மாயா இனத்தவர்களுக்கு எழுத்தின் மீதும் படிப்பறிவின் மீதும் பார்வையற்று போயிற்று. அவர்களுக்கு வாழ்க்கை நெறியும் மறந்து போயிற்று. அவ்வினம் மிருகத்தன்மையை அடைந் தது. மேற்கூறியவை மெக்ஸிகோ நாட்டின் காட்டுப் பகுதியில் மர்மமாய் தோன்றி மறைந்த மாயா நாகரிக ஆராய்ச்சியாளர்களின் அறிக்கை.

1000 வருடங்களுக்கும் மேலாக இவ்வளவு ஆச்சரியமும், அற்புதமும் நிறைந்த நாகரிகம் புதைந்து கிடந்ததை யாரும் கண்டறியவில்லை. 1839-ஆம் ஆண்டு, அமெரிக்காவை சேர்ந்த எழுத்தாளரான John Lloyd Stephens தமது உதவியாளர் ஒருவரின் துணையோடு அங்கே செல்கிறார். பாழடைந்த பழமைமிக்க நகர பகுதி அங்கே உதித்து மறைந்ததை அவர் கண்டுபிடிக்கிறார்.

பல்லாயிரம் ஆண்டுகாலமாக செடிகொடிகள் படர்ந்திருந்த கட்டிடங்கள் கலைதிறன் மிக்க வேலைபாடுகளோடு உறுதியோடு இருக்கக் காண்கிறார். அடுத்ததாக அவர் ஒரு விசித்திரத்தை காண்கிறார். அவ்விடத்தில் மனிதர்கள் யாரையும் காண முடியவில்லை. நீண்ட காலமாக அவ்விடம் நாதியற்று கிடந்திருக்கிறது.



அன்று முதல் அவ்விடம் ஆராய்ச்சிக்குள்ளாகிறது. ஆராய்ச்சியின் மேல் ஆராய்ச்சிகள் நடந்து புதைந்து போன மாயா இனத்தவரின் வரலாற்றைத் தோண்டி எடுக்கிறார்கள். மாயா இனத்தவர்கள் ஆச்சரியமிக்க நாகரிகத்தை உருவாகியுள்ளார்கள், பற்பல துறைகளில் அறிவு திறன் மிக்கவர்களாக திகழ்திருக்கிறார்கள். இவையாவும் உலக நாகரிகம் வளராத காலத்தில் நடந்தவை.



இந்த கண்டுபிடிப்பின் மகிழ்ச்சியில், ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு விந்தையும் உதித்தது. ஒரு நகரத்தை வளர்ச்சியடைய செய்து பின்னர் எதற்காக அதைவிட்டு மறைந்தார்கள் என்பதே அவர்களின் வியப்பாகும்.

மாயா இனத்தவர்கள், அவர்களின் பொற்காலத்தின் போது உலகிற்குப் பயனுள்ள பல துறைகளின் நுணுக்கங்களை ஆராய்ந்திருக்கிறார் கள், கலைத்திறனும் புத்திக் கூர்மையும் பெற்று விளங்கினார்கள். 16-ம் நூற்றாண்டின் போது தென் அமெரிக்கப் பகுதியை ஆட்சி செய்த ஸ்பெயின் நாட்டினரின் கடுமையான தாக்குதலால் இப்பகுதி அழிந்து போனது. அவர்களின் கண்டுபிடிப்பும் எழுதிய நூல்களும் அச்சமயம் அழிக்கப்பட்டது.

இச்செயல் உலகிற்கு மாயா இனத்தவரை பற்றிய பல உண்மைகளை உணர்த்த முடியாமலும் செய்துவிட்டது. அது நமக்கு பெரும் நஷ்டமும் கூட. தற்சமயம் நமக்கு வெளிபடையாக கிடைத்திருப்பது அந்நாகரித்தை பற்றிய சிறு துளியளவு கண்டுபிடிப்புகள் மட்டுமே. இவையாவும் அவ்விடத்தில் கிடைக்கப் பெற்ற சில துண்டு எழுத்துகளின் வடிவில் கிடைத்தவையாகும்.

இந்த மர்ம நகரில் பெரும் கற்களைக் கொண்ட கட்டிட வேலைபாடுகள் உள்ளன, பெரிய அளவிலான நகர வடிவமைப்பு, எழுத்துக்கள், மற்றும் அறிவு நுணுக்கங்கள் மாயா இனத்தவரின் போற்றதக்க கலைத் திறன்களாகும். இவை அக்காலத்துடன் ஒப்பிடும்போது தற்போதைய தொழில் நுட்பத்தை விடவும் மேலானவை யாகவே கருதப்படுகிறது. எகிப்தியப் பிரமிடுகளை அடுத்து இந்நகரில் காணப்படும் பிரமிட்டுகளே பிரசித்தி பெற்று விளங்குகிறன. இப்பிரமிடுகளை சுற்றிலும் 4 பெரிய படிக்கட்டுகளும் அவற்றுள் அடங்கிய 365 படிக்கட்டுகளும் காணப்படுகிறது. இவையாவும் ஒரு ஆண்டிற்கான 4 காலங்களையும் 365 நாட்களையும் குறிப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலை மாயா இனத்தவரின் வான் ஆராய்ச்சி நுட்பத்தை குறிக்கிறது. இதைத் தவிர்த்து கட்டிடங்களின் உட்புறமும் வெளிப்புறமும் பல வகையான எண்களால், வான் மாற்றங்களை பற்றிய விடயங்கள் செதுக்கப்பட்டிருக்கிறது.

மாயாக்களால் எப்படி அசாத்தியமிக்க கட்டிடங்களை எழுப்ப முடிந்தது? அதுவும் அடர்ந்த காட்டிற்குள்? இவர்களது கட்டிடங்கள் 'தொன்' கணக்கிலான கற்களை கொண்டு அந்த மர்ம நகரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மாயாக்கள் இப்பெரிய கற்களை அடர்ந்த காட்டிற்குள் கொண்டு வந்ததும், அவற்றை சரிவர அடுக்கி கட்டிடங்களையும் பிரமிட்டுகளை யும் அமைத்துள்ளதும் ஆச்சரியமிக்கவை யாகும். மாயாக்கள் எவ்விதமான தொழில்நுட்பத்தை கையாண்டு இத்தகைய நகரத்தை அமைத்தார்கள் என்பதும் கேள்விக்குறியே.

ஆராய்ச்சியாளர்கள் மாயாக்களின் நாகரிகம் கி.மு. 2000-ஆம் ஆண்டில் தொடங்கி சிறுகச் சிறுக வளர்ச்சியடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள். கி.மு 2000 முதல் 250 வரை வளர்ச்சிக் காலமாகவும், 250 தொடங்கி 900 வரை மாயாக்களின் பொற்காலமாகவும் கருதப்படுகிறது. 7 மற்றும் 8-ம் நூற்றாண்டுகள் மாயாக்களின் உச்சக்கட்டப் பொற்காலம் எனவும் கூறுகிறார்கள்.

900-ஆம் ஆண்டில், நாகரிக உச்சத்தை அடைந்த பின் மாயாக்களின் ஆதிக்கம் மர்மமாய் மறைந்ததாய் கூறுகிறார்கள். ஆனாலும் இது முற்றிலும் உண்மையாகாது. ஆரம்ப காலத்தில் மாயாக்கள் மறைந்து போன மர்மத்தை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். இதற்குக் காரணம் மாயா நகரப் பகுதி குடிகள் இல்லாமல் நாதியற்றுக் கிடந்தது தான்.

இதன் பின் ஆராய்ச்சியாளர்கள், மாயாக்களின் வம்சாவழியினர் தென் அமெரிக்க பகுதிகளில் இன்றளவும் வாழ்கிறார்கள் என கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. ஒருசில ஆராய்ச்சியாளர் கள் மாயாக்களில் பல பிரிவினர் இருந்ததாகவும் அவர்களில் ஒரு பிரிவினர் மட்டுமே இவர்கள் எனவும் குறிப்பிடுகிறார்கள்.

**தொகுப்பு - கமலாகரன்**

மாயாக்களின் மறைவிற்கு இயற்கை சீற்றங்களே முக்கிய காரணம் என கூறுகிறார்கள். மாயாக்களின் கலைத் திறன் மிகவும் நுட்பமானது, சிற்பக் கலையும் வரையும் திறனும் இவர்கள் விட்டுச் சென்ற அற்புத பொக்கிஷங்களின் வடிவில் இன்றும் நம்மால் காண முடிகிறது. கட்டிட கலையும் இவற்றுள் அடங்கும். மாயாக்களால் Tikal, Palenque, Copan, Kalakmul, Dos Pilas, Uaxactun, Altun Ha போன்ற நகரங்கள் மிகவும் திறம்பட உருவாக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குவது பிரமிட்டும் அரண்மனையும் ஆகும். மாயா நகர பகுதியில் காணப்படும் stelae எனப்படும் கல் வகையில் இவர்களின் ஆட்சிமுறை, போர்களில் பெற்ற வெற்றி மற்றும் பல முக்கிய தகவல்கள் heiroglyphik எழுத்துவடிவில் செதுக்கப்பட்டுள்ளது. மாயாக்கள் தூர தேச வியாபாரத்திலும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கபட்ட உண்மை.

Bonamak என்ற இடத்தில் அமைந்த மாயாக்களின் சிற்ப கலைகள் எவ்வித பாதிப்பும் இன்றி கிடைக்கப் பெற்றதால் ஆராய்ச்சியாளர்கள் இவற்றை முறையாகத் தங்களது ஆய்விற்குப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. இச்சிற்பங்கள் மாயாக்களின் நாகரிக வளர்ச்சியைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன.

மாயாக்களின் எழுத்தின் அடிப்படையில்,

தொடர்ச்சி 37ம் பக்கம்

# விருது விருது Oscar விருது!

மாசி மாதம் 27 (ஞாயிறு) - ஆஸ்கார் விருது வழங்கும் நாள். தை மாதம் 25 (செவ்வாய்) பல்வேறு பிரிவுகளுக்கான, ஆஸ்கார் விருதுகளுக்குப் போட்டியிடும் படங்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. சிறந்த படத்திற்கான விருதுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள 10 படங்கள்:

| | |
|---|---|
| Black Swan | The Fighter |
| Inception | True Grit |
| The King's Speech | 27 Hours |
| The Social Network | Toy Story 3 |
| The Kids Are All Right | Winter's Bone |

நல்ல திரைப்படங்களைப் பொறுத்த வரையில் 2010 கொஞ்சம் மந்தமான வருடம் என்றுதான் சொல்ல வேண்டும். சிறந்த படத்திற்கான விருதுக்குப் போட்டியிடும் 10 படங்களைத் தெரிவு செய்ய கொஞ்சம் சிரமப்பட்டுத் தான் இருப்பார்கள் தெரிவாளர்கள். ஆனால் ஆஸ்கார் விருதுக்கு தெரிவு செய்யப்படும் படங்கள் யாவுமே தலைசிறந்தவை என்று சொல்லிவிடவும் முடியாது. வருடம் முழுவதும் வரும் படங்களை அலசி ஆராய்ந்து நல்ல படங்களை தெரிந்து எடுக்காமல் கார்த்திகை, மார்கழி மாதங்களில் வரும் “பெரிய லேபல்” படங்களை மட்டுமே ஆஸ்கார் கண்டுகொள்கிறது என்ற ஒரு கிண்டலான குற்றச்சாட்டும் உண்டு!

இந்த வருடம் குட்டிக் குட்டி விருது விழாக்களில் தொடங்கி, கொஞ்சம் ஆஸ்கார் விழா ரேஞ்சுக்கு அமர்க்களப்படும் 'Golden Globe'விழா வரை தொடர்ச்சியாகச் சிறந்த படமாகத் தெரிவு செய்யப்பட்டு வருவது நம் “முகத்தில் முகம் பார்க்கலாம்” படம்! அட தமிழ்ப் படமா என்று கேட்பவர்கள், விளம்பரம் இதழ், டிசெம்பர் 01 2010, பக்கம் 34 ஐ படியுங்கள். எல்லோரும் செல்லமாக 'Facebook' படம் என்று குறிப்பிடும் அந்தப் படம், “Social Network! படத்தில் எக்கச்சக்க உரையாடல்கள், ஆனாலும் “எப்படி ஒரு எழுதப்பட்ட புத்தகத்தை சுவாரசியமான திரைக்கதை ஆக்கினீர்கள்” என்று கேட்டுக்கொண்டே 'Adapted Screenplay' Oscar விருது Aaron Sorkin க்குக் கொடுக்கப் போகிறார்கள் என்பது ஏற்கனவே எழுதப்பட்டுவிட்டது! சிறந்த திரைப்படம், சிறந்த இயக்குனர் (David Fincher) விருதுகளும் இந்தப் படத்துக்கே கிடைக்கலாம் என்று எனக்குக் கிடைத்த “பரமரகசியத் தகவல்கள்” தெரிவிக்கின்றன!

சிறந்த நடிகருக்கான விருதில்தான் கொஞ்சம் இழுபறி! போட்டி, Colin Firth (King's Speech) மற்றும் Jesse Esienberg




(Soical Network), இருவருக்குமிடையில்தான்! இருவரும் அற்புதமாக நடித்திருக்கிறார்கள். Facebook இணையத்தளத்தை உருவாக்கியவர்களில் முக்கியமானவரான Mark Zuckerberg இன் ஆரம்ப நாட்களை வாழ்ந்திருக்கும் Jesse, ஒரு காட்சியில் தான் உருவாக்கிய இணையத்தளம் மூலம் தான் விரும்பும் பெண்ணை நண்பராக இணைக்க விரும்பிக் (Add Friends) “கோரிக்கை கிளிக்” அனுப்பி விட்டு தனிமையாக இருக்கும் காட்சியில், “ஐயோ! பாவம்”, இவருக்கு ஆஸ்கார் கொடுக்கலாமே என்று எண்ண வைக்கிறார்.

Colin போன வருடமும் “சிறந்த நடிகர்” தெரிவில் இருந்து தெரிவாகாமல் போனவர். சீனியர் நடிகர். இந்தமுறையும் இவரை ஏமாற்றுவது 'too bad' என்று நினைத்து விருது அவர் பக்கம் போகும் சாத்தியங்கள் அதிகம். ஏற்கனவே சிறந்த நடிகருக்கான 'Golden Globe' விருது அவருக்குத் தான் கிடைத்திருக்கிறது. ஆனால் நாங்கள் ஒன்றும் 'Golden Globe' விருதுகளைக் காப்பி அடிக்கப்போவதில்லை, என்று ஆஸ்கார் தெரிவாளர்கள் நினைக்கும் பட்சத்தில் தெரிவு மாறும். அத்தோடு Javier Bardem (Biutiful) இந்தப் போட்டியில் இணைக்கப்பட்டிருப்பதால், தீர்ப்புகள் திருத்தப்படலாம்!



King's Speech இங்கிலாந்தின் ராஜா, ராணிக் கதை. 1925 களில் நடந்த உண்மைச் சம்பவங்கள் படமாகி இருக்கின்றன. ஐந்தாவது ஜோர்ஜ் மன்னரின் இரு மகன்கள் Edward மற்றும் இளையவர் Albert (Colin Firth). மன்னரின் உடல் நிலை மோசமாக தனது அடுத்த வாரிசு Edward என்று கனவு காணும் மன்னரின் கண்ணில் மண் தூவுகிறார் மூத்தவர். அரச நடைமுறைகளுக்கு ஒவ்வாத முறையில் விவாகரத்துப் பெறப் போகும் பெண்ணுடன் காதல் அவருக்கு, காதலுக்காக அரச பதவியையே உதற ஐயா ரெடி! (தமிழ்ப் படம் என்றால் அவர் தான் ஹீரோ!) நாடோ இரண்டாம் உலகப் போரை எதிர்நோக்கி நிற்கிறது. நிமிர்ந்து நின்று வெற்றி நமதே என்று சொல்ல சரியான தலைவன் தேவை!

மிஞ்சி இருப்பவர் அவ்வளவாகக் குடும்பத்தால் கண்டுகொள்ளப்படாத Albert. வெளிச்ச வட்டம் அவர் மேல் விழுகிறது. ஆனால் அவருக்கோ சிறு வயதிலிருந்தே பேச்சுக் கோளாறு. பேசும் போது திக்குவார். ஆனால் வந்த பொறுப்பைத் தட்டிக்கழிக்காமல், பயந்து ஓடாமல், எனக்கும் இந்தப் பொறுப்புக்கும் என்ன சம்மந்தம் என ஒதுங்காமல் சவாலை எப்படி எதிர் கொண்டார் என்பது எல்லோருக்கும் ஒரு பாடம்! தன் இயலாமைக்குக் கண்ணீர் விட்டு, “இல்லை இது என்னால் முடியும்” என உறுமிக்கொண்டு வரும் கணங்களில், பிரமிக்க வைக்கும் Colin Firth நடிப்பைப் பற்றிச் சொல்ல வார்த்தைகள் திக்குகின்றன!

தங்கு தடையின்றிப் பேசி மக்களைக் கவருவது தான் அரசியல்வாதியின் முதல் அஸ்திரம். அதிலேயே திணறும் ஆல்பர்ட்டுக்குப் பேச்சுப் பயிற்சி கொடுக்க நியமிக்கப்படுபவர் Lionel (Gefforey Rush). இவர் Albert க்குக் கொடுக்கும் விசித்திரமான பேச்சுப் பயிற்சிகளும், இருவருக்கும் ஏற்படும் நட்பும், கருத்து மோதல்களும் படத்தின் முக்கிய அம்சங்கள். பேச்சோடு பேச்சாக ஆண்களுக்கான துணை நடிகருக்கான ஆஸ்கார் விருதுத் தேர்வில் Gefforey Rush நிச்சயம் இருக்கப் போகிறார். ஆனால் அவருக்கான மிகப் பெரிய போட்டி Christian Bale (The Fighter). மீண்டும் இந்தப் பிரிவில் அவரா? இவரா? suspense இருக்கப்போகிறது!

Every Dream deserves a Fighting Chance! இது தான் 'The Fighter' படத்தின் tag line. குத்துச் சண்டை வீரர் Irish Mickey Ward, அவரைப் போட்டிகளுக்குத் தயாராக்குகிறேன் பேர்வழி என்று சொல்லிக்கொண்டு அவருடனே ஒட்டிக்கொண்டு இருக்கும் சகோதரன் Dicky Eklund (போதைப் பொருளுக்கு அடிமைப்பட்டவர்) அவர்களின் குழப்பமான குடும்பம் என போகும் இந்தப் படமும் உண்மைச் சம்பவங்களை வைத்து எடுக்கப்பட்டுள்ளது. படத்தின் முடிவில் உண்மையான பாத்திரங்களை சில நிமிடங்களுக்குக் காட்டுகிறார்கள், அப்போது “அட, Christian Bale அச்சு அசலாக Dicky Eklund செய்கைகளை சூப்பர் டூப்பர் ஆக செய்திருக்கிறாரே” என்று சொல்ல வைக்கிறது. Golden Globe விருது இவருக்குத் தான் கிடைத்திருக்கிறது!

**- கிறிஸ்ரி-**

எப்போதாவது ஆற அமர இருந்து ஒரு மனிதனின் வாழ்க்கையைப் பார்க்க ஆசைப்பட்டால் 'Barney's Version' பாருங்கள். திருமண தினத்தன்று, திருமணம் முடிந்து சில மணிகளிலேயே, அங்கு வந்திருக்கும் ஒரு பெண்ணைப் பார்த்து காதலில் விழும் Barney இன் வாழ்க்கை தான் படம்! (இது ஒன்றும் உங்கள் சுட்டிகளுக்குப் பிடித்த Barney அல்ல, அது சமத்து!) சிறந்த நடிகருக்கான ஆஸ்கார் தெரிவில் “காதல் மன்னன் Barney' (Paul Giamatti) எப்படி விடுபட்டார் என்பது “ஆஸ்கார் ரகசியம்”! Golden Globe விருது இவர் பக்கம் வந்துள்ளது.

ஒரு காட்சியில் அவர் காதலிக்கும் பெண் அவரிடம், “உனக்குத் திருமணமான அன்றே என் மேல் காதல் என்றாய், உன்னை எப்படி நம்புவது?”
Barney: உனக்காக எதுவும் செய்வேன்...
பெண்: அப்படிச் சொல்லாதே ...வாழ்க்கை நிஜமானது.....அது சின்னச் சின்ன விஷயங்களை உள்ளடக்கியது, நிமிஷங்கள், மணித்தியாலங்கள், தூங்கும் பொழுதுகள், சாதாரண அலுவல் நிமித்தமான பயணங்கள், சலித்துப்போக வைக்கும் அன்றாட வேலைகள் என நீளும் இந்தப் பயணத்தை உன் அன்பு தாங்குமா?

(Life is real, it is made up of little things minutes, hours, naps, errands, routines and it has to be enough!)

யாரிடம் பதில் இருக்கிறது? - இடைவேளை!

220

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



ஜில்லென்று ஒரு காதல்
காதல் கொண்டேன்?
காதலா காதலா




நெற்கதிர்கள் அறுவடைக்கு தயாராவது போல…ரோசாச்செடிகள்..காதலர்கள் பரிமாற தயார்நிலையில் உள்ளன.

பெப்ரவரி 14 காதலர் தினம்.
இதற்குமுதல் காதலர் தினங்களில் பூக்கள் பரிமாறியவர்கள் பலர்.

ஞாபகம் வருதே ஞாபகம் வருதே
காதலே போ…போ.. என்ற பாடலை மனதுக்குள் பாடியும்.
எங்கிருந்தாலும் வாழ்க! நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா… போன்ற பாடல்களை வானொலிகளில் நேயர்விருப்பத்தில் எனக்கும் எனது நண்பர்களுக்காகவும் என்று வேறுபெயரில் பாட்டுக்கேட்பதும் சா்வ சாதாரணம்.



அத்துடன் காதல் சம்பந்தமான கல்யாணப்பரிசு, கலாட்டா கலயாணம்,
காதலிக்க நேரமில்லை, காதல் அழிவதில்லை, காதல், காதல் கொண்டேன், ஜில்லென்று ஒருகாதல் என்ற படங்களை டி.வி.டி.பிளேயர் வொறன்ரி முடியும் வரை மாறி மாறிப்பார்த்தவர்கள் எத்தனைபேர்?





அது சரி அன்னம்மாக்கா வந்தவெள்ளம் வற்றமுதலே பேந்தும் மழை பெரிசாப்பெய்யுதாம் விடிய றேடியோவிலை கேட்டனெண்டா செக்கண்ட்புளோர் செல்லம்மா. மழை வெள்ளம் ஒருபுறம் அது வற்றமுதலே உலகநாடுகள் கொடுத்த வெள்ள நிதி வற்றி விட்டதாக அப்பிடி இப்பிடியென மக்கள் கதைக்கத் தொடங்கிவிட்டார்கள்.



வெள்ளத்துக்கு வெளிநாடுகள் எக்கச்சக்கமா நிதி கொடுத்தாலும் அதிலை வள்ளம் வாங்கி வெள்ளம் பாக்கப்போனதெண்டு கணக்குக்காட்ட கவுன்மென்ருக்குத் தெரியும் எண்டு சொல்லிச்சிரிச்சா செக்கண்ட்புளோர் செல்லம்மா.



எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த உலகர் சொன்னார்; செல்லடியாலையும் ஆட்டிலறியடியாலையும் மரந்தாவும் குரங்குகளும் காட்டிலையுள்ள மிருகங்களெல்லாம் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துவிட்டன.
மழைவெள்ளத்தால் மக்கள்தான் வெள்ளத்துக்குத்தப்ப இப்ப மரங்கள்ளை இருக்கினம்.



'பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்பதுபோல சுனாமி வாறதும், வெள்ளம் வாறதும் மக்களுக்குத்தான் கஸ்டம்

மதியுள்ளவன் வாற நிதியை வாரி இறைத்துக்கொண்டு போய்விடுகிறான்.
மக்கள் தாரை தாரையாகக் கண்ணீர் வடிக்கின்றனர்.

முருகேசர் சிரித்துக்கொண்டே சொன்னார் கனபேருக்கு மழை வெள்ளமும் தெரியாது, சுனாமியும் தெரியாது, சண்டையும் தெரியாது, சமாதானமும் தெரியாது. ஏன் சொந்தப்பிள்ளையளுக்கே தாய்தேப்பன் எந்த முதியோரில்லத்திலை இருக்கிறார்களென்றே தெரியாது. வருடம் மறக்காமல் இறந்தவர்களை நினைத்து வருடாவருடம் திதி கொடுப்பவர்களுமுண்டு.

31 நாள் நினைவாஞ்சலி செய்யாதவர்களுமுண்டு என தனது மனக்கவலையையும் சேர்த்துச்சொன்னார் முருகேசர்.





ஞாபகம் வருகிறதா!
பெப்ரவரி 3 பேரறிஞர் அண்ணாத்துரை நினைவு தினம்
9 சட்டமேதை ஜி.ஜி.பொன்னம்பலம் நினைவுதினம்
14 காதலர் தினம்.




# மாயன்…

**35ஆம் பக்கத்தொடர்ச்சி**

இச்சிற்பங்களை வடிவமைத்தவர்கள் தங்களது பெயரை சிற்பத்தின் எதாவது ஒரு இடத்தில் பொறித்துள்ளார்கள். இதனால் சிற்பிகள் மாயாக்களின் காலத்தில் போற்றத்தக்கவர்களாக மதிப்பளிக்கப்பட்டிருக்கிறார்கள் என அறிய முடிகிறது. சிற்பக்கலை வருங்கால சந்ததியினருக்கு இவர்களின் சரித்திரத்தை அறிந்து கொள்ள ஏதுவாக இருக்கும் என முன்னதாகவே இவர்கள் அறிந்திருக்கின்றனர்.

மாயாக்களால் நுட்பமாய் செய்யப்பட்டிருக்கும் கட்டிடங்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாயினும் உறுதியாகவே இருக்கின்றன. பிரமிட்டு, வழிபாட்டு இடங்கள் மற்றும் வியாபார தளங்கள் இந்நாகரிக வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்துள்ளன. இவையே ஆராய்ச்சியாளர்கள் மாயா நாகரிகத்தை அறிந்து கொள்ளச் சிறந்த தடயமாய் அமைந்தது.

மாயாக்கள் பிரமிட்டுகளின் மேல் கோவிலை அமைத்துள்ளார்கள். பிரமிட்டுகள் உயரமான மலை பாங்கான இடத்தில் அமைந்திருக்கும் பிரமிடுகளின் மேல் கோவிலை அமைப்பதால் இறைவன் இருக்கும் சொர்க வாசலை அவர்கள் சுலபமாக நெருங்க முடிவதாக நம்பிக்கை கொண்டுள்ளனர்.



ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை ஈர்த்த இன்னொரு விசயம் மாயாக்களின் விளையாட்டு மையம். ஒவ்வொரு மாயா நகர பகுதிகளிலும் மிகப் பெரிய பந்து விளையாட்டு மைதானம் காணப்படுகிறது. இம்மைதானங்கள் ஆங்கில எழுத்தின் 'I' வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

மாயாக்களின் எழுத்து வகைகள் நீண்ட நாட்கள் ஆராய்ச்சியாளர்களின் பார்வையில் இருந்தவையாகும். 19-ஆம் நூற்றாண்டில் மாயா நகர பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை அவையாவும் புரியாத புதிராகவே இருந்தன.

1960 முதல் 1970 வரையில் அனைத்து எழுத்துக்களுக்கும் அர்தங்கள் கண்டுபிடிக்கப்பட்டு படிக்கப்பட்டன. இதன் மூலம் 'ஸ்பெயின்' நாட்டினரின் படையெடுப்பும், பல்லாயிரக்கணக்கான புத்தகங்கள் எரிக்கப்பட்டதும் வருத்தத்துடன் தெரிந்து கொள்ள முடிந்தது. அவர்களின் 4 புனித நூல்களில் மூன்றும் நான்காம் நூலின் சில பக்கங்கள் மட்டுமே கிடைத்துள்ளது. இந்திய நாகரிகத்தை அடுத்து மாயாக்களும் '0' பூச்சியத்தை கணக்கு வழக்குகளில் பயன்படுத்தி இருக்கிறார்கள். இவர்கள் 0 முதல் 20 வரையிலான எண் வகைகளை அமல்படுத்தியிருக்கிறார்கள். கல் வெட்டுகளில் இவர்கள் லட்சம் வரையில் கணக்கு வழக்குகளை எழுதிப் பார்த்திருக்கிறார்கள். அவை பெரும்பாலும் வான் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிரகங்களின் அசைவுகளும், வான் நிகழ்வுகளும் துல்லியமாகக் கணிக்கப்பட்டுள்ளன.

சுவாரசியமான ஒரு நாவலில் கடைசிப் பக்கம் இல்லாமல் போனால் எப்படி இருக்கும். அப்படித்தான் இருக்கிறது மாயாக்களின் வரலாறும். மேலும் ஆராய்ச்சிகள் நடந்த வண்ணம் உள்ளன.
தொடரும்…

# சும்மா இருக்கும் சுகம்

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்நாளில் ஆடிடும் ஆட்டங்கள் ஆனந்தம். கிரிக்கெட் விளையாட்டில் எல்லைக்கு அப்பால் பந்தை அடிப்பதைப் போன்றும் விக்கெட் இழப்பதைப் போன்றும் ஆட்டங்கள் அமைந்து விடுகின்றன. வெற்றியும், தோல்வியும் வாழ்வில் மாறி, மாறி ஏற்படுகின்றன. இளம் வயதில் எண்ணற்ற செயல்களை இஷ்டம் போல் செய்யும் மனிதன் இறுதியில் முதுமையில் அடங்கி ஒடுங்கி அமைதியாகி விடுகின்றான். இதனைத்தான் ஆடி, அடங்கும் வாழ்க்கையடா என்றார் கவிஞர் கண்ணதாசன். இளமைத் துடிப்பும், எண்ணத்தின் வேகமும் இருக்கும்போது எதனையும் அலசி ஆராயாமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என நடந்து விடுகின்றான். இதனால் அவலங்களும் அரச தண்டனைகளும் ஏற்பட்டு விடுகின்றன. வாலிப வயதில் ஜாலியாக நடந்து சோலிகளில் மாட்டி கேலிக்குள்ளாபவர்களும் உண்டு. இளம் வயதில் மனத்தளம்பலின்றி நடந்து மற்றவரது உள்ளங்களில் தடம் பதித்தவர் களும் உண்டு. சுவாமி விவேகானந்தரை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

மனம் ஒரு குரங்கு. கொம்பர் விட்டு கொம்பர் தாவும் தன்மையது. எனவேதான் பேயாய் உழலும் சிறுமனது எனக்கூறப்பட்டது போலும். எனவே அதனை அடக்குவது சுலபமானதன்று. ஐம்புலன்களால் அவதியுறும் மனிதன் மனதை சாந்தப்படுத்தி, அடக்கி கட்டுப்படுத்தி சும்மா இருக்கின்ற நிலையை எய்த முடியும். சித்தர்களால்தான் இது முடியும் என்பதல்ல. நீண்ட நாட்களாக ஏன் வருடங்களாக ஊன் உறக்கமின்றி சமாதி நிலையில் இருந்து சாதனை புரிந்தவர்கள் அவர்கள் குடும்பத்தர்கள் கூட மனதை அடக்கி சாதனை புரிந்துள்ளார்கள்.



அவர்கள் இல்லற ஞானிகள். தன்னை உணரும் விருப்பதிற்கு குடும்ப வாழ்க்கை, பொருள் தேடல், உறவுகள் இவையெல்லாம் தடைகள் அல்ல. மௌனம் மகத்தானது. இதனாற்றான் மேலும் ‘யாகவராயினும் நா காக்க’ என்று ஆணையிட்டுள்ளார் வள்ளுவர். இருந்தும் நாவைக் காப்பது என்பது அவ்வளவு சுலப-மானதன்று. அதனை அடக்காததினால் ஏற்படும் அனர்த்தங்கள் அதிகமாகும். எமது உடல் உறுப்புக்களில் வாய்தான் இரண்டு வேலைகளை செய்கின்றது. வாய் என்பதற்கு வழி என்றும் பொருள் கொள்ளலாம். ஒன்று உண்பது மற்றது பேசுவது. பேசும் தன்மையற்ற விலங்குகளை வாயில்லாத சீவன்கள் என்கிறோம். இதன் மூலம் வாயின் மகத்துவம் விளங்குகின்றது என்றோ! அவை அறிந்து பேசுதல் கேட்போர் பிணிக்கப் பேசுதல், இனிமையாகப் பேசுதல் நல்லது. கனி இருக்க காய்கவர்தல், இன்னாத பேச்சு. வாய்ச் சொல்லில் வீரர்களாக அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். இருந்தும் பேச்சால் சாதிக்க முடியாதவற்றை மௌனத்தால் சாதித்துவிடலாம். எமது உடல், உறுப்புக்களினால் உறும் உபாதைகளை உணர்த்தும் பட்டணத்தார் பாட்டு இது.

கை ஒன்று செய்ய விழி ஒன்று
நாடக் கருத்தொன்றெண்ணப்
பொய் ஒன்று வஞ்சக நா ஒன்று
பேசப் புலால் கமழும்
மெய் ஒன்று சாரச் செவி ஒன்று
கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசை எவ்வாறு கொள்
வாய் வினை தீர்ந்தவனே
இந்நிலையில் சும்மா இருப்பது
சாத்தியப்பட்டுவருமா?

முடியாது, முடியாது என்பதே தாயுமானவர் கூற்று.

*கந்துக மதகரியை வசமாக நடத்தலாம்*
*கரடி வெம்புலியை*
*கட்டலாம் ஒரு சிங்க முதுகின் மேற் கொள்ளலாம்*
*கட் செவி எடுத்தாட்டலாம்*
*வெந்தழலின் இரதம் வைத்தைந்து லோகத்தையும்*
*வேதித்து விற்றுண்ணலாம்*
*வேறொருவர் காணாமல் உலகத்துவலாம்*
*விண்ணவரை ஏவல் கொளலாம்*
*சந்ததமும் இளமையோடிருக்கலாம் மற்றொரு*
*சரீரத்தினும் புகலாம்*
*சலமேல் நடக்கலாம் கனல்மேல் இருக்கலாம்*
*தன்னிகரில் சித்தி பெறலாம்*
*சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற*
*திறமரிது சத்தாதி யெண்.*
*சித்தம் இசை குடிகொண்ட அறிவான தெய்வமே*
*தேசோ மயானந்தமே*
*சும்மா இருப்பதன் பொருள் அறிந்திலனே.*

இது அருணகிரியாரின் அங்கலாய்ப்பு.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்றும் அறிந்திலனே.

கோழி ஒரு முட்டையை இட்டு விட்டு கொக்கரிக்கின்றது. ஆனால் ஆமை ஆயிரம் முட்டைகளை இட்டுவிட்டு அசைவின்றி இருக்கின்றது. சிந்தையை அடக்கு என்பதே அது நமக்கு கற்று தரும் பாடமாகும்.



நா. க. சிவராமலிங்கம்

# கும்மியில் ஒரு குமுறல்



கும்மியடி பிள்ளாய் கும்மியடி எங்கள்
குலக்கதை கேட்டுநீ குமுறியடி
ஆண்ட பரம்பரை அலைந்திடும் கதைகேட்டு
நீண்டு நிமிர்ந்திடக் கும்மியடி!
அந்நியன் மண்ணிலே அகதி பிள்ளாய்நாங்கள்
இந்நிலை கொண்டதேன் எண்ணுபிள்ளாய்!
தாய்மொழி எமக்குத் தமிழேபிள்ளாய் அதைத்
தாரக மந்திரமாக்கு பிள்ளாய்!
தந்தைதாய் சொல்லினைத் தட்டிடாதே எங்கள்
சொந்தமண் ஈழந்தான் சோர்ந்திடாதே!
அறுகோடித் தமிழினம் அவனிவாழ எமக்(கு)
அசிங்கமன்றோ இந்த அகதிவாழ்வு?

காக்கை வன்னியனின் காலந்தொட்டே எங்கள்
போக்கை மாற்றாமையால் புளுங்குகிறோம்
கல்தோன்றி மண்தோன்றா காலம்முன்னே பூத்த
வில்கொண்ட வீரர் தமிழரடி!

ஈழமண்ணே எமக் கின்பமடி அதை
ஆள நினைத்திடு அனுதினமும்?
வாழ்ந்திடும் மண்ணையும் வளப்படுத்து உந்தன்
வாழ்நாளில் தமிழையும் வளர்த்துவிடு!

வந்தமண் சொந்தமாய் வாழ்ந்திடாதே உந்தன்
சொந்தமண் சொத்ததை மறந்திடாதே!
கற்றவர் அவைதனில் கனத்திடடி எங்கள்
கன்னித் தமிழீழம் மீட்டிடடி!

- ஆக்கம் அருட்கவி ஞானகணேசன்
arudkavi@gmail.com

Ontario Vegetarian Food Bank
Employment Training & Skills Resource Centre
Certified Food Handlers
Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.

Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify
CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357
Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011
HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

# 2011 ஒஸ்கார்

31ஆம் பக்கத்தொடர்ச்சி

வீட்டு பின் முற்றத்தை புனரமைக்குமாறு கேட்கின்றார். இதன் தொடர்ச்சி யூலியசுக்கும் போலுக்கும் உறவு ஏற்படுகின்றது. இதனை அறிந்த நிக்கி யூலியசுடன் சண்டை பிடிக்கின்றார். பின்னர் இருவரும் இணைகின்றனர். இப் படத்தைப் பார்த்த பொழுது Shelter Me என்ற இத்தாலிய படத்தின் நினைவு வந்தது. Annette Bening சிறந்த நடிகைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

## The King's Speech

பிரித்தானிய அரசர் ஜோர்ஜ் V இறப்பின் பின் அவரது மகன் ஜோர்ஜ் VI ஆக முடிசூடப்படுகின்றார். ஆனால் இவரது பேச்சுவன்மையில் சில குறைபாடுகள் உள்ளன. இவரால் நன்றாக பேச முடியாது. எலிசபத் இவருக்கு ஒரு வைத்தியரை ஏற்பாடு செய்கின்றார். அதன் பின்னர் இவர் வானொலியில் உரையாற்றுகின்றார். இது பிரித்தானியாவில் பெரும் மாற்றத்துக்கு காரணமாகவுள்ளது. உண்மைச் சம்பவங்களை மையமாகக் கொண்டது இப் படம். Colin Firth – சிறந்த நடிகர், Geoffrey Rush – சிறந்த நடிகை, Helena Bonham Carter – சிறந்த துணை நடிகை, Danny Cohen – ஒளிப்பதிவாளர், Tom Hooper – சிறந்த இயக்குனர் Tariq Anwar – சிறந்த எடிட்டர், Alexandre Desplat - இசையமைப்பாளர், Sound Mixing David Seidler – திரைக் கதை போன்ற விருதுகளுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## The Social Network



Facebook பிறந்த கதை. காதல் தோல்வியில் குடி போதையில் உருவாக்கப்பட்ட புரோகிராம் இன்று வளர்ந்து மிகப் பெரிய விருட்சமாக மாறிவிட்டது. ஹவார்ட் பல்கலைக் கழகத்திலேயே இதன் ஆரம்பம் நிகழ்ந்தது. இதன் பின்னணியே இப்படம். இதே ஹவாட் பல்கலைக் கழக முன்னாள் மாணவன் பில் கேட்ஸ். Jesse Eisenberg – சிறந்த நடிகர், Jeff Cronenweth – ஒளிப்பதிவாளர், David Fincher – சிறந்த இயக்குனர், Angus Wall and Kirk Baxter – சிறந்த எடிட்டிங், Sound Mixing, Aaron Sorkin – சிறந்த திரைக்கதை ஆகிய விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## Toy Story 3

3D computer-animated film. அன்டி இப்பொழுது கல்லூரிக்குச் செல்ல வேண்டும். அன்டிக்கு தனது பிள்ளை பராயத்து விளையாட்டு பொருட்களை விட்டு விட மனமில்லை. தாயின் வற்புறுத்தலில் ஒரு




சிலவற்றை தன்னுடன் எடுத்துச் செல்கின்றான். மிகுதி சில சேமிப்பறைக்குச் செல்ல வேண்டும். மிச்சமிருப்பவை எறியப்பட வேண்டும். தாயின் தவறுதலால் சில மாறுபட்டு வீதிக்குச் சென்று விட்டன. பின்னர் அவை ஒரு சனிசைட் குழந்தைகள் காப்பகத்தை சென்றடைகின்றன. அதன் பின்னர் அவற்றிக்கு என்ன நடைபெறுகின்றன என்பதே மிகுதிக் கதை. Animated Feature Film, Sound Editing, சிறந்த திரைக்கதை என்பனவற்றிக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது

## True Grit



தனது தந்தையின் கொலை செய்த சென- ியை கண்டுபிடிக்க முன்னாள் இராணுவ அதிகாரியை அணுகின்றாள் 14 வயது மாட்டி ரோஸ். இவர்களுடன் ரெக்சாஸ் ரேஜ்ஜர்ஸ் LaBoeuf இணைகின்றார். தேடும் படலம் இறுதியில் செவ்விந்தயரின் வாழ்விடத்தில் செனியை கண்டுபிடிப்பதுடன் முடிகின்றது. Jeff Bridges - சிறந்த நடிகர் Hailee Steinfeld – சிறந்த துணை நடிகை, கலை, Roger Deakins - ஒளிப்பதிவாளர் Costume Design, Joel Coen and Ethan Coen – சிறந்த இயக்குனர்கள், Sound Editing, Sound Mixing, சிறந்த திரைக் கதை என்பனவற்றிக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

## Winter's Bone

தந்தையை காணவில்லை, தாய் மனவிரக்தியால் அவதிப்படுகின்றார். தந்தை வராவிட்டால் வீடு ஒரு வாரத்தில் ஏலத்திற்கு வந்து விடும். தனது தம்பிக்கும், தங்கைக்கும் உணவு கொடுக்க வேண்டும். Ozark Mountain ஐச் சேர்ந்த 17 வயது மகள் பல இடங்களில் தேடுகின்றாள். தந்தைக்கு போதை மருந்து வியாபாரங்களுடன் தொடர்பு இருப்பது மகளுக்குத் தெரியும். தந்தையின் தம்பியும், தந்தை இறந்திருக்கலாம் என்கின்றார். தேடல் தொடர்கின்றது. இப்படம் இதுவரை 20க்கும் மேற்பட்ட விருதுகளை பல உலக திரைப்பட விழாக்களில் பெற்றுள்ளது. John Hawkes – சிறந்த துணை நடிகர், Jennifer Lawrence - சிறந்த நடிகை, சிறந்த திரைக்கதை போன்றவற்றிக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## 127 Hours

Aron Ralston ஒரு மலையேறி. பல மலை-களை அனாயசமாக ஏறுவார். இம்முறை இவர் ஒரு குறுகிய மலைச் சந்தில் ஏறிக் கொண்டிருந்த பொழுது ஒரு பாறை உருண்டு விழுகின்றது. விழுந்த பாறை இவரது ஒரு கையை ஒரு மலை மேல் இறுக்கி விட்டது. கையை எப்படி எடுப்பது? உதவிகள் பெற முடியாத இடம். 127 மணித்தியாலங்களின் பின்னர் தன்னிடமிருந்த கத்தியால் கையை வெட்டி தானே தனது உடம்பை விடுவிக்கின்றார். ஸ்லம்டோக் மில்லியனிர் இயக்குனர் Danny Boyle இன் படம். இசை ஏ.ஆர். ரகுமான். ரகுமான் இரு விருதுகளுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளார். Music (Original Score). Music (Original Song)( "If I Rise" from "127 Hours" Music by A.R. Rahman Lyric by Dido and Rollo Armstrong) என்பவையே அவை. இவற்றை விட James Franco - சிறந்த நடிகர், Jon Harris- Editing, சிறந்த திரைக் கதை போன்றவற்றிக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.



# மந்திரப்புன்னகை...

22ஆம் பக்கத்தொடர்ச்சி



திருமணத்துக்குப் புறம்பான பாலியல் உறவை பல்வேறு காரணங்களால் நியாயப்படுத்தி, தமது வாழ்க்கை துணையை ஏற்க வேண்டுவார்கள் அல்லது பயமுறுத்துவார்கள். இந்த பிரச்சினைகளைத் தீர்க்க வாழ்க்கைத் துணைக்கு சிறிது காலம் பிடிக்கும். அதை தர வேண்டும். அதே நேரத்தில் இந்த உறவை நீடிக்கவும் அனுமதிக்கக்கூடாது.

இந்த உறவுக்கான காரணம் என்னவென்று கண்டுபிடிக்க வாழ்க்கை துணையோடு அதைக் குறித்து விவாதிக்க வேண்டும். காரணத்தை அறிந்துகொள்ளும் போது வாழ்க்கை துணையிடம் அனுசரணையாக நடந்து கொள்வதுக்கும், தனது நடை முறையை மாற்றிக் கொள்ளவும் அவனுக்கோ, அவளுக்கோ உதவியாகவும் இருக்கும்.

தனது பெற்றோரின் இத்தகைய திருமணத்துக்குப் புறம்பான பாலியல் உறவால் பாதிக்கப்பட்ட சிறுவனாகவோ அல்லது வாலிபனாகவோ இருப்பவருக்கு இந்த மன அதிர்ச்சியிலிருந்து வெளிவரும் விவகாரத்தை கையாள்வது பெரும் பாரமாக இருக்கலாம். இவர்கள், பெற்றோரிடம் தனது மனநிலையைப் பகிர்ந்து கொள்ளவேண்டும். உறவுக்கான காரணங்கள் என்னவென்று அறிய முடியாது என்பதால் இந்த சிக்கலை முழுமையாக இவரால் உணர இயலாது. எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்று மண்டையை உடைத்துக் கொள்ள தேவையில்லை. வாழ்க்கைக்கு தேவையான பொறுப்பை ஏற்பதற்கு பதிலாக பெற்றோர்களை பழித்துக் கொண்டிருப்பதால் எந்த விதத்திலும் அது ஒருவருக்கு உதவியாக இருக்காது. தனது நன்மைக்காகவாவது பெற்றோரை மன்னிக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த மன அதிர்ச்சியிலிருந்து மீளவே முடியாமல் ஆக்கிவிடும். மந்திரப் புன்னகை கதாநாயகன் போலவே. எனவே, குறைந்தபட்சம் தனது திருமணத்துக்கு முன்னாலாவது மன தளவில் இந்தப் பிரச்சினையில் இருந்து வெளியே வந்து தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

மந்திரப் புன்னகை, பார்க்க வேண்டிய திரைப்படம், மனத்தளவில் பாதிக்கப்பட்டவரின் உணர்ச்சிகளையும் படம்பிடித்து காட்டுவதால்!

ON THE SPOT
HOME INSPECTIONS INC.
Danny Sripath, B.Sc.
Qualified Home Inspector
Mold Specialist
416.823.3552 / 416.289.0033
onthespothome@yahoo.ca
880 Ellesmere Road, Unit# 203B
Toronto, ON, M1P 2W6
InterNACHI
IAC2 CERTIFIED Mold CERTIFIED
CanNACHI

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES

